بسم الله الرحمن الرحيم

"

முஃமின்களே!
நீதியை, நிலை
நாட்டுவதற்காக
அல்லாஹ்வுக்கு நீங்கள்
உறுதியான சாட்சியாக
இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார்
மீதும், நீங்கள் கொண்டுள்ள
வெறுப்பு நீதி செய்யாமலிருக்க
உங்களைத் தூண்ட வேண்டாம்.
நீதி செய்யுங்கள், இதுவே
பயபக்திக்கு மிக
நெருக்கமாகும்.
அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் ;
நிச்சயமாக அல்லாஹ் நீங்கள்
செய்பவற்றையெல்லாம் (நன்கு)
அறிந்தவனாக இருக்கின்றான்
(அல்குர்ஆன் - 5:8)

"


◆ இந்திய விடுதலைப் போரில் இந்துக்களும் முஸ்லிம்களும் - 6
◆ 16 வருடங்களுக்குப் பிறகு விடுதலை - 13
◆ மீண்டும் வந்தே மாதிரம் - 14
◆ வந்தே மாதரமும் தேசபக்தி வெங்காயமும் - 19
◆ குடியரசுத் தலைவர்கள் - 22
◆ மாபெரும் கொலை பாதகனுக்கு மாபெரும் கருணை - 29
◆ நீட் தேர்வு... - 30
◆ எது முதலில் - 32
◆ சமூக நலனில் பெண்கள் - 36
◆ கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய் - 40
◆ மோடி அரசால் முற்றுகையிடப்படுகின்றனவா ஊடகங்கள் - 43
◆ கவிக்கோ நினைவுகள் - 48
◆ உண்மையை சொல்லாதே - நீதி மன்றம் ! - 52
◆ ஜி.எஸ்.டி. எனும் மறைமுகப் போர் - 55
◆ பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி - 58
◆ முஸ்லிம் உலகில் நடந்து கொண்டிருப்பது என்ன? - 60
◆ திருமுருகன் காந்தி குண்டர் சட்டத்தில் கைது! - 63



ஆகஸ்ட் - 2017

# வைகறை வெளிச்சம்

துல்கஅதா - 1438

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

# வேண்டும் இங்கிதம்!

முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் அவர்களுக்கு நினைவிடம். அவர் பிறந்த இடமான இராமேஸ்வரத்தில். இல்லாத, பொல்லாத ஆர்ப்பரிப்புகளோடு, அதனை திறந்து வைக்க நரேந்திர மோடி 27-07-2017 அன்று வந்தார்.

நினைவிடத்தில் காவியை வாரி பூசி இருந்தார்கள். இதுபோன்ற பாசிச பயங்கர வாத சிந்தனை இவர்களுக்குப் புதியதல்ல.

அப்துல்கலாம் எல்லோருக்கும் பொது வானவர். அதனால்தான் 89 விழுக்காடுகள் ஓட்டுக்களை வாங்கி குடியரசு தலைவ ரானார்.

எல்லோருக்கும் பொதுவானவர் என்றாலும், தான் ஒரு முஸ்லிம் என்பதை உணர்ந்து தனிப்பட்ட முறையில் அவர் ஒரு நல்ல முஸ்லிமாக வாழ்ந்தார். அதனால் சிலை வைப்பதை வெறுத்தார். அவருக்கு நினைவிடம் என்ற பெயரில் காவியைப் பூசினார்கள். பகவத் கீதையையும் வைத்தார்கள்.

இப்படிச் செய்வதன் மூலம் அவர் காவி சிந்தனை உடையவர் என எதிர்காலத் தலைமுறையினர் நினைத்துக் கொள்வார் களாம்.

எவ்வளவு மலிவான சிந்தனைகளை மனதிலே சுமந்து நிற்கின்றார்கள். இந்த நாட்டை ஆளுகின்றவர்கள்.

இங்கிதம் என்பது இவர்களிடம் இல்லாத ஒன்று. வரலாற்றில் எத்தனையோ ஆட்சியாளர்களைச் சந்தித்திருக்கின்றோம்.

கொடுங்கோலர்களும் ஆட்சி செய்திருக் கின்றார்கள். நேர்மையும், நாணயமும், நீதியும் நிலைத்த ஆட்சியாளர்களையும் வரலாற்றில் சந்தித்திருக்கின்றோம்.

சில நேரங்களில் சில கொள்கைக்குச் சொந்தக்காரர்கள் ஆட்சியிலே அமர்ந்திருக் கின்றார்கள். அவர்கள் அந்த கொள்கையைச் சார்ந்தவர்களைப் பாராட்டி இருப்பார்கள், போற்றி இருப்பார்கள். ஆனால் யாரும் இன்னொரு கொள்கைக்குச் சொந்தக்காரர் கள் மீது மத நம்பிக்கை உயைடவர்கள் மீது தங்கள் கொள்கை சாயத்தை குழப்பி அடித்தக் கதையை நாம் கேட்டதில்லை, படித்ததில்லை இவர்களின் கொச்சையான வரலாற்றைத் தவிர.

ஆனால் வரலாற்றின் ஒரே ஒரு கட்டத்தில் தான் ஆட்சியாளர்கள் எல்லா நிலையிலும் நடுவு நிலையோடும், நீதியோடும் ஆட்சி செலுத்தி இருக்கின்றார்கள். தாங்கள் சார்ந்த கொள்கைகளைக் கொண்டவர்களுக்கு ஒரு நீதி தாங்கள் சார்ந்த கொள்கை அல்லாத கொள்கையைக் கொண்டவர்களுக்கு ஒரு நீதி என பாரபட்சம் பார்க்கவில்லை.

மாறாக தங்கள் கொள்கைக்கு எதிரான கொள்கையைக் கொண்டவர்களிடம் பெருந் தன்மையோடு நடந்து கொண்டார்கள்.

இஸ்லாத்தின் தொடக்க நாள் தொட்டே இறுதி தூதர் முஹம்மத் (ஸ்ல) அவர்களுக்கு எல்லா வகை கஷ்டங்களையும், நஷ்டங் களையும் தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டி ருந்தவர்கள், மக்காவில் வாழ்ந்த குறை ஷிகள்.

சமூக புறக்கணிப்பு முதல்-கொலை முயற்சிகள் வரை விடாமல் தொடர்ந்தன. அவர்கள் பூர்வீக பூமியை விட்டு யத்ரிப் என்ற மதீனா மாநகருக்கு இடம் பெயர்ந்து வந்திட வேண்டியதாயிற்று.

இறைவனின் இறுதித் தூதர் (ஸல்) அவர்களைமட்டுமல்ல, அவர்களோடு அவர்களின் கொள்கையை ஏற்றுக்கொண்டவர்களையும், அதேபோல் அல்லல்களுக்கு ஆட்படுத்தினார்கள். அவர்களும் தங்கள் சொந்தங்கள், பந்தங்கள், சொத்துக்கள் அனைத்தையும் துறந்துவிட்டு, இடம் பெயர்ந்திட வேண்டிய நிலை.

மதினா வந்த முஸ்லிம்களையும் அவர்கள் விட்டு விட வில்லை. ஒட்டுமொத்தமாக அவர்களை அழித்துவிட பலமுறை படை திரட்டி வந்தார்கள்.

“உஹுத்” போர் என்ற போரில் முஹம்மத் (ஸல்) அவர்களையே காயப்படுத்தினார்கள். முஹம்மத் (ஸல்) அவர்கள் இறந்து விட்டார்கள் என்ற செய்தியைச் செவி மடுத்தப் பின்னரே அவர்கள் திரும்பிச் சென்றார்கள்.

இப்படி வன்மத்தை வளர்த்து வாளெடுத்துப் பொருதியவர்கள் மக்கா வாசிகள் ஒரு கட்டத்தில் வெற்றிகொள்ளப்பட்டார்கள். வென்ற நிலையில், வெற்றி வீரராய் நின்றிருந்த பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மக்களை என்ன வேண்டுமானாலும் செய்திருக்கலாம்.

ஆனால் பெருந்தன்மையின் பிறப்பிடம், மனித இனத்தின் அருள்கொடை அஹ்மத் நபி (ஸல்) அவர்கள், உயிருக்குப் பயந்து பதறி பீதிவயப்பட்டு நின்ற அந்த மக்களிடம் இப்படிக் கேட்டார்கள்.

“குறைஷி மக்களே நான் என்ன செய்யப் போகிறேன் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

அந்த மக்கள்...

“நிச்சயமாக நாங்கள் உங்களிடமிருந்து மிகவும் நல்லதொரு தீர்ப்பையே எதிர்பார்க்கின்றோம். நீங்கள் கண்ணியமிக்கவர்கள், கண்ணியமிக்க ஒருவரின் சகோதரர்” எனப் பதில் தந்தார்கள்.

இதைச் செவிமடுத்தப் பெருமானார் (ஸல்) அவர்கள், இன்று யார் மீதும் எந்த எதிர் நடவடிக்கையும் இல்லாதிருக்கட்டும். அல்லாஹ் உங்களை மன்னிக்கட்டும். கருணை காட்டுபவர்கள் எல்லோரையும் விட அல்லாஹ்வே அதிமாகக் கருணை காட்டுபவன். குற்றம் சாட்டப்படுவதிலிருந்தும், தண்டனைகளை வழங்குவதிலிருந்தும், விடுபட்டவர்களாக நீங்கள் இங்கே இருந்து செல்லலாம்”.

என்ன பெருந்தன்மை எதிரிகளிடம்! இந்த நிகழ்வால் வழி காட்டப்பெற்ற பிற்றை நாள் இஸ்லாமிய ஆட்சியாளர்கள் அனைவரும் இப்படியே நடந்து கொண்டார்கள். இந்த வரலாற்றின் வனப்பான பக்கங்களும், உலகிலுள்ள எல்லாக் கலைக் களஞ்சியங்களும் பதிவு செய்துள்ளன.

இந்தியாவை ஆளுபவர்கள் வரலாற்றின் இந்தப் பக்கங்களை படித்து பாடம் பெற்றாலன்றி அவர்களிடம் பண்பான, பாங்கான நடவடிக்கைகளை எதிர்பார்த்திட இயலாது.

அந்தப் பக்கங்கள் அவர்களின் பார்வையில் பட முயற்சிகளை மேற்கொள்வோம்.

இறைவன் கூறுகின்றான் :

**“ நபியே நிச்சயமாக நாம் உம்மை (மனிதர்களுக்கு)ச் சாட்சியாகவும், நன்மாராயங் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பி வைத்திருக்கின்றோம். அன்றி அல்லாஹ்வின் அனுமதியின்படி (மக்களை) அவன்பால் அழைப்பவராகவும், ஒளி வீசும் விளக்காகவும் (இருக்கின்றீர்) ”**

**(அல்குர்ஆன் 33:45,46)**



# இந்திய விடுதலைப் போரில்

## என்றும் நம் நினைவில்

**1857-களில் அடர்ந்து வந்தன ஆங்கில படைகள் இந்தியாவைக் காவுகொள்ள. அதே வேகத்தில் அவர்களை எதிர்கொள்ள எழுந்தார்கள் முஸ்லிம்களும் இந்துக்களும்.**

மே திங்கள் 1857-இல் தான் தொடங்கியது இந்தியாவின் முதல் விடுதலைப் போர்.

இந்துக்களும் முஸ்லிம்களும் அப்போது காட்டிய ஒற்றுமையை இனி எப்போதாவது இந்தியா சந்திக்க வேண்டும் என்றால் இப்போதைய பாசிசம் வேரோடும் வேரடி மண்ணோடும் கெல்லி எறியப்பட வேண்டும்.

இந்திய வரலாற்றாசிரியர்களால் முதல் சுதந்திரப் போர் என்றும், ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்தால் சிப்பாய் கலகம் என்றும் வர்ணிக்கப்படும் 1857 போர். நானா சாஹிப், பகதூர்ஷா ஜாஃபர், மௌலவி அஹ்மது ஷா, தாந்திய தோப், கான் பகலூர் கான், ராணி லெட்சுமி பாய், பேகம் ஹஸரத் மகால், அசீமுல்லாஹ் கான், பெரோஷ்ஷா போன்றவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டதே!

இதில் எல்லா மதத்தவர்களும் ஒன்றுபோல் தங்கள் உயிரையும், உடைமைகளையும் தந்தார்கள். அந்த விடுதலைப் போரில் மௌலவிகளும், பண்டிட்களும் (கஷ்மீர் பிராமணர்களுக்கு இன்னொரு பெயர்) ஜமீந்தார்களும், விவசாயிகளும், வியாபாரிகளும், வழக்கறிஞர்களும், பணியாட்களும் பட்டதாரிகளும், பாமரப் பெண்களும், மாணவர்களும், இளைஞர்களும் ஜாதி, மதம், நிலம், நிறம் இவற்றையெல்லாம் பற்றி எள் மூக்கின் அளவுகூட கவலைப்படாமல் பொங்கி எழுந்தார்கள். ஒன்றாய் ஒரே அணியில் நின்றார்கள்.

ஆங்கிலேயர்களை ஆட்டங்காண வைத்தார்கள். மே, 11,1857-இல் ஷாபகதூர்ஷா ஜாஃபர். அவர்களை இந்தியாவின் ஏகபோக ஆட்சியாளர் என அறிவித்தார்கள். ஆனால் ஷாபதூர்ஷா ஜாஃபர் அவர்களின் படையில் இடம் பெற்றிருந்தவர்களில் 70 விழுக்காடுகள் இந்துக்கள்தாம். (இன்றைய சூழலில் இதனை எடுத்துக்காட்டிட வேண்டிய திருக்கின்றது, ஆனால் அன்றைக்கு அப்படி ஒரு நிலை இருக்கவில்லை.)

இந்த அறிவிப்பின் தளகர்த்தர்களாய் வீற்றிருந்தவர்கள், நானா சாஹிப், தாந்தியாதோப், லஷ்மிபாய் ஆகியோர் ஆவார்கள்.

அன்றைக்கிருந்த அன்பு கெழுமிய சகோதரத்துவ சூழலில் யார் தலைமை தாங்குகின்றார்கள்? யார் வழி நடத்துகின்றார்கள்? என்பதைப் பற்றியெல்லாம் அந்தப் போர் வீரர்கள் கவலைப்படவில்லை. அங்கு கவலையும், கருத்தும் யார் எவ்வளவு தியாகம் செய்வது என்பதும், யார், யார் எவ்வளவு வெள்ளைப் படைகளைக் காவு கொள்வது என்பதும்தான்.

பிரித்துக் காட்டுகின்றனர்.

ஆனால் அன்று இந்த அயோத்தியாதான் இந்து முஸ்லிம் ஒற்றுமையின் ஒப்பற்ற சாட்சியாக விளங்கிற்று.

இங்கேதான் மௌலவிகளும், மகந்த்கள் என்ற கோயில் பூஜாரிகளும் – நிருவாகிகளும் ஒன்றாய் நின்று ஆங்கிலேயர்களை எதிர்த்தார்கள்.

இந்த மௌலவிகளுக்கும், மகந்த்களுக்கும் பின்னால்தான் பாமர முஸ்லிம்களும், பாமர

# இந்துக்களும் முஸ்லிம்களும்







இந்த விடுதலை வேட்கையும், இந்து முஸ்லிம் ஒற்றுமையும், ஒரு பகுதியில் மட்டுமோ, ஒரு பிராந்தியத்தில் மட்டுமோ நிலைத்திருக்கவில்லை. நாடெல்லாம், பாரதமெல்லாம் பரவிக் கிடந்தன.

அதேபோல் இந்துக்களும் முஸ்லிம்களும் செய்த தியாகங்கள் ஒரு தளர்த்திலோ ஒரு களத்திலோ கட்டுண்டு கிடக்கவில்லை. மாறாக எல்லாத் தளத்திலும், எல்லாக் களத்திலும்விரிந்துவியாபித்து நின்றது. அப்படி எல்லா தளத்திலும் தழும்பி நின்ற தியாக வரலாற்றின் சிலவரிகை இங்கே தருகின்றோம்.

### அயோத்யா மௌலவி

*1)* இன்று அயோத்யாவில் வீற்றிருந்த பாபரி மஸ்ஜித்–ஐ கொண்டுதான் தேசத்திற்கு இரண்டகம் செய்வோர். இந்தியக் குடிமக்களை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும்

இந்துக்களும் அணி திரண்டார்கள். பொது எதிரியாம் ஆங்கிலேயர்களை வீழ்த்திட பிற்றை நாட்களில் ஆங்கிலேயர்களுக்கெதிராக ஆயுதம் ஏந்தி போராடினார்கள் என்பதற்காக மரண தண்டனை தந்தபோது பாமர முஸ்லிம்களும், பாரம இந்துக்களும் ஒன்று போலவே தூக்கிலே தொங்கினார்கள்.

பெரும்பாலான மரண தண்டனைகளில் இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒரே



Jhansi ki Rani Laxmi Bai



Begum Hazrat Mahal

தூக்கு மரத்தில் தான் தூக்கிலே போட்டார்கள்.

அன்றைய அயோத்யாவில் ஒப்பாரும் மிக்காருமில்லாத ஓர் மார்க்க அறிஞர். அவருடைய பெயர் மௌலானா அமீர் அலீ. இவரை மக்கள் அயோத்யா மௌலவி என்றே அழைப்பார்கள். இவர் ஆங்கிலேயர்களுக்கு எதிராக 'ஜிஹாத்' அறிவிக்கப்பட்டவுடன் (இந்த ஜிஹாதை லக்னோவில் அறிவித்தவர் மௌவ்லவி அஹ்மது ஷா அவர்கள்தாம் இஹாதிற்கு அதாவது ஆங்கிலேயர்களுக்கு எதிரான ஆயுதந்தாங்கிய போருக்குத் தயாரானார்கள் மக்கள்.

ஆனால் அங்கே – அயோத்யாவில் இந்தப் போருக்கு இந்த ஜிஹாதிற்கு ஆண் மக்களை அணி திரட்டிக் கொண்டிருந்தவர், அயோத்யாவின் கீர்த்திமிக்க ஹனுமான் கார்க்கி, கோயிலின் நிருவாகி, பாபா இராமச் சந்திரதாஸ் அவர்கள்தாம்.

அயோத்யா மௌலவி அமீர்அலீ அவர்கள், இந்த பாபா இராமச்சந்திர தாஸ் அவர்களின் அணியில் தன்னை இணைத்துக் கொண்டார்கள். அத்தோடு பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்களையும், தங்களோடு இந்த ஜிஹாதில், அதாவது ஆங்கிலேயர்களுக்கு எதிரான பெரும் போரில் தன்னோடு இணைத்துக் கொண்டார்கள்.

மோதினார்கள் ஆங்கிலேயே பெரும்படையுடன், அழிவுகளை ஏற்படுத்தினார்கள். இறுதியில் ஆங்கிலேயர்களின் சூழ்ச்சியும், பெரும்படையும், இவர்கள் இருவரையும் ஒன்று போலே ஒன்று சேர்த்து கைது செய்தது.

ஆங்கிலேயர்களுக்கு எதிராக மக்களை அணி சேர்த்ததற்காகவும், ஆங்கிலேயர்களுக்கு அதிகமான சேதங்களை உண்டாக்கியதற்காகவும், அயோத்திய மௌலவியும் பாபா இராமச் சந்திரதாஸ் அவர்களும் ஒன்று போலவே மரண தண்டனையைப் பெற்றார்கள். அயோத்தியாவிலுள்ள "குபர்டீலா" Kuber Teela என்ற இடத்திலுள்ள ஒரு புளிய மரத்தில் தூக்கிலிடப்பட்டார்கள். ஒரே நேரத்தில் ஒரே மரத்தில் இரண்டு பேருக்கும் தூக்கு!

## ஆச்சா கான் மற்றும் ஷாம்பு பிரசாத் சுக்லா

அதே அயோத்தியாவில் மேலும் இரண்டு நண்பர்கள் ஒருவர் ஆச்சா கான் என்ற முஸ்லிம், இன்னொருவர் ஷாம்பு பிரசாத் சுக்லா என்ற இந்து. இவர்கள் இரண்டு பேரும் ஆங்கிலேயர்களுக்கு எதிரான ஜிஹாதிற்கு, ஆயுதந்தாங்கிய போருக் குத் தயாரானார்கள்.

அந்நேரம் அயோத்தியா இடம்பெற்ற பைஜாபாத்–ஐ ஆட்சி செய்து கொண்டிருந்தவர் இராஜாதேவ். பக்த்சிங், இந்த ராஜா இந்த இரண்டு நண்பர்களும், அதாவது ஆச்சா கான் அவர்களும் ஷாம்பு பிரசாத் சுக்லாவும் காண்டிய வீரத்தாலும், விவேகத்தாலும் பெரிதும் கவரப்பட்டார். தனது படைகளை இந்த இரண்டு பேரின் ஆணையின் கீழ் ஒப்படைத்தார்.

இந்த இரண்டு இணை பிரியா நண்பர்களும் பரங்கிப் படைகளுடன் மோதினார்கள். பயங்கரமான இழப்புகளை அந்தப் பரங்கிப் படைகளுக்கு, (ஆங்கிலேயப் படைகளுக்கு) ஏற்படுத்தினார்கள். பரங்கிப்படைகளை வென்றே காட்டினார்கள்.

ஆங்கிலேயர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளால் ஆங்கிலேயர்கள் அரண்டு போய் நின்றார்கள். இந்தியாவின் இதரப்பகுதிகளில் ஆங்கிலேயர்களுடன் மோதியதில் சிலபல இடங்களைத் தவிர இதர இடங்களில் இந்திய விடுதலைப் போர் வீரர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் சொல்லிமாளாது.

ஆனால் அயோத்தியா நண்பர்கள் ஆச்சா கான், ஷாம்புபிரசாத் சுக்லா ஆகிய இருவரும் ஈட்டிய வெற்றி ஈடு இணையற்றது அன்றைய நாட்களில். ஆனால் அந்த வெற்றியை ஓராண்டுக்குள் தங்கள் சூழ்ச்சியால் பறித்துக் கொண்டார்கள் பரங்கியர்கள்.

ஒருமுறை தங்கள் சூழ்ச்சியால் வெற்றி கண்ட பரங்கியர்கள், இந்த இரண்டு நண்பர்களையும் தேடிப் பிடித்தார்கள். இரண்டு பேரையும் ஒன்றாக மக்கள் மன்றத்தில் நிறுத்தி சித்திரவதைச் செய்தார்கள். இரண்டு பேர்களின் தலையையும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் அனைவரின் பார்வையிலும் வைத்துக் கொய்தார்கள்.

போரில் மட்டும் நண்பர்களாக இருக்கவில்லை இந்த அயோத்தியா நண்பர்கள் மரணத்தையும் நண்பர்களாகவே சந்தித்தார்கள்.

இத்தனையும் நடந்தது அந்த அயோத்தியாவில் வைத்துதான். முஸ்லிம்களையும் இந்துக்களையும் ஒன்றாய்ப் பிணைத்து ஆங்கில ஏகாதிபத்தியத்தை திணற அடித்த அயோத்யாவை மையமாகக் கொண்டுதான் மகோன் மத்தார்கள் இன்று இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரிக்கும் ஈனச் செயலைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆங்கிலேயர்கள் புத்தியையும், வியூகத்தையும் இன்றளவும் பின்பற்றி வருகின்றார்கள்.

ஏனெனில் அன்று இந்துக்கள் முஸ்லிம்கள் இவர்கள் இணைந்து ஆங்கிலப் படைகளுக்கு ஏற்படுத்திய அழிவுகளுக்கு அளவில்லை. ஆகவே ஆங்கிலேயர்கள் இந்த இழப்புகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் அயோத்யாவில் இந்துக்களும் முஸ்லிம்களும் காட்டும் ஒற்றுமையையும் ஒருங்கிணைப்பையும், சிதைத்து சின்னா பின்னமாக்கிட வேண்டும் எனத் திட்டம் போட்டார்கள். அந்த திட்டத்தை மெல்ல, மெல்ல செயல்படுத்தினார்கள்.

*1857*–களில் ஆங்கிலேயர்கள் தங்கள் சந்திப்புக்களில் அதிகமாக விவாதிப்பது "Ayodhay unity - அயோத்யா ஒற்றுமை'' என்பதாகத்தான் இருந்துது. ஏனெனில் அயோத்யா ஒற்றுமையை குலைக்கவில்லை என்றால் ஆங்கிலேயர்களால் வாழ்ந்திட முடியாது என்ற நிலை. தங்களுடைய சூழ்ச்சியால் அந்த ஒற்றுமையைக் குலைத்து விட்டார்கள்.

அதை அப்படியே கவ்விப் பிடித்துக் கொண்டார்கள் பிற்றைநாள் தேசத் துரோகிகள். அதில் வெற்றியும் கண்டு விட்டார்கள். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. மஹந்த்களும், கியான்தாஸ்களும் அன்றுபோல் இன்றும் முஸ்லிம்களிடம் அன்பாய் இருக்கின்றார்கள். முடிந்தவரை இந்த பாசிஸ்ட்டுகளை எதிர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். (விளக்கம் பெற 2016 டிசம்பர் வைகறை வெளிச்சம் படியுங்கள்)

### முதல் விடுதலைப் போரின் இன்னொரு வரலாற்றுத் தடம்

அது இப்படி அமைகின்றது. கோட்டா KOTA STATE பேரரசு. இப்போது இது இராஜஸ்தானில் உள்ள ஒரு முக்கிய இடம். இதனை மகாராவ் "MAHA RAO" என்பவர் ஆட்சிச் செய்து கொண்டிருந்தார். இவர் ஆங்கிலேயர்களின் அடிவருடி.

''மகாராவ்'' –இன் அமைச்சர் அவையில் ஒரு சிறந்த அதிகாரி. அவர் பெயர் லாலா ஜெய் தயாள் பாட்னாகர். இவர் மிகவும் சிறந்த அறிஞர். பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். பாரசீக மொழி, உருது, ஆங்கிலம் ஆகியவற்றில் அதீத பாண்டியத்தியம்.

இந்தப் பன்மொழிப் புலமையில் பல மொழிகளிலும் வரும் நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். இவருக்கு கோட்டாவின் ஆட்சியாளர் ''மகாராவ்'' ஆங்கிலேயர்களின் அடிவருடியாக இருந்தது அறவே பிடிக்க



அவர்களும், லாலா ஜெய் தயாள் பாட்னாகர் அவர் களும் அங்கேயும் ஓர் துரோகி இருவரையும் காட்டிக் கொடுத்துவிட்டான்.

ஆங்கிலேயர்கள், இருவரையும் ஒன்றாய்க் கைது செய்து செப்டம்பர் 17, 1860—இல் இருவரையும் ஒரே நேரத்தில் தூக்கில் போட்டார்கள். இருவரையும் கோட்டாவில் வைத்துத்தான் தூக்கில் போட்டார்கள். இருவரும் ஒன்றாய்த்தான் வீர மரணத்தைத் தழுவினார்கள்.

வில்லை. ஆகவே மகாராவ் சேவையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் நாட்களை எண்ணி, எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்நிலையில அங்கே மெஹ்ராப்கான் என்ற படைத்தளபதி, ஆங்கிலேயர்களுக்கெதிரான (ஜிஹாதிற்கு) ஆயுதந்தாங்கிய பெரும் போருக்குத் தயாராகிக் கொண்டிருந்தார்.

இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள விரும்பினார் லாலா ஜெய்தயாள் பாட்னாகர். அரசவையிலிருந்து விடுவித்துக் கொண்டார். இந்தப் புரட்சிப் படையில் தன்னைப் பிணைத்துக் கொண்டார்.

ஆங்கிலேயப் படைகளை அசாதாரண மான ஆற்றலோடு எதிர்த்தார்கள். ஆங்கிலே யப் படைகள் மண்ணைக் கவ்வின. கூலிக்குச் சண்டை போட வந்தவர்கள் புறமுதுகிட்டு ஓடினார்கள். ஆனால் சுற்றியிருந்த சில இளவரசர்கள்காலைவாரிவிட்டுவிட்டார்கள். ஆங்கிலேயர்களுக்கு விலை போய் விட்டார் கள். இதனால் “கோட்டா” வீழ்ந்துவிட்டது. ஆனாலும் மெஹ்ராப்கான் அவர்களும், லாலா ஜெய்தயாள் பாட்னாகர் அவர்களும் மேற் கொண்ட போர்க் கோலத்தைக் கலைக்க வில்லை. 1857—இல் தொடங்கிய போரை தொடர்ந்து கொண்டே இருந்தார்க்ள. 1859 வரை இது தொடர்ந்தது.

ஒழிந்தும், மறைந்தும் வாழ்ந்தார்கள். போரைத் தொடர்ந்தார்கள். மெஹ்ராப் கான்

### ஜெய்ன் மதத்தவரை புதை...! முஸ்லிம்களை எரி... ஆங்கிலேயர்களின் உத்தி..!

ஹான்சி நகரம் இது இப்போது ஹரியானா மாநிலத்தில் இருக்கின்றது. இங்கே இரண்டு நண்பர்கள் ஒருவர் ஜெய்ன் மதத்தைச் சார்ந்தவர். பெயர் குக்கும் சந்த் ஜெயின், இன்னொருவர் முஸ்லிம் பெயர் முனீர்பேக்.

இவர்கள் இருவரும் “அறிவைத் தேடுவதில் வல்லவர்கள். இதனால் நெருங்கிய நண்பர்களாக ஆகிவிட்டார்கள். இவர்கள் இருவரும் தங்கள் எழுத்துக்களாலும் பேச்சுக் களாலும் அப்பகுதி மக்களை வெகுவாகக் கவர்ந்தவர்கள். கணித மேதைகள், இலக்கிய வட்டத்திலும் பெயர் பெற்றவர்கள். கணிதத் துறையில் பல ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டிருந்தவர்கள்.

மே—11, 1857—இல் ஷா பகதூர் ஷா அவர்களை புரட்சி அரசின் ஆட்சியாளர் என அறிவித்தவுடன், பகதூர் ஷா இந்த ஒரு மேதை களையும் தனது ஆலோசர்களாக நியமித்துக் கொண்டார்கள்.

ஆங்கிலேயர்களுக்கு எதிரான ஆயுதந்தாங் கிய போர் உச்சக் கட்டத்தை எட்டியபோது இவர்கள் இருவரையும் மேற்கு டெல்லியின் தளபதிகளாக நியமித்தார்கள் ஷா பகதூர்

ஜாஃபர் அவர்கள். இவர்கள் இருவரும் ஆங்கிலேயப் படைகளைப் படிப்படியாக வெற்றிக் கொண்டார்கள். ஆங்கிலேயர்கள் செய்வதறியாது திணறினார்கள்.

ஆங்கிலேயர்களின் பலவீணத்தைத் புரிந்துகொண்ட இவர்கள். பாசியாலாவை வெற்றி கொண்டார்கள். ஆங்கிலேயர்களின் ஆட்சியிலிருந்து அதை விடுவித்தார்கள். அடுத்து கபுர்தலாவை நோக்கி நகர்ந்தார்கள். அதனையும் விடுவித்தார்கள். தொடர்ந்து நாபா, கஷ்மீர் ஆகியவையும் விடுவிக்கப்பட்டன. புட்டப்படி என்ற இடமும் ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்து விடுவிக்கப்பட்டது.

ஆங்கிலேயர்கள் ஆயுதங்களால் வெல்ல முடியாத போதெல்லாம், சூழ்ச்சிகளையே நம்பி நின்றார்கள். சில குறுநில மன்னர்களை விலைக்கு வாங்கினார்கள். ஹூக்கும் சந்த் அவர்களையும், முனீர்பேக் அவர்களையும் கைது செய்தார்கள். யாரும் இனி தங்களை எதிர்க்கும் மன வலிமையைப் பெற்று விடக் கூடாது என்பதை அறிவித்திட அவர்களை பொதுமக்கள் முன்னாலேயே வைத்து சித்ர வதை செய்தார்கள். கொலை செய்தார்கள். அவர்களின் உடல்களை அவர்கள் கொண்டிருந்த மத நம்பிக்கைகளுக்கெதிராக புதைத்தார்கள், எரித்தார்கள்.

ஜெயின் மதத்தைச் சார்ந்தவர்கள் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய மாட்டார்கள், எரிப்பார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் அவருடைய உடலை அடக்கம் செய்தார்கள். இதனை ஹுக்கும் சந்தின் உறவினர். 13 வயதே நிரம்பிய ஒருவர் இதனை எதிர்த்தார். அவரையும் தூக்கிலே போட்டார்கள்.

அதபோல் முஸ்லிம்கள் இறந்தவர்களின் உடலை எரிக்க மாட்டார்கள். அடக்கம் செய்தார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் முனீர்பேக் அவர்களின் உடலை எரித்தார்கள்.

## மால்வாவின் இந்து முஸ்லிம் வீரர்கள்

"மால்வா நில பரப்பு" அப்போது இந்தியாவின் மத்திய பகுதி என அறியப்பட்ட பகுதியில் இருந்தது. இப்போது மத்திய பிரதேஷ் மாநிலத்திலிருக்கின்றது.

1857− கள் இந்தப் பகுதி ஆங்கிலேயர்களைக் கதிகலங்க வைத்தப் பகுதிகளில் ஒன்று. இந்தப் பகுதியில் ஆங்கிலேயர்களுக்கெதிராகப் படை நடத்திக் கொண்டிருந்த மாவீரர்கள், தாந்தியாதோப், ராவ் சாஹிப், இராணி லெட்சுமி பாய், பெரோஸ் ஷா, மௌலவி பாசில் ஹக்.

இந்த மௌலவி பாசல் ஹக் அவர்கள் நாடறிந்த ஒரு மார்க்க அறிஞர். ஆனால் அவர் இந்த அணியில் தன்னை இணைத்துக் கொண்டு தான் தலை சிறந்த போர்த் தளபதி என்பதை நிரூபித்தார்.

இந்த அணி அதாவது, தாந்தியாதோப், ராவ் சாஹிப், இராணி லெட்சுமிபாய், பெரோஸ் ஷா, ஆகியோர் 80,000 (எண்பதாயிரம்) பேரைக் கொண்ட ஒரு பெரும்படையைத் திரட்டினார்கள்.

இவ்வளவு பெரிய படையை திரட்டி விட்டார்கள் என்ற செய்தியே ஆங்கிலேயர்களைக் கதிகலங்கிட வைத்தது.

ஒரே முகமாக ஆங்கிலேயர்களைத் தாக்கினார்கள். ஆங்கிலேயர்கள், தினமும் பல்லாயிரக் கணக்கானோரை பணம் தந்து தங்களது பட்டாளத்தில் சேர்த்துக் கொண்டே இருந்தார்கள். ஆனாலும் தங்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்திட இயலவில்லை.

இந்த பெரும்படை ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்த பகுதிகளை ஒவ்வொன்றாக விடுவித்துள்ளது.

ஆங்கிலேயர்களுக்கு கப்பம் கட்டிக் கொண்டிருந்த பல இந்திய மன்னர்களையும், இந்திய இளவரசர்களையும், கப்பம் கட்டுவதிலிருந்து விடுவித்தார்கள்.

இந்தப் படை 1857− ஐ கடந்து 1858 களிலும் வெற்றிகளைஈட்டியது. ஆங்கிலேயர்கள்சுமார் ஓராண்டு இந்தப் பெரும்படை ஏற்படுத்திய இழப்புகளைத் தாங்கிட வேண்டியதிருந்தது. தங்கள் ஆட்சியின் கீழிருந்த இடங்கள் ஒவ்

வொன்றாக விடை பெற்றுக் கொண்டிருந்தன.

இறுதியில் 1858–இல் ''ரானடோன்'' என்ற இடத்தில் வைத்து டிசம்பர் 17 ஆம் தேதி ஒரு பெரும் போர் நடைபெற்றது. இதில் இந்தப் பெரும்படையை ஆங்கிலேயப் படைகள் சுற்றி வளைத்தது.

ஆனாலும் இந்தப் பெரும்படையை வெற்றி கொள்வதில் ஆங்கிலேயர்களுக்கு ஒரு பெரும் சிக்கல் இருந்தது. அது மௌலவி பாசில் ஹக்கின் அணி. இந்த அணி ஆங்கிலப் படைகளின் அனைத்து சூழ்ச்சிகளையும் வென்றது. எஃகால் வார்க்கப்பட்ட கோட்டை போல் நின்று விட்டார்கள். தங்களை ஆங்கிலேயர்களின் குரூரமான ஆயுதங்களுக்குத் தந்தார்களே அல்லாமல், ஆங்கிலேயர்களை முன்னேறிட விடவே இல்லை.

இதனால் தாந்தியாதோப் தன்னுடைய போரை தொடர்ந்து கொண்டே இருந்தார். அவருடைய படைகள் 1859 வரை ஆங்கிலேயர்களை பெரும், பெரும் தாக்குதல்களுக்கு உள்ளாக்கிக் கொண்டே இருந்தார்கள். இறுதியில் மௌலவி பைசல் ஹக் அவர்களின் தோழர்கள் 480 பேரும் வீர மரண மடைந்தார்கள்.

காரணம் நார்வார் பகுதியை ஆட்சி செய்த மான்சிங் என்ற குறுநில மன்னர் ஆட்காட்டி வேலையைச் செய்து விட்டான். இதனால் தாந்தியதோப், ராவ் சாஹிப், பெரோஸ்ஷா





ஆகியவர்களைக் காத்து நின்ற அரண் பைசல் ஹக் வீர மரண மடைந்தார்கள்.

எனினும் தாட்சிய தோப் அவர்கள் தொடர்ந் போராடிக் போராடிக் கொண்டிருந்தார்கள். தொடர்ந்து நடந்த கீழ் அறுப்பு வேலைகளால் தாந்தியாதோப் அவர்களை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். அவரை டிசம்பர் திங்கள் 18, ஆம் நாள் 1859 ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டார்கள்.

ஆனால் ராவ் சாஹிப் அவர்களும் நானா சாஹிப் இன் ஒன்றுவிட்ட சகோதரர் பாண்டுரங்க சதாசிவன் அவர்களும் இணைந்து இந்த விடுதலைப் போரை 1862 வரை தொடர்து சென்றார்கள்.

ஜம்மு பகுதியை ஆண்டு கெண்டிருப்பதை மராட்டிய ஆட்சியாளர்கள் காட்டிக் கொடுத்ததால் ஆட்சியாளர்கள் ராவ் சாஹிப்–ஐ ஆங்கிலேயர்கள் கைப்பற்றி காண்பூரில் வைத்துத் தூக்கிலே போடப்பட்டார்.

ஆனால் பெரோஷ் ஷா ஆங்கிலேயர்களை எதிர்த்து போர் செய்து கொண்டே இருந்தார். அவரைப் பிடிக்க இயலவில்லை. அவர் தப்பித்துச் சென்று மேற்கு ஆசிய நாடுகளிடம் படை உதவிகளையும், ஆயுத உதவிகளையும், இந்திய விடுதலைக்காகக் கேட்டார் கிடைக்கவில்லை. இறுதியில் மக்கா சென்றார். அங்கே 1887–இல் மரணித்தார்.

**எம்.ஜி.எம்.**



## 16 வருடங்களுக்கு பிறகு நிரபராதி என விடுவிக்கப்பட்ட காஷ்மீரி

குல்சார் அஹ்மது வாணி. காஷ்மீரை சார்ந்தவர். டெல்லி சிறப்பு காவல் படையினரால் சபர்மதி எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டு 16 வருடங்களுக்கு பிறகு விடுவிக்கப்பட்டுள்ளார்.

குல்சார் அஹ்மது அப்போது டெல்லிஅலிகார் பல்கலை கழகத்தில் ஆராய்ச்சி படிப்பை (பி.எச்.டி) படித்து கொண்டிருந் தார். 2001ல் நடந்த சபர்மதி எக்ஸ்பிரஸ் வழக்கில் சம்பந்தமே யில்லாமல் கைது செய்யப்பட்டார். 10 நாட்கள் சட்ட விரோதமாக அடைத்து வைக்கப்பட்டார்.

அவரிடமிருந்து ஆயுதங்கள்பறிமுதல் செய்யப்பட்டதாகவழக்கு ஜோடிக்கப்பட்டது.பிறகு பல்வேறுமாநிலங்களில் இதையேஆதாரமாகக் கொண்டு அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. மஹாராஷ்டிரா, உத்தரபிரதேசம் போன்ற மாநிலங்கள்இதில் அடக்கம்.

அவருடைய தந்தை ஓர் ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர். இவருக்காக நடந்த வழக்கில் அவர் தன்னுடைய அனைத்து சேமிப்பையும் செலவழித்து விட்டார். அவருடைய இரண்டு சகோதரிகளுக்கும் குல்சார் சிறையில் இருந்த காலத்தில் திருமணம் நடந்தேறிவிட்டது. அவருடைய பாட்டன், பாட்டி அனைவரும் அவர் சிறையில் இருந்தகாலத்தில் இறந்து போய்விட்டனர். 16 வருடங்களுக்கு பிறகு இப்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இனி இழப்பதற்கு ஒன்று மில்லை குல்சாரிடம்.

செய்திஆதாரம் : http://www.ndtv.com/india-news/arrested-for-crime-he-did-not-commit-sabarmati-express-train-blasts-accused-returns-home-1710581

## உத்தரபிரதேசத்தில் சிறுவர்கள் உயிருடன் புதைப்பு பி.ஜே.பி. எம்.எல்.ஏ. மகனின் வெறியாட்டம்

உத்தர பிரதேசத்தில் சட்டசபைஉறுப்பினர் சுபாஷ் திரிபாதி. இவர் ஒரு சுரங்க ஒப்பந்ததாரர். மாவட்ட நிர்வாகம் இதனை விசாரிக்க மூன்று நபர்கள் கொண்ட கமிட்டியை அமைத்துள்ளது.

கரண் வயது 10 மற்றும் நிசார் வயது 11 இவர்கள் இருவரும் ஒரு கால்வாயில் சடல மாக கண்டெடுக்கப்பட்டனர். கரணின் தந்தை சேத்ராம் ஒரு தலித். இவர் நிஷாங்க் திரிபாதி யும் சுரங்க ஒப்பந்ததாரர் மனோஜ் சுக்லா வும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தோண்டுவதற்கு பதிலாக தன்னுடைய நிலத்தில் தோண்டுவதாக காவல்துறையில் புகார் அளித்திருந்தார்.

இதன் காரணமாக இரண்டு சிறுவர் களையும் உயிருடன் தள்ளி புதைத்து அதன் மீது புல்டோசர் கொண்டு மண்ணை தள்ளி உள்ளனர் என சேத்ராம் புகார் அளித்துள்ளார். நிஷாங்க் திரிபாதி மற்றும் மனோஜ்சுக்லா மீது எஸ்.சி. எஸ்.டி வன்கொடுதை தடை சட்டத் தின் கீழ் கொலை வழக்கு பதியப்பட்டுள்ளது.

கிராம மக்கள் காவல் நிலையத்தை முற்றுகை யிட்டு நடத்திய போராட்டத்திற்கு பின்னரே வழக்கு பதியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

செய்திஆதாரம் : http://www.firstpost.com/india/bjp-mla-subhash-tripathis-son-booked-for-allegedly-burying-alive-two-children-in-uttar-pradesh-3739549.html

**சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு! வழக்கை தொடுத்தவர் கீ. வீரமணி என்பவர். ஆசிரியர்கள் தகுதித் தேர்வில் அவருக்கொரு மதிப்பெண்ணைக் குறைத்துப் போட்டுவிட்டார்கள்.**

காரணம்,

வந்தே மாதரம் என்ற பாட்டு வங்காள மொழியில் இருக்கின்றது என ஒரு கேள்விக்குப் பதில் தந்திந்திருந்தார்.

விடைத்தாளை திருத்தி மதிப்பெணைத் தந்தவர்கள், அது சமஸ்கிருதத்தில் இருக்கின்றது என எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள்.



# மீண்டும் வந்தே மாதிரம்

இதனால்தான் மதிப்பெண் ஒன்று குறைவு மாணவனுக்கு. மாணவன் வீரமணி ஒரு மதிப்பெண்ணுக்காக உச்ச நீதிமன்றம் செய்றதில் நியாயமிருக்கிறது.

காரணம், ஒரு மதிப்பெண்ணில் அவனுக்குக் கிடைக்கும் வேலை கிடைக்காமல் போய் விடுவதற்கு வாய்ப்புண்டு. சில நேரங்களில் இந்த ஒரு மதிப்பெண் அவனுக்கு வேலையைப் பெற்றுத் தந்தடலாம். அல்லது அந்த வேலையைத் தந்திட தரப்பட வேண்டிய லஞ்சத்தை சற்றுக் குறைக்கலாம். இந்த "சற்று" குறைக்கலாம் என்பது பல லட்சங்களைக் குறிக்கும்.

ஆனால் அதில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி முரளிதரன் அவர்கள் அந்த ஆணையில் "வந்தே மாதிரம்" என்பதை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் கல்வி நிறுவனங்களிலும் வாரந்தோறும் பாடிட வேண்டும் என்றும், அரசு அலுவலகங்களிலும், அரசு நிறுவனங்களிலும், தனியார் தொழிற்சாலைகளிலும், ஆலைகளிலும், நிறுவனங்களிலும் மாதம் ஒரு முறையாவது இதனைப் பாடிட வேண்டும் என்று நீட்டி தீர்ப்பில் கூறினார்.

இன்னும் வந்தே மாதரம் மக்களிடையே நம்பிக்கையை ஊட்டும் என்றும் விடுதலைப் போருக்கு மக்களைக் கொண்டு வந்து சேர்த்தது என்றெல்லாம் நீதிபதி முரளிதரன் அவர் விளக்கங்கள் தந்துள்ளார். இந்தப் பாடலைப் பாட எல்லா ஏற்பாடுகளையும் அரசு இயந்திரத்தை இயக்குவோர் செய்திட வேண்டும் என்றும் கூறி இருக்கின்றார்.

ஆனால் அப்படியொரு வரலாறு இந்த பாடலுக்கு இல்லை. இந்தப் பாடலின் பின் வரிகள், இந்துக் கடவுள்களைக் குறிப்பாக துர்க்காவை துதிக்கும் வரிகள்.

இந்தப் பாடலை எழுதிய பக்கிம் சந்திர சடாகோபாயாய வங்காளத்தைச் சார்ந்தவர்.

(இவரை பக்கிம் சந்திர சேட்டர்ஜி என்றும் அழைப்பர்)

அவர் எழுதிய "ஆனந்தமடம்" என்ற நாவலில் இடம் பெற்ற பாடல்.

பச்சையாகவும், கொச்சையாகவும் மத வாதத்தையும் இன துவேஷத்தையும் வளர்ப்பது முஸ்லிம்களையும், கிருஸ்தவப் பெருங்குடி மக்களையும் புண்படுத்துவது இந்த நாவல்.

இது பாடப்பெற்ற அல்லது இந்தப் பாடல் இடம் பெற்ற ஆனந்த மடம், முழுக்க முழுக்க வகுப்பு வெறியைத் தூண்டுவது, வளர்ப்பது.

விமர்சனங்கள்....

அந்த நாவலை பற்றிய விமர்சனம், இப்படிக் கூறுகின்றது...

'வங்காளத்தில் ஆங்கிலேயர்களின் ஆட்சி நிலைபெற்ற நிலையிலும், இந்த நாவல், முஸ்லிம்களை எதிரிகளாகச் சித்திக்கின்றது. நாவல் முற்றாக வகுப்பு வாதம் கடும் சொற்களால் நிரம்பி வழிகின்றது. முஸ்லிம்களுக்கெதிராக நேராகவே வன்முறையில் ஈடுபட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. அவர் இந்த நாவலை, முதல் விடுதலைப் போர் 1857–க்குப் எழுதி இருந்தார் ; அதாவது இந்தியன் புரட்சி இடம்பெற்ற 1857–க்குப்பின் எழுதி இருந்தார்.

இந்த முதல் விடுதலைப் போரில் தான் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே அணியில் நின்று ஆங்கில ஏகாதியத்தியத்தோடு போர் செய்தார்கள். அந்த நேரத்தில் "ஆனந்த மடம்" கதையை எழுதிய இவர் பக்கிம் சந்திர சடகோபாய ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் துணை ஆட்சியர் பதவி வகித்தார். Deputy Collector Under British Raj.

இப்படி ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் பதவி வகித்து, பணம் சம்பாதித்த ஒருவரின் கதையில்தான் இந்தப் பாடல் வருகின்றது. அதுவும் இந்துக்களும் முஸ்லிம்களும் கைகோர்த்து ஆங்கிலேயர்களை புறமுதுகிட்டு ஓடிடச் செய்த போருக்குப் பின் எத்துனை விஷமம்?

ஒருங்கிணைந்த விடுதலைப் போரின் ஓட்டடத்தில் நஞ்சை விதைத்து 'ஒருமைப்பாடு' என்ற நீரோட்டத்தை நிர்மூலப்படுத்திய ஒருவரின் கதையில் வரும் பாட்டை அவசியம் படித்தாக வேண்டுமாம். இதற்கு உயர்நீதி மன்றத்தின் ஆணை வேண்டுமாம்...? மறு ஆய்வு செய்ய வேண்டும். தீர்ப்பை சென்னை உயர் நீதிமன்றம்.

ஆங்கிலேயர்களின் நண்பர் பக்கிம் சந்திரர்

பக்கிம் சந்திர சடகோபாலாவின் பாடல் இடம் பெற்ற நாவலம் ஆனந்த மடம் 17770 களில் நடந்த வங்காளப் பஞ்சம், அதைத் தொடர்ந்து நடந்த ஃபக்கீர் – சன்னியாசிகள் கிளர்ச்சி இவற்றைப் பின்னணியாகக் கொண்டது.

முஸ்லிம் ஃபக்கீர்களும், இந்து சந்நியாசிகளும் தொடர்ந்த இந்தப் போர் கிளர்ச்சி 1802 வரை தொடர்ந்தது. இதில் முஸ்லிம் ஃபக்கீர்களின் பங்கை பாழாக்கி மறைத்துவிட்டு சந்நியாசிகளின் பங்கை தூக்கிப்பிடித்தார் பக்கிம் சந்திர சடகோபாலா. இந்த வரலாற்றுத் துரோகம்இருக்கட்டும்.

சந்நியாசிகளின் கிளர்ச்சி வெற்றி பெறாத போது, இவர் ஆங்கிலேயர்களிடம் சரணடைந்தார். ஆங்கியேலர்கள் எதிரி அல்ல, நல்ல நண்பர்கள், முஸ்லிம்கள்தாம் எதிரி என கொள்கையை மாற்றிக்கொண்ட ஒரு வகுப்பு வெறியரின் நாவலில் இடம் பெற்றப் பாடலை பாடச் சொல்வது என்ன நியாயம்?

## இந்தப் பாடலை பாடச் சொல்வதன் விளைவு

முஸ்லிம்களையும் கிருஸ்தவர்களையும் எதிரியாகக் காட்டிய நாவலில் இடம் பெற்றப் பாடல் ஒன்றை பாடித்தான் ஆக வேண்டும் எனச் சொல்வதால் அது இடம் பெற்ற நாவலைப் புனிதமாகவும், பெரிதாகவும் கருதுவார்கள் மாணவர்கள். அதனால் அந்த நாவலை வாங்கிப் படிப்பார்கள். முஸ்லிம் களையும், கிறிஸ்தவர்களையும் எதிரியாகக் கருதுவார்கள். வகுப்புவாதம் அந்த பிஞ்சு நெஞ்சங்களில் நஞ்சாகப்படியும். இதற்கெல் லாம் வழிவிடும், இந்தப் பாடலை பாடச் சொல்வது அபத்தம். சரியான எனச் சிந்திக்க வேண்டிய காலக்கட்டம் இது.

முஸ்லிம்களும் கடவுள் நம்பிக்கையுடைய வர்களும், ஏனைய சிறுபான்மையினரும்

மண்ணை தாய் என்பதும், அதை வணங்கு என்பதும் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட விஷயங்கள்.

இறைவனை வணங்குபவர்கள் எல்லா நிலையிலும் அந்த இறைவனையே வணங்கு வார்கள். வேறு எதையும் எந்த நிலையிலும் வணங்க மாட்டார்கள்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்கள் அனைத்து நிலையிலும் அல்லாஹ்வை மட்டுமே வணங்குபவர்கள். அல்லாஹ் அல்லாதவைகளை வணங்கவும் மாட்டார்கள். இதற்கான உரிமையை அவர்கள் இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்திடம் பெற்றிருக் கின்றார்கள். (இப்போதைய தீர்ப்பும் கட்டாயப்படுத்தவில்லை)

அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 அதை அவர்களுக்கு அடிப்படை உரிமை என பறை சாற்றுகின்றது. அந்தப் பிரகடனம் இப்படி அமைகின்றது.

மக்கள் தங்கள் மனசாட்சிப்படி நடக்கவும் தாங்கள் விரும்பும் மதத்தை ஏற்கவும், அதனை சுதந்திரமாகச் செயல்படுத்தவும் சுதந்திரமாகப் பிரச்சாரம் செய்யும் உரிமை உடையவர்கள்'' அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு–25

நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 25 ஆகிய இது தந்த உரிமைகளைப் பறித்துக் கொண்டிருப்பது நீதிமன்றங்கள்தாம்.

இந்த உரிமையை விட்டுத் தந்திட மாட்டோம் என உரக்க முழங்கிட வேண்டிய காலம் இது.

கட்டாயமில்லை, வந்தே மாதம் பாடுவது

இப்போது 5–7–2017ல் சென்னை உயர்நீதி மன்றம் தந்த தீர்ப்பில் எந்தக் குழுவோ, எந்த தனி மனிதனோ பாட விரும்பவில்லை என்றால் அவரைக் கட்டாயப் படுத்தவோ அவர்மீது அதைத் திணிக்கவோக் கூடாது எனக் கூறியுள்ளது.

கட்டாயமாக அனைவரும் பாட வேண்டும்

**முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்கள் அனைத்து நிலையிலும் அல்லாஹ்வை மட்டுமே வணங்குபவர்கள். அல்லாஹ் அல்லா தவைகளை வணங்கவும் மாட்டார்கள். இதற்கான உரிமையை அவர்கள் இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்திடம் பெற்றிருக் கின்றார்கள். (இப்போதைய தீர்ப்பும் கட்டாயப்படுத்தவில்லை)**

எனச் சொல்லியிருந்தால் மொத்த தீர்ப்புக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் குவிந் திருக்கும்.

ஆனால் இந்தத் தீர்ப்பு ஆட்சியாளர்களின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்க்கவும், உங்கள் எண்ணங்களை இதில் பிரதிபலித்திருக்கின் றோம் எனக் கனத்தைக் காட்டவும் எழுதப் பட்டு "Press Note: பத்திரிகையாளரின் கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டதோ என மக்கள் கருதுகின்றார்கள். அதனை "வைகறை வெளிச் சத்தின்" கவனத்திற்கும் கொண்டு வந்தார்கள்.

மோடி ஜுலை 27 ஆம் தேதி இராமேஸ் வரம் வந்தார். அவர் வருவதற்கு ஒரு நாளைக்கு முன்னரே தீர்ப்புப் பத்திரிகைச் செய்தியா னது. இது யதார்த்தமாக நடந்தது. திட்டமிட்ட செயல்ஆகும் என எடுத்துக்கொள்வோமா?

### வழக்கில் கேட்கப்படாதவற்றிற்கு வழக்கில் தீர்ப்பு

ஆசிரியர் தகுதி தேர்விற்கு பரீட்சை எழுதியவர் வீரமணி தனக்கு மறுக்கப்பட்ட மதிப்பெண்ணை தந்திட வேண்டும் என்று மட்டுமேகேட்டுள்ளார். ஆனால்தீர்ப்புவழங்கி யவர் என்னையும் கண்டு கொள்ளுங்கள் என்ற பாங்கில் தீர்ப்பை வழங்கி இருக்கின்றார். சிறுபான்மையினர் ஒரு நிமிடம் கொதித்துப் போனார்கள்.

வழக்கில் கேட்ட நிவாரணத்தை மட்டும் வழங்கி இருக்கலாம். இப்படித் தீர்ப்பு வழங்கு வது நமது நீதி மன்றங்களுக்குப் புதியதல்ல. பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட பின் வழக்

கொன்றை தொடுத்தார்கள் முஸ்லிம்கள்.

பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் தங்களுக்கும் தொழும் உரிமை வேண்டும் எனக் கேட்டார்கள் அந்த வழக்கில். தீர்ப்பில் பாபரிமஸ்ஜித்இடிக்கப்பட்டதால்வழிபாட்டு உரிமையை இழந்தவர்கள் இந்துக்கள் தானே அல்லாமல், முஸ்லிம்கள் அல்ல எனக் கூறியதோடு நில்லாமல், இன்னொன்றையும் இணைத்தே சொன்னார்கள் தீர்ப்பில், இப்போது இராம் லிலா சிலைகளுக்காகக் கட்டப்பட்டுள்ள தற்காலிக கட்டிடம். சீதோஷ்ண நிலையின் ஏற்றத் தாழ்வுகளைத் தாங்கிக் கொள்ளாதாமா? என்பதைக் கண்டறிந்து அந்தக் கட்டடத்தை உறுதியாக்கிட வேண்டுமானால், உறுதியாக்கிட வேண்டும். (ஆதாரம் : பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள், வேர்கள் பதிப்பகம், இந்நூலில் இன்னும் பல உண்மைகள் கிடைக்கும்.)

ஆக தொழ அனுமதிக்கேட்ட முஸ்லிம் களுக்கு கிடைத்த தீர்ப்பு கோவிலை உறுதி யாக்கிட வேண்டும் என்பதே!

### இந்துத்துவா நீதிமன்றங்களின் வழி

மோடி ஆட்சி ஏற்றபின் ஒரு கட்டத்தில் பல இந்துத்துவ தீர்ப்புகளை உச்ச நீதிமன்ற மும், சில உயர் நீதிமன்றங்களும் வழங்கின. இதனால் நமது முன்னாள் தலைமை நீதிபதி தாக்கூர் அவர்கள் நீங்கள் இந்து ராஷ்டிராவை நீதிமன்றங்கள் வழி கொண்டு வந்திட இயலாது என்றார்கள். (பார்க்க வைகறை வெளிச்சம் : செப்டம்பர் 2016, தி இந்து – 27–8–2016)

இப்போதுள்ள நிலையில் சில உச்சநீதி மன்ற தீர்ப்புகள் சில பல உயர்நீதி மன்றத் தீர்ப்புகள் இவற்றை ஒன்றிணைத்தால் இந்து ராஷ்டிராவின் ஒரு பெரும் பகுதி சட்டமாக ஆக்கப்பட்டு விட்டது எனலாம்.

### எதிர்பார்த்த விளைவு

சென்னை உயர்நீதிமன்றத்தில் வழங்கப் பட்ட தீர்ப்பு எதிர்பார்த்த விளைவுகளை ஏற் படுத்தி இருக்கின்றது. மராட்டிய மாநிலத்தின் சட்ட சபையில் அது ஒலித்திருக்கின்றது. விவாதமாகி, அடிதடி நடந்திருக்கின்றது.

முன்னாள் தமிழ்நாடு தலைமை நீதிபதி கிருஷ்ணன் கவ்ல் அவர்கள் கொடுத்த சில இந்துத்துவ தீர்ப்பின் பின் உச்ச நீதிமன்றம் சென்றார்கள் என்று கவனிக்கத்தக்கது.

இப்போது கேள்வி என்னவென்றால் ஆனந்த மடம் பாணியில் சிந்திப்பவர்கள் நீதிமன்றங்களில் அமர்ந்தால் – இவர்களுக்கு முன்னால் வரும் முஸ்லிம்களின் வழக்குகள், ஏனைய சிறுபான்மையினரின் வழக்குகள் என்னவாகும்?

இங்கே 2003ஆம் ஆண்டு மூத்த வழக்கறிஞர் “தி இந்து” பத்திரிகையின் வழி சொன்னதைத்தான் நினைவு கூற வேண்டி யுள்ளது.

Muslims will not only not get justice but will be brutalised in the name of justice.

முஸ்லிம்களுக்கு நீதி கிடைக்காது என்பது மட்டுமல்ல அவர்கள் நீதியின் பெயரால் கொடுமைப்படுத்தவும் படுவார்கள்.

28–7–2017 மராட்டிய மாநிலத்தில் சட்ட சபையில் நடந்த விவாதத்தில் சமாஜ் வாடி கட்சியைச்சார்ந்த அபூ ஆசிம் அஸ்மி அவர்கள் (இவரை பாரதீய ஜனதாக் கட்சியைச் சார்ந்த வர்கள் சட்ட சபையிலே அடித்த போதும்) அவர் இப்படிக் கூறினார்.

என்னை இந்தியாவை விட்டு தூக்கி வெளியே வீசினாலும், நான் வந்தே மாதி ரத்தைப் பாட மாட்டேன் எனக் கூறியுள்ளார்.

அதே சட்ட மன்றத்தில் இன்னொரு உறுப்பினர் வாரிஸ்பத்ரான் AIMIM கட்சியைச் சார்ந்தவர். “ஒரு துப்பாக்கியை என்னுடைய தலையிலே வைத்தாலும்” நான் வந்தே மாதரம் பாட மாட்டேன் என்றார். (தி இந்து 30–7–2017)

வந்தே மாதம் பாடுவது உங்கள் விருப்பத் திற்கு உட்பட்டதுதான். பா.ஜ.க.வின் மத்திய அமைச்சராக இருந்த முக்தார் அப்பாஸ் நக்வி

அப்போது மும்பையிலிருந்து அவர் வந்தே மாதரம் பாடுவது அவரவர் விருப்பத்திற்கு உட்பட்டதுதான். எனச்சொல்லி கீழே இறங்கி வந்தார்.

### வந்தே மாதரமும் தேசிய கீதமும்

தொடக்க நாட்களில் அதாவது ஆனந்த மடம் நாவல் வெளிவந்த நாட்களில் 1882 களில் இந்த நாவலில் இடம்பெற்ற வந்தே மாதரம் பாடலை சிலர் சிலாசித்துப் பேசினார்கள். அதனை நாட்டுப்படலாக ஆக்கிடும் முயற்சியும் நடைபெற்றது.

ஆனால் அது உமிழும் வகுப்பு வாத கனலை எல்லோரும் வெறுத்தார்கள். அதனால் இந்தப் பாடலை மறுத்தார்கள்.

குறிப்பாக இந்தப் பாடல் முதல் விடுதலைப் போரில் இந்துக்கள் என்றோ முஸ்லிம்கள் என்றோ பாகுபாடு பார்க்காமல் எல்லோரும் ஒன்றாக ஆங்கியேலயர்களை எதிர்த்து நின்ற சில வருடங்களுக்குகப் பின் வந்ததாகும், அதுவும் ஆங்கிலேயர்களின் கீழ் சிப்பாயாக இருந்த ஒருவரிடமிருந்து வந்தது. அதனால் உப்புச் சப்பற்றுப் போய்விட்டது.

மாறாக அந்த நாட்களில் 1857–இல் ஆங்கிலேயர்களுக்கெதிராக ஆயுதந்தாங்கிப் போராடிய பெண் விடுதலைப் போராளிகள், வீராங்கணை மகள் பேகம் கசரத் மகல், ஜான்சிராணி போன்றவர்களின் வீரங்கள் வீதியெல்லாம் போற்றப்பெற்ற நாட்களாகும்.

கிராமப்புறங்களில் இந்த விடுதலைப் போர் வீரங்கணைகளின் வீரங்கள் கதைகளாக மக்கள் மன்றத்தில் புழக்கத்தில் இருந்தன. இதனால் இந்த நாவலும், இதில் இடம்பெற பாடலும் கண்டுகொள்ளப்படவில்லை.

காங்கிரஸ் கட்சி பிற்றை நாட்களில் காங்கிரஸ் கட்சி தனது மாநாடுகளில், சாதனை பாடலாம் எனக் எண்ணிக் கொண்டிருந்த நாட்களில், அதனை நேரு, காந்தி, சுபாஷ் சந்திர போஸ் ஆகியோர் கடுமையாக எதிர்த்தார்கள்.

காரணம், இந்தப் பாடல் மத துவேஷத்தைப் பிரதிபலிப்பது எல்ல மதத்தவரும் ஒன்றாய் ஒரே அணியில் நின்று ஆங்கிலேயர்களை எதிர்த்துக் கொண்டிருக்கும் போது இந்தப் பாடலைப் பாடுவது சரியாக இருக்காது என்றார்கள்.

**மத சார்பின்மை அன்று....**




### ஜோஹோவாஸ் விட்னஸ் - சும் தேசிய கீதமும்

“‘ஜனகனமன” எனத் தொடங்கும் பாடலே நமது தேசிய கீதம். அந்த தேசிய கீதத்தை எழுதியவர் இரவீந்திரநாத் தாகூர்.

இந்தப் பாடலை பாடும்போது ஜேஹோவாஸ் விட்னஸ் என்ற கிருஸ்தவப் பிரிவினர் எழுந்து நிற்க வில்லை. காரணம் அவர்கள் தங்கள் மத நம்பிக்கைக்கு எதிரானது எனக் கருதினர். இதனால் அவர்கள் தேசிய கீதத்தை மதிக்கவில்லை எனக் குற்றம் சாட்டப் பட்டார்கள். உச்ச நீதிமன்றம் வரை சென்ற இந்த வழக்கில்– இறுதியில் அவர்கள் தேசிய கீதத்திற்காக எழுந்து நிற்பது தங்கள் மத நம்பிக்கைக்கு எதிரானது எனக் கருதினால், எழுந்து நிற்க தேவையில்லை எனக்கூறி விட்டது.

அது அரசியல் நிர்ணயச் சட்டத்தில்
கூறப்பட்ட மத சார்பின்மையை
காப்பாற்றிய காலம்.



# வந்தே மாதரமும் தேசபக்தி வெங்காயமும்

வந்தே மாரதம் பாடலுக்கும் நாட்டுப் பற்றுக்கும் அப்படியென்னதான் சம்பந்தம் இருக்கிறது?

*1882*ஆம் ஆண்டு வெளிவந்த “ஆனந்த மடம்” எனும் வங்க நாவலில் இடம் பெற்ற பாடல்தான் “வந்தே மாதரம்’. இந்த நாவலை எழுதியவர் பங்கிம் சந்திர சாட்டர்ஜி என்ற வங்காளப் பார்ப்பனர், அன்றைய பிரிட்டிஷ் அரசாங்கத்தில் டெபுடி மாஜிஸ்ரேட்டாக விசுவாசமான காலனிய சேவை செய்த சாட்டர்ஜி, 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் வங்காளத்தில் நவாபுக்கு எதிராக நடந்த வைணவ சந்நியாசிகளின் கலகத்தைப் பின்னணியாகக் கொண்டு இந்நாவலை எழுதினார்.

*1773*ஆம் ஆண்டில் வங்காளத்தில் வந்த பஞ்ச காலத்திலிருந்து நாவல் தொடங்குகிறது. அன்றைய வங்காள நவாபான மீர் ஜாபரின் கஜானாவை சந்நியாசிகள் கொள்ளையடிக்கின்றனர். இந்த நாவலில் வரும் பவானந்தன் எனும் கதாபாத்திரம், நவாபுக்கு எதிராக வைணவத் துறவிக் கூட்டத்துடன் அரசாங்கக் கஜானாவைக் கொள்ளையிடவும், முஸ்லிம் வழிபாட்டுத் தலங்களை இடிக்கவும் செல்லும்போது “வந்தே மாதரம்’ பாடலினைப் பாடிய படியே மக்களைத் திரட்டுவதாய் நாவல் செல்கிறது.

“இந்தப் பாதகர்கள் நிரம்பிய யவன புரியைத் தகர்த்து ஆற்றில் வீழ்த்திவிட வேண்டும்” என்றும், “இந்தத் துன்மார்க்கர்கள் கூட்டத்தை தீ வைத்து எரித்து அன்னையாகிய நமது தாய்நாட்டை மீண்டும் பரிசுத்தமாக்க வேண்டும்” என்றும் “நமது தேவாலயங்களை இடித்து அவற்றின் மீது அவர்கள் எழுப்பிய கட்டிடங்களைத் தகர்த்தெறிந்து மறுபடியும் ராதா மாதவர்களுக்கு (கிருஷ்ணனுக்கு) கோயில் கட்டுவோமாக!” என்றும் முஸ்லிம்களுக்கு எதிராக இந்நாவல் நெருப்பைக் கக்குகிறது.

“இத்தாடிப் பயல்களைத் தேசத்தை விட்டுத் துரத்தினாலன்றி இந்து மார்க்கத்திற்குச் சேமமில்லை” என்றும் “இம் மகம்மதியர் ஜாதி எனும் குருவிக் கூட்டைப் பிரித்தெறிய வேண்டுமென்று அடிக்கடி நினைத்தோம். நம் மத எதிரிகள் நகரை அழித்து ஆற்றில் விடக் கருதினோம். இப்பன்றிகளின் கிடையைச் சாம்பலாக்கிப் பூமாதேவியின் துன்பத்தைத் துடைத்தெறிய எண்ணினோம்! நண்பர்களே! அதற்கான காலம் வந்துவிட்டது.

வாருங்கள்! நாம் சென்று அந்த இஸ்லாமியப் பாவிகளின் இருப்பிடத்தை அழிப்போம். அப்பன்றிகளை அடைக்கும்

பட்டியை எரிப்போம். அக்குருவிக்கூட்டைக் கலைத்துக் குச்சிகளை எல்லாம் காற்றில் பறக்க விடுவோம்" என்றெல்லாம் நஞ்சைக் கக்கி விட்டு, கூடவே, "பகவான் நாமம் ஸ்தோத்திரம் செய்வோமாக!" என்கிறார் பங்கிம் சந்திர சாட்டர்ஜி.

முஸ்லிம்களை தீ வைத்துப் பொசுக்குவது தான் தேசத்தைப் பரிசுத்தமாக்குவதாம்! இதைத்தானே சங்கப் பரிவார பாசிஸ்டுகள் குஜராத்தில் செய்து முடித்தார்கள்! முஸ்லிம்கள் எழுப்பிய கட்டிடங்களைத் தகர்த்தெறியும் திட்டத்தின் மூல விதையை பார்ப்பன பாசிச கும்பலுக்கு இந்த நாவல்தான் விதைக்கிறது எனும்போது, இந்நாவலில் இடம் பெறும் பாடலும் இந்து பயங்கரவாதிகளுக்கு உவந்து போனதில் வியப்பென்ன?

வந்தே மாதரம் என்றால் "தாய்க்கு வணக்கம்' என்று பொருள். எந்தத் தாய்க்கு வணக்கமாம் அது? பாட்டின் இரண்டாம் பகுதியில் இதற்கு பதில் இருக்கின்றது. பார்வதி, காளி, துர்க்கை, சரஸ்வதி, லட்சுமி என்றெல்லாம் சுட்டப்படுபவள்தான் இந்தத் தாய். பாரதியார் மொழி பெயர்த்துள்ள வந்தேமாதம் பாடலில் இது தெளிவாகவே உள்ளது.

இந்தத் தாயைப் "அகண்ட பாரத மாதா" வாக புரமோஷன் கொடுத்த கைங்கர்யத்தைக் காங்கிரசுக் கட்சி 1906இல் செய்தது. 1930களின் இறுதியில் இப்பாடலை "தேசிய கீதமாக்க' காங்கிரசுக் கட்சி முயன்றது.

இப்பாடலுக்கு இசையமைத்த கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் ""வந்தே மாதரம் பாடல் துர்க்கை அன்னையை வணங்குவது போலப் பாடப்பட்டுள்ளது. இந்தியாவில் இந்துக்கள் தவிர முஸ்லிம்கள் மற்றும் பல மதத்தினர் இருக்கின்றனர். எனவே இந்தப் பாடலைத் தேசிய கீதமாக அறிவிக்கக் கூடாது" என்று 1937இல் எதிர்த்துள்ளார். எம்.என்.ராயும், சுபாஷ் சந்திரபோசும் இப்பாடலுக்கு எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

1937இல் சென்னை மாகாண பிரீமியராக ராஜாஜி இருந்தபோது, சென்னை சட்டசபையில் இப்பாடலைப் பாடச் சொல்லி கட்டாயப்படுத்தினர். பாடல் பாடுகையில் எழுந்திருக்க மறுத்து 2 இஸ்லாமிய உத்யோகஸ்தர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். ஒரிஸ்ஸா சட்டசபையிலும் இது எதிர்ப்பை சம்பாதித்தது. பெரியாரின் "குடியரசு" பத்திரிகை அப்போதே இப்பாடலின் முஸ்லிம் விரோதப் போக்கை அம்பலப் படுத்தியிருக்கின்றது.

நான்கு கைகள் முளைத்த லட்சுமியைக் காட்டி அவள்தான் "பாரதமாதா' என்றும், அவளை அனைவரும் வழிபட வேண்டும் என்று மற்ற மதத்தினரைக் கட்டாயப்படுத்துவதும் பார்ப்பன (இந்து) வெறியன்றி வேறென்ன?

முஸ்லிம்களை வெறுக்கக் கற்றுத்தரும் இதே நாவல், ஆங்கிலேயர்களுக்கு அதிக விசுவாசமாக "ஆங்கிலேயர்கள் நமக்குப் பகைவர்கள் அல்லர்" என்றும் "இந்த சநாதன சந்நியாசிகள் செய்த புரட்சியின் காரணமாகவே அரசுப் பொறுப்பை ஆங்கிலேயர்கள் ஏற்க வேண்டி வரும்" என்றும் கூறுகிறது. பல இடங்களில் பிரிட்டிஷாரை வெகுவாகப் புகழ்கிறது. இந்து தர்மம் தழைக்கக் கூட ஆங்கிலேயனின் ஆதிக்கம் வேண்டுமென ஆன்மீகக் கயமைத் தனத்தைக் காட்டுகிறது இந்நாவல்.

நமது நாட்டின் சக குடிகளான இசுலாமியர்களை அழிக்கவும் அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு அடிவருடிகளை உருவாக்கவும் முனையும் இந்த நாவலில்தான் இன்றைக்கு தேசபக்தியின் அடையாளமாகக் காட்டப்படும் "வந்தே மாதரம்' பிறந்துள்ளது.

இப்பாடலை வைத்து தேசபக்தி பஜனை பாடும் பா.ஜ.க., காங்கிரசு இரண்டுமே நாவல் குறிப்பிடுவது போலவே நாட்டின் சிறுபான்மை மக்களை அழிப்பதிலும், நாட்டை அன்னியனுக்குக் காட்டிக் கொடுப்பதிலும் ஓரணியில் நிற்கின்றன.

வந்தே மாதரத்தைப் பாடுவதன் மூலம் ஒருவன் தேசப் பற்றாளன் என்றோ, அதைப் பாட மறுப்பவன் தேசத்துரோகி என்றோ

கருதி விட முடியுமா? அப்படியானால் "வண்டே மாட்றம்" என்று நவீன மெட்டுக்கள் மூலம் ஏ.ஆர்.ரகுமான் போன்ற பிரபலங்களை வைத்து இந்தியா முழுவதும் இப்பாடலை ஒலிக்கச் செய்து, கல்லாவை நிரப்பிக் கொண்ட அந்நிய நிறுவனமான "சோனி"தான் "இந்திய நாட்டின் சிறந்த தேச பக்தனாக' இருக்க முடியும்.

போலியான தேசபக்தி அரட்டைக் கச்சேரி செய்யும் காங்கிரசு கும்பலோ தாம் ஆண்ட ஐம்பது ஆண்டுகளில் அடுத்தடுத்து நாட்டை அந்நியனுக்குக்காட்டிக் கொடுத்து, இந்திய ராணுவத்திற்கு போர் விமானம், போபர்சு பீரங்கி, நீர் மூழ்கிக் கப்பல் வாங்குவதிலும் ஊழல் செய்து திளைத்தது.

அதீத கூச்சல் போடும் பா.ஜ.க.வோ, சீமைச் சாராயம், விபச்சார அழகிகளுக்காக ராணுவ ரகசியங்களை விற்க முன் வந்ததையும், கார்கில் போரில் மாண்ட வீரர்களின் உடலை எடுத்துச் செல்லும் சவப் பெட்டிகளில்கூட கமிஷன் அடித்ததையும் மறைத்து விட்டு, "வந்தே மாதரம் பாடுவதுதான் தேச பக்தி" எனக் கூச்சல் போடுகிறது. காசுக்காகவும், சாராயத்துக்காகவும், விபச்சாரிகளுக்காகவும் நாட்டின் பாதுகாப்பையே விற்ற இவர்களுக்குத் தேசபக்தி பற்றிப் பேசிட அருகதை உண்டா?

ஒரு நாடு என்பது நாட்டு மக்களையும், அவர்கள் சார்ந்திருக்கும் இயற்கை வளங்களையும் பண்பாட்டையும் குறிப்பதாகும். நாட்டு மக்களின் மீதும், நாட்டின் மீதும் உண்மையான அக்கறையுடன், அந்நிய ஆக்கிரமிப்புக்கும், ஆதிக்கத்துக்கும் எதிராகவும், நாட்டு மக்கள் நலன் மீது மாளாக் காதலுடனும் போராடுவதே உண்மையான நாட்டுப் பற்றாகும். இதைச் செய்யாமல் தேசத்துரோக ஒப்பந்தங்கள் மூலம் நாட்டின் இறையாண்மையை ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைத்து விட்டு, "வந்தே மாதரம்' பஜனை பாடுவது நாட்டுப் பற்றாகாது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது வந்தே மாதரத்தைவிட வேறு



Bhagat Singh Subash Chandra Bose

இரண்டு முழக்கங்கள் ஓங்கி ஒலித்தன.

அவை:

சுபாஷ் சந்திரபோஸின் "ஜெய்ஹிந்த்" மற்றும் பகத்சிங்கின் "இன்குலாப் ஜிந்தாபாத்" 1929இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவிருந்த தொழிலாளர் நலனுக்கு எதிரான சட்டத்தைக் கண்டித்துப் போராடும் விதமாக வெடிகுண்டு வீசியபோதும், பின்பு ராஜகுரு, சுகதேவுடன் தூக்கிலிடப் பட்டபோதும் பகத்சிங் முழங்கியது இதே "இன்குலாப் ஜிந்தாபாத்'தான். அத்தகைய தேசப்பற்றாளனின், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியின் பிறந்தநாள் நூற்றாண்டும் இந்த ஆண்டுதான்.

"புரட்சி ஓங்குக!" (இன்குலாப் ஜிந்தாபாத்!) என பகத்சிங் முழங்கிய முழக்கம்தான் நூற்றாண்டுகளைக் கடந்து இன்னமும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. இனி வரும் நூற்றாண்டும் புரட்சியின் நூற்றாண்டாக இருக்கப் போகிறதே அன்றி, இந்து வெறி தேசிய வெறிக்கானதாக இருக்கப் போவதில்லை.

ஏகாதிபத்திய எதிர்ப்பும் நிலப் பிரபுத்துவ எதிர்ப்பும் நாட்டுப்பற்றும் மதச்சார்பின்மையும் கொண்ட புரட்சியின் முழக்கம் தான் இனி நாடெங்கும் எதிரொலிக்கப் போகிறதே தவிர, ஏகாதிபத்திய கைக் கூலிகளின் வந்தேமாதரம் பஜனை அல்ல.

**நன்றி : வினவு**



# குடியரசுத் தலைவர்கள்

## குடியரசு தலைவர், பிரனாப் முகர்ஜி! ஜுலை - 2012 - ஜுலை 2017

காங்கிரஸ் கட்சிக்குள் பலத்த அடாவடித் தனங்களைச் செய்து குடியரசுத் தலைவரானார்.

அப்பாவி குடிமக்களைக் கொலை செய்த குடியரசு தலைவர் என்றொரு பெயரும் இவருக்கு உண்டு. அப்சல் குருவை அதாவது எந்தக் குற்றமும் செய்யாத அப்பாவி அப்சல் குருவைக் கொலை செய்த குடியரசு தலைவர்.

அதற்கு முன் அஜ்மல் கசாப் என்ற புள்ளை பூச்சியை கொலை செய்தார். அவரைப் புள்ளைப் பூச்சி என்பதற்குக் காரணம் அவரைத் தூக்கிலே போடும் போது அவருக்கு வயது 17 மட்டுமே!

அதற்கு பிறகு இரவெல்லாம் விழித்திருந்து பணியாற்றி யாகூப் மேமனை தூக்கிலே போட்டார்.

தன்னை குடியரசு தலைவராக ஆக்கியதற்கு இத்துணை பெரிய தேசிய சேவைகளைச் (கொலைகலைச்) செய்திருக்கின்றார். அவற்றைச் சற்று விரிவாகப் பார்ப்போம்...

**“அப்சல் குருவின்” கருணை மனுவும், பிரனாப் முகர்ஜியும்**

2013 அப்சலின் கருணை மனு பல்வேறு உண்மையைப் பறைசாற்றும் விதத்தில் அமைந் திருந்தது. அதைப் பிரனாப் முகர்ஜி கண்டு கொள்ளவே இல்லை. ஆனால் அப்துல் கலாம் அவர்கள் அந்த மனுவை முழுமையாக ஆய்வு செய்தார்கள். அதன்பின் அதனை அழகுற பதிவு செய்தார்கள்.

அப்சல் குருவின் மனைவி தபசும் உச்ச நீதிமன்றத்திற்கும், குடியரசு தலைவருக்கும் கடிதம் எழுதினார். பின்னர் அது மக்கள் மன்றத் திலும் வைக்கப்பட்டது. அதை பிரனாப் முகர்ஜி ஏறெடுத்தும் பாத்திடவில்லை.

அதை அப்சல் குருவை சந்தடியில்லாமல் தூக்கிலே போட்டிட எல்லா விதத்திலேயும் காரணமாக இருந்தார்.

அப்சல் குருவின் கருணை மனுவுக்கு முன் 20 கருணை மனுக்கள் கிடப்பில் இருந்தன. அவற்றையெல்லாம் பற்றி எந்தக் கவலையும் படாமல், அவனது கருணை மனுவைக் கையிலே எடுத்து திடுதிப்பென நிராகரித்து விட்டதாக அறிவித்தார்.

குடியரசு தலைவர், குடி மக்களின் ஒட்டு மொத்த பிரதிநிதி என்ற வகையில் பல பொறுப்புக்களை அவசியம் நிறைவேற்றிட வேண்டும். அவற்றுள் ஒன்று குடிமக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பங்கம் வந்திடாமல் பாதுகாப்பதாகும்.

His the custodian of the constitution என்கிறது நமது அரசியல் நிர்ணயச் சட்டம்.

ஆகவே அவர் தார்மீகமாக அப்சல் குருவின் கருணை மனுவை ஏனைய மனுக்களைபோல் எடுக்கவியலாது எனச் சொல்லி இருக்கலாம், மறுத்திருக்கலாம். எல்லாக் கருணை மனுக் களையும் வரிசைக் கிரமப்படி ஆய்வுக்கு உட்படுத்தி இருக்கலாம்.

அதேபோல் இன்னொன்றையும் அவர் செய்திருக்கலாம். அது, உச்ச நீதிமன்றம் அப்சலை தூக்கில் போட காட்டிய காரணத் தையும், சாட்சியங்களையும் கேள்வியாக்கி இருக்கலாம்.

அப்சல் குருவை தூக்கிலே போட உச்ச நீதிமன்றம் கூறிய காரணம், நாட்டு மக்களின் கூட்டு மன சாட்சியைத் திருப்திப்படுத்திடத் தான் என்கின்றது.

தார்மீக ரீதியாக இப்படி ஒரு காரணத்தைச் சொல்லி ஒருவரை தூக்கிலே போட நமது அரசியல்நிர்ணயச்சட்டத்தில்இடமிருக்கிறதா எனக் கேட்டிருக்கலாம். இப்படிக் கேட்கவும், உச்ச நீதிமன்றத்திடம் ஆலோசனைப் பெறவும் அவருக்கு அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 143–ன் கீழ் அதிகாரமிருக்கிறது.

அதேபோல் அப்சல் குருவின் மரணத் தண்டனைக்கு எந்த ஆதாரத்தையம், சாட்சி யத்தையும் அரசு தரப்பில் காட்டிட இயல வில்லை. இந்நிலையில் சட்டப்படியான எந்த ஆதாரமும் இல்லாமல் ஒருவரை ஏன்? திடுதிப் பென்று தூக்கிலிட வேண்டும் என்றும் கேட்டி ருக்கலாம். அரசை கேட்கும் அதிகாரமிருக் கின்றது, குடியரசுத் தலைவருக்கு. அவர் எதையுமே செய்யவில்லை என்றாலும் ஒன்றைச் செய்திருக்கலாம் அது,

அப்சல் குருவுக்கு எதிராகக் காட்டப் பெற்ற ஒரே சாட்சியம், அவருடைய வாக்கு மூலம் இதை உச்ச நீதிமன்றம் நிராகரித்து விட்டது. இந்நிலையில் அப்சலை எப்படித் தூக்கிலிட முடியும். நாட்டு மக்களின் கூட்டு மனசாட்சி – என்பது எங்கேயும் சட்டத்தில் சொல்லப்படவில்லை. இதை உச்ச நீதிமன்றம் எப்படிக் கணக்கிட்டது? என்றெல்லாம் கேட்டிருக்கலாம்.

இதையெல்லாம் செய்வது அவர் குடிமக் களுக்குப் போடும், மடிப்பிச்சை அல்ல. மாறாக, அது அவருடைய தார்மீகக் கடமை. அவர் தன் கடமையில் தவறினார், ஓர் அப்பா வியைத் தூக்கிலிட எல்லாவிதத்திலேயும் காரணமாக இருந்தார்.

## இதற்கு நேர் மாறாக ஒரு குடியரசுத் தலைவர்

### பிரணாப் முகர்ஜியும் A.P.J. அப்துல் கலாமும்

டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் 2007 முதல் 2012 வரை குடியரசு தலைவராக இருந்தார். அப்சல் குருவின் கருணை மனு முதலில் அவரிடம் தான் வந்தது.

உச்ச நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப் பெற்று பின்னர் தன்னிடம் வந்த கருணை மனுக்களை, நிராகரிப்பதற்கு மக்கள் மன்றத் தில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டார்கள் அப்துல் கலாம் அவர்கள். அதை தான் எழுதிய நூலில் இப்படிக் குறிப்பிட்டதை இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற ஏடு இப்படிக் குறிப்பிட்டது.





அப்சல் குரு

Kalam referred to a study that he had got done to obtain a "normal citizen's point of view in terms of crime, intensity of crime and the social and financial status of individuals who were convicted and awarded capital punishment".

"This study revealed to my surprise that almost all the cases which were pending had a social and economic bias. This gave me an impression that we were punishing the person who was least involved in the enmity and who did not have a direct motive for committing the crime," he wrote.

He expressed the opinion that courts hearing death cases should alert the law enforcing agencies "to intelligently find out the source of sustenance of the individual who is being punished and that of his family".

"This kind of analysis may lead to the real person and the motive which has led to the crime. We are all the creation of God. I am not sure a human system of a human being is competent to take away a life based on artificial and created evidence,"

If done this will be a turning point in the judicial calture.

ஆதாரம் : The New Indian Express, July, 29-2017

Quoted from his book. Turning Points : A Jaurney Through Challenges

இதன்பொருள் :

கலாம் தான் மேற்கண்ட ஓர் ஆய்வை மேற்கோள் காட்டி பேசுகின்றார். அந்த ஆய்வு சாதாரண குடிமக்களின் கருத்துக்களை தேடிக் கேட்டுப் பெறுவதாக அமைந்திருந்தது. அப்படி மக்களின் கருத்துக்களைக் கேட்டுப் பெற்றிடும்போது குற்றங்களில் மக்களின் கருத்துக்கள் என்ன? குற்றத்தின் ஆழம் என்ன? குற்றம் சுமத்தப்பட்டு மரண தண்டனை வழங்கப்பெற்ற தனி மனிதர்களின் சமுதாய நிலை, பொருளாதார நிலை என்ன? இவற்றை மையமாகக் கொண்டிருந்தார்.

**கலாம் கூறுகின்றார்**

"மரண தண்டனையை நிறைவேற்றுவதற்காக காத்துக்கிடக்கும் வழக்குகளில் ஒரு சமுதாய மாச்சர்யமும், பொருளாதார மாச்சர்யமும் நிறைந்து கிடந்ததைக் கண்டு ஆச்சர்யப்பட்டேன். இந்த வழக்குகள் – அதாவது மரண தண்டனைக்காக காத்துக் கிடக்கும் வழக்குகள் என்னுள் ஒரு தாக்கத்தை உண்டுபண்ணின. அது நாம் வழக்குகளில் மிகவும் குறைவாக தொடர்புடையவர்களுக்கு மரண தணடனை வழங்குகின்றோம். அதேபோல் மரண தண்டனை வழங்கப்பெற்றவர்களுக்கு அந்த குற்றத்தைச் செய்ய வேண்டும் என்பதற்கான நேரடியான நோக்கம் எதுவுமிருக்கவில்லை.

அப்துல் கலாம் அவர்கள் இன்னொரு கருத்தையும் உரக்க முழங்குகின்றார்கள். கொலை – சாவுகள் சம்பந்தமான வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள், சட்டத்தைச் செயல்படுத்துபவர்களை, அதாவது கொலை வழக்குகளை விசாரிப்பவர்களை அறிவுறுத்த வேண்டும். அவர்கள், தண்டனைக்குரிய நபரின், அவரது குடும்பத்தின் வருவாய்கள் என்னென்ன என்பது மிகவும் புத்திசாலித்தனமாக அனுமானிக்க வேண்டும். இதுபோன்ற விசாரணைகள் உண்மையிலேயே கொலைக்குப் பின்னால்

இருந்தவர்களிடம் விசாரணையைக் கொண்டு செல்லும், அதேபோல் கொலைக்கான உண்மையான காரணத்தையும் கண்டுபிடித்துக் கொண்டு வரும்.

நாமெல்லாம் கடவுளால் படைக்கப்பட்டவர்கள். மனிதர்களால் ஏற்படுத்தப் பட்ட, மனித முறைமை ஒன்று மனித உயிரைப் பறிப்பதற்குத் தகுதியானது என நான் நினைக்கவில்லை. அதுவும் நாமாகவே (போலியாக) தயாரிக்கும் சாட்சியங்களின் அடிப்படையில்.

நான் மேலே சொன்னவற்றைச் செய்தால் நமது நீதித்துறையின் கலாச்சாரத்தில் அது ஒரு திருப்புமுனையாக அமையும்.

*ஆதாரம் : தி நியூ இந்து எக்ஸ்பிரஸ், ஜூலை, 29–2015.*

## 'குடியரசுத் தலைவர்'

**குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியால் தண்டிக் கப்பட்ட அதாவது உயிரை குடிக்கப்பட்டவர்கள்**

**1) அஜ்மல் கசாப், 2) யாகூப் மேமன், 3) அப்சல் குரு**

**அப்சல் குரு நாடாளுமன்றத் தாக்குதலில் குற்றம் சுமத்தப் பட்டவர் அஜ்மல் கசாப் 26/11, என அடையாளப்படுத்தப்பட்ட மும்பை தாக்குதலில் திணிக்கப் பட்டவர்.**

**ஆனால் 2013களில் இந்த இரண்டு தாக்குதல்களையும் அரசுதான் ஏற்பாடு செய்தது என்பதை பின்னர் நமது மத்திய அரசின் அதிகாரிகளே ஒத்துக் கொண்டார்கள். அவர்களின் பெயர் R.V.S. மணி மற்றும் ஷத்திஸ் ஷர்மா.** ஆதாரம் டைம்ஸ் ஆஃப் இந்தியா 14-7-2013

ஆக அப்துல் கலாம் அவர்கள் தன்னளவிலேயே ஓர் ஆய்வை மேற்கொண்டு பல முடிவுகளை எடுத்திருக்கின்றார். அவை நீதித் துறைகளின் வழிகாட்டும் கொள்கையாக என்றென்றும், இருந்திடும் தகுதியைப் பெற்றவை.

ஆனால் இன்றளவும் நமது உச்ச நீதிமன்றமோ, குடியரசு தலைவரோ மக்களின் மனசாட்சி கூட்டு மனசாட்சி அப்சல் குருவை தூக்கிலே போட்டிட வேண்டும் என்பதை எப்படி? எந்த ஆய்வின் அடிப்படையில் கண்டு பிடித்தது என்பதை நாட்டு மக்களுக்குச் சொல்லவே இல்லை. அப்சல் குரு விவகாரத்தில் அப்சல் குரு அவருடைய மனைவி ஆகியோர் மட்டுமல்ல, ஏராளமான மனித உரிமை ஆர்வலர்களும் பல்வேறு கேள்விகளைக் கேட்டுக் கடிதங்களை குடியரசுத் தலைவருக்கு எழுதிக் கொண்டிருந்தார்கள்.

நீதியின் பக்கம் பிரணாப் முகர்ஜி திரும்பியே பார்த்திடவில்லை. அநீதியின் பக்கமே நின்றார்.

### அஜ்மல் கசாபின் கருணை மனு

அஜ்மல் கசாப் என்பவரின் கருணை மனுவும் இதே போல்தான் நிராகரிக்கப் பட்டது. அஜ்மல் கசாப் 17 வயது பாலகன். நேபாளத்திலிருந்து பிடித்து வந்து நமது உளவுத்துறை தன் கைகளில் வைத்திருந்தது.

பின்னர், 26/11 மும்பைத் தாக்குதலில் உயிருடன் பிடிபட்ட ஒரே தீவிரவாதி என உலகுக்கு காட்டப் பட்ட ஓர் அப்பாவி.

இவருடைய விஷயத்திலும் எந்தச் சாட்சியமுமில்லை. கூட்டு மன சாட்சியைத் திருப்திப்படுத்த என தூக்கிலிடப் பட்டவர்களில் அவரும் ஒருவர்.

இவருக்காக ஒரு போலி கருணை மனு தயாரிக்கப்பட்டது. அவரை தூக்கிலே போட்டு 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும் அவருடையக் கருணை மனு எந்த மொழியில் எழுதப்பட்டது என்பதை அரசு இன்னும் தெளிவாக்கிடவில்லை.

**தகவல் பெறும் உரிமை** : Right to Information

லக்னோவைச் சார்ந்த மனித உரிமை ஆர்வலர் குமாரி ஊர்வசி ஷர்மா. இவர் அஜ்மல் கசாப்–இன் கருணை மனுவின் நகல் ஒன்றை தகவல்பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்றார். அது பார்சி – மொழியும், அரபி மொழியும் சேர்ந்த வடிவத்தில் இருந்ததைக் கண்டுபிடித்தார்.


எஸ்.எம்.முஷ்ரிப்

ஆனால் முன்னதாக அஜ்மல் கசாப் – இன் கருணை மனு ஹிந்தி மொழியில் இருந்த–தாகக் கூறப்பட்டது. பின்னர் அஜ்மல் கசாபிற்கு இந்தி மொழியும் தெரியாது என்பது தெரிவிக்கப்பட்டது.

இதற்கோர் வித்தார விளக்கத்தைச் சொன்னார்கள். அது, அஜ்மல் கசாப் சிறை யிலிருந்த நாட்களில் ஹிந்தியைக் கற்றுக் கொண்டான் என்றார்கள். ஆனால் வழக்கின் இன்னொரு கட்டத்தில் அஜ்மல் கசாப்–ஐ யாரும் சந்திக்க அனுமதிக்கவில்லை. சந்தித் தால் அவர்களை அவர் கடித்துக் குதறி விடுவார் என்றார்கள்.

அவனுக்கு ஆங்கிலம் தெரியாது என்பது ஊரறிந்த உண்மை. இந்நிலையில் அவன் சிறையிலிருந்த நாட்களில் ஹிந்தியைக் கற்றுக் கொண்டான். அதிலும் தன் கருணை மனுவை ஹிந்தியில் எழுதும் அளவில் புலமை பெற்று விட்டான் என விட்டார்கள் புருடா. ஆனால் கருணை மனு பார்சியும் அரபியும் கலந்த மொழியில் இருந்தது என்பது பின்னர் தெரியவந்தது.

அஜ்மல் கசாப்–க்கு மரண தண்டனை வழங்கி புனையப்பட்ட தீர்ப்பு 400 பக்கங் களைக் கொண்டது. இந்த நானூறு பக்கத் தீர்ப்பை நான்கே நாளில் படித்து தனது கருணை மனுவை.

நான்கே வரிகளில் வரைந்த மாமேதை அஜ்மல் கசாப் எனக் காட்டிடத் துணிந்தார்கள். கொலை வெறி கொண்ட நமது அதிகார வர்க்கத்தினர்.

இந்த கருணை மனுவும் நமது குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி அவர்களிடமே வந்தது. உடனேயே அதனை நிராகரித்தார்.

கருணை மனுவை நிராகரித்ததற்கு எதிராக நீதிமன்றம் செல்லும் அவகாசம் மறுக் கப்பட்டு, இரகசியமாகத் தூக்கிலிட்டனர். அத்தோடு புதைக்கப்பட்டார்.

இங்கேயும் மக்களின் கூட்டு மன சாட்சியை யார் கணக்கிட்டார்கள், என்பது தெரியவில்லை. கருணை மனு உள்பட அனைத்திலும் நடந்த குளறுபடிகளைக் குடியரசு தலைவர் கண்டுகொள்ளவில்லை. அது அவருடைய கடமையாக இருந்தும் கூட.

இதுவேதான் யாக்கூப் மேமன் வழக்கிலும் நடந்தது.


அஜ்மல் கசாப்

ஆனால் பிரணாப் முகர்ஜி இன்னும் பல கருணை மனுக்களை நிராகரித்திருக்கின்றார். அந்த வழக்குகளில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் குற்றங்கள் ஐயங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டவை. அவர்களில் யாரும் நாட்டு மக்களின் கூட்டு மனசாட்சியை நிறைவு செய்வதற்காகத் தூக்கிலே போடப்பட்டவர்கள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு கருணை மனுநிராகரிக்கப்பட்டவர்களுக்கு அதனை எதிர்த்து நீதிமன்றம் செல்லும் உரிமை கொடுக்கப்பட்டது.

ஆனால் "அஜ்மல் கசாப்"–க்கு அந்த உரிமை பறிக்கப்பட்டது.

உடலையும் யாருக்கும் தெரியாமல் இரகசியமாகப் புதைத்தார்கள்.

யாகூப் மேமன் விவகாரத்தில் உச்ச நீதிமன்றமும் குடியரசு தலைவரும் இரவெல்லாம் விழித்திருந்து தூக்கில் போடும் விவகாரத்தை விரைவுபடுத்தினார்கள். தூக்கில் போட்டார்கள்.

இப்படியொரு மனசாட்சியற்ற – கடமை உணர்வற்றக் காலத்தை கடத்திவிட்டு ஒய்வு பெற்றார் முன்னாள் குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி. இவர் ஜூலை,25–2017 அன்று ஓய்வு பெற்றார்.

அன்றே இராஜ்நாத் கோவிந்த் என்ற சங்கப் பரிவாரத்தைச் சார்ந்தவர் குடியரசு தலைவராகி விட்டார்.

**S.M. முஷ்ரிஃப்,**
**இல்யாஸ் டேவிட்ஷன்**

26/11 என்ற மும்பைத் தாக்குதல்கள் பற்றி முன்னாள் மும்பை காவல்துறை அதிகாரி எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் இரண்டு நூல்களை எழுதினார்கள். ஒன்று கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகம். இன்னொன்று 26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்?

இந்த இரண்டு நுல்களையும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள், நான்குபேர் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டார்கள். அவற்றுள் இல்யாஸ் டேவிட்ஷன் என்ற ஜெர்மானிய ஆராய்ச்சியாளர் டிசம்பர் 13, 2001 நாடாளுமன்ற தாக்குதலும், 26/11/2008 மும்பைத் தாக்குதலும் திட்ட மிட்டதும் செயல்படுத்தியதும் மத்திய அரசுகளே என நிறுவுகின்றனர்.

இப்போது கூறுங்கள் தூக்கிலே தொங்கி இருக்க வேண்டியவர்கள் யார்? யார்?

ஆதாரம் : The Betrayal of India : Elias Davidson

இவர் தலீத் சமுதாயத்தைச் சார்ந்தவர். இதனால் சங்கப்பரிவாரத்தினர், தலீத் மக்களைத் தம் வயப்படுத்திட பெரிதும் உதவுவார் என ஊடகங்களும் சங்கப்பாரிவாரத்தைச் சார்ந்தவர்களும் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

அவர் தலீத்களுக்கு எதிராக இருக்கின்றார் என்பதால் தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பது பலருக்குத் தெரிவதில்லை.

தலீத்கள் தாங்கள் பல நூறு ஆண்டுகளாகத் தீண்டத் தகாதவர்களாகவும், அடிமை களாகவும் நடத்தப்பட்டுவந்ததால் தாங்கள் பொருளாதார ரீதியாகத் தலை நிமிர்ந்து வாழ்ந்திட இயலவில்லை. ஆகவே நாங்கள் சமுதாய வீதியில் விடுதலை தேடி மதம் மாறினாலும் எங்களுக்கு இட ஒதுக்கீடு தந்திட வேண்டும், எனக் கேட்டு வருகின்றார்கள். ஆகவே அவர்கள் தலீத்கள் முஸ்லிம்களாக மாறினாலோ, கிறிஸ்தவர்களாக மாறினாலோ கூட இட ஒதுக்கீடு தரப்பட வேண்டும் எனக் கேட்டு வருகின்றனர்.

இதனை – இந்தக் கோரிக்கையைப் பல்வேறு தளங்களிலும் வன்மையாக எதிர்த்தவர்தான் இந்த ராஜ்நாத் கோவிந்த்.

ஆக இவர் தலீத் களுக்கும், தான் வாழ்நாள் முழுவதும், எதிர்த்தும் – வெறுத்தும் வந்த முஸ்லிம் களுக்கும் எதிராக இருப்பார் என்பதில் ஐயமில்லை.

ஏற்கெனவே நிருவாக இயந்திரமும் – சட்ட

## அப்சல் குருவின் கருணை மனு

அப்சல் குருவின் கருணை மனு 8/11/2006 ஆம் ஆண்டு எழுதப் பெற்றது.

கருணை மனுவில் அவர் கருணைக் காட்டிடச் சொல்லவில்லை. இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 72-ன் கீழ் எழுதப்படும் மனு என்றே குறிப்பிட்டிருந்தார்.

நான் குற்றமிழைத்துவிட்டேன் எனக்குக் கருணைக் காட்டுங்கள் என்று நான் எங்கேயும் கேட்கவில்லை. மாறாக நான் குற்றமற்றவன், கஷ்மீரின் சிறப்புக் காவல் படை, டெல்லியின் ஸ்பெஷல் போலீஸ் இவற்றின் சூழ்ச்சியில் சிக்கிக் கொண்டவன் எனக் குறிப்பிடுகின்றார். ஆகவே எனக்கு நியாயம் வழங்குங்கள் என்றே கேட்கின்றார். கருணைக் காட்டுங்கள் என அவர் கேட்கவில்லை. கடிதத்தில் எனக்கு நீதி கிடைக்காது என்றும் குறிப்பிடுகின்றார்.

ஆதாரம் : The Afzal Petition a Quest for Justice.

மியற்றும் அவைகளும் – நீதித்துறையும் நாட்டின் மிகப்பெரும் சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கெதிராக திரும்பி பல்வேறு இன்னல்களைத் தந்து கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையுடன் இனி குடியரசு தலைவர் கைகோர்த்துக் கொள்வார்.

ஈமானை இறை நம்பிக்கையை சோதிக்கும் சட்டங்கள் பின்வாசல் வழியாகவும் வரும். அவை உடனுக்குடனேயே குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறும். சற்றும் சஞ்சலப் படாமல் எதிர்கொள்வோம். இன்ஷா அல்லாஹ்.

### இங்கே நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும்

இந்தச் சங்கப் பரிவாரக் கும்பலால் சீரழிந்து கொண்டிருப்பது மொத்த இந்தியாவுந்தான். இதனால் இந்தியாவை மீட்கும் மகத்தான பணியை செய்திட வேண்டிய காலக் கட்டம் இது! மக்களே எழுக! இந்தியாவைக் காக்க!! என்ற அழைப்பை முதல் முதலில் முஸ்லிம்கள் முன் வைக்கட்டும்...


காந்தி ஜி கொலை செய்யப்பட்ட தினத்தை முன்னிட்டு வெளிவந்த நூல்




இப்போது பரபரப்பான விற்பனையில்




விலை ரு. 30 மட்டுமே

வேர்கள் பதிப்பகம்,
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887





# மாபெரும் கொலை பாதகனுக்கு மாபெரும் கருணை

குஜராத் கலவரத்தின் போது நரோதா பாடியா என்ற இடத்தில் தங்கள் உயிருக்கு பயந்து ஒரு பாழடைந்ததண்ணீர் இல்லாத கிணற்றுக்குள் ஒளிந்து கொண்டிருந்த 97 முஸ்லிம்களை பெட்ரோல் மற்றும் ரசாயனங்களை கொட்டி எரித்து கொடூரமாகக் கொன்றவன் பாபுபஜ்ரங்கி.

அரசுகணக்கின் படி 97 பேர் என்றாலும் கணக்கில் வராத கொலைகள் பல. இவனுக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை நீதி மன்றத்தால் வழங்கப்பட்டது.

தற்போது நீதிபதிஜி. ஆர்.உத்வானிஎன்பவர் பாபு பஜ்ரங்கிக்கு அளிக்கப்பட்டுள்ள பிணை விடுதலையை (பெயில்) ஒருவாரத்திற்கு நீட்டித்து உத்தரவிட்டுள்ளார். அவருடைய மனைவியின் மருத்துவ சூழல்களை கருத்தில் கொண்டு இந்த பிணை வழங்கப்பட்டது.

பல கொலைகளை செய்து மகிழ்ந்த பாபுபஜ்ரங்கிக்கு யாருக்கும் அளிக்காத கருணை மழையை குஜராத் நீதிமன்றம் சொரிந்துள்ளது. சாகும் வரை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவனுக்கு ஒரு வாரம் பெயில் தந்தால் குற்றமா? என கேட்கலாம்.

ஒருவாரத்திற்கு முன் தான் தன் மனைவியின் கருப்பை கட்டி அறுவை சிகிச்சைக்காக தான் அவருடன் இருப்பது அவசியம் என கோரி பாபு பஜ்ரங்கி பிணை கோரி இருந்தான். நீதிமன்றம் அவனுக்கு பிணை அளித்தது. அது முடிவடைந்த நிலையில் தற்போது அதனை நீட்டித்து தர கோரிய மனுவை ஏற்று நீதிமன்றம் தன் அளவளாவிய கருணையை பாபுபஜ்ரங்கி மீது சொரிந்துள்ளது. அவனுக்கு ஒரு வாரத்திற்கு பிணையை நீட்டித்து உத்தரவிட்டுள்ளது.

இவனுடன் சேர்ந்து குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவித்து வருபவர் மாயா கோட்னானி. இவர் மோடியின் அரசில் கேபினட் அமைச்சர். இவரும் பாபுபஜ்ரங்கியும் சேர்ந்து நீதிமன்றத்தை தங்களின் பிணைகளின் வாயிலாக கேலிக் கூத்தாக்கி வருகின்றனர்.

சிறைச்சாலையிலும் இவன் சொகுசான வாழ்க்கையையே வாழ்ந்துள்ளான். இதன் காரணமாகஇவன் சிறைச்சாலையில் எப்படி இருக்கின்றான் என்பதை ஓர் அறிக்கையாக அளிக்கும்படி சபர்மதி மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு குஜராத் நீதிமன்றம் உத்தர விட்டது.

இருப்பினும் இந்த இருவரும் தொடர்ச்சியாக பிணையில் வெளிவந்த வண்ணம் உள்ளனர். ஜனவரி மாதம் தனக்கு காது கேட்கவில்லை பார்வை தெரியவில்லை என கூறி பாபுபஜ்ரங்கி பிணை கேட்டான். ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதில் இருந்து இதுவரை 16 முறை அதாவது கிட்டத்தட்ட 4 மாதங்கள் பிணையில் வெளியில் இருந்துள்ளான்இந்த கொலைகாரன்.

இதன்மூலம் முஸ்லிம்களை படுகொலை செய்யும் கொலைகாரர்கள் சிறைச்சாலையிலும் வெளியிலும் சுதந்திரமாக உலாவ விடப்படுவார்கள், இது தான் இங்கு கிடைக்கும் நீதி என நமக்கு சொல்லாமல் சொல்லப்படுகிறது.



# நீட் தேர்வு

# போராட்டம் வீறு கொண்டு எழ வேண்டாமா?

தமிழகம் முழுவதும் மாணவர்கள் தங்கள் மருத்துவக் கனவு கலைந்து விட்டதை எண்ணி அனுதினமும் பேசுகிறார்கள். பெற்றோர்களுடன் இணைந்து இந்த அரசை எதிர்த்து முடிந்த அளவு போராடி வருகிறார்கள். தங்களது ரத்தத்தில் கடிதம் எழுதுகிறார்கள்.

மாணவர்கள், பெற்றோர்களின் இந்த முற்றுகையால் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அங்கிருந்து தப்பிச் சென்றார் அமைச்சர் கிருஷ்ணா ரெட்டி

தமிழகத்தில் நீட் எனும் "தேசிய தகுதி மற்றும் நுழைவு தேர்வை" எதிர்த்துக் கடுமையான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்களிக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மசோதாவை உரிய அழுத்தம் கொடுத்து ஜனாதிபதியிடம் ஒப்புதலை வாங்காமல் மோடியிடம் மண்டியிட்டு கிடக்கிறது எடப்பாடி அரசு.

கடந்த 2017, ஜூன் 22-ம் தேதி அன்று தமிழக அரசு ஒரு ஆணை வெளியிட்டது. அதன்படி தமிழக அரசின் சமச்சீர் கல்வியின் கீழ் படித்த மாணவர்களுக்கு 85% இட ஒதுக்கீடு மருத்துவக் கல்லூரிகளில் வழங்கப்படும். அந்த அடிப்படையிலேயே மாணவர் சேர்க்கைப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. ஆனால் இந்த அரசாணையை ரத்து செய்யக் கோரி தமிழகத்தில் சி.பி.எஸ்.ஈ. பாடப்பிரிவில் படித்த மாணவர்கள் 10 பேரின் சார்பில் அவர்களது பெற்றோர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுக்களை விசாரித்த நீதிபதி கே.இரவிச்சந்திரபாபு தமிழக அரசு பிறப்பித்த அரசாணையை இரத்து செய்து கடந்த ஜூலை 14, 2017 அன்று உத்தரவு பிறப்பித்தார். அதில் இடஒதுக்கீடு என்பது சமூக ரீதியாக மட்டுமே வழங்க முடியும் என்றும் மாநிலப் பாடப்பிரிவில் படித்த மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

இதனால் மாநில பாடத்திட்டத்தில் பன்னிரெண்டாம் வகுப்பு படித்த 4.2 லட்சம் மாணவர்களுக்கான 85% இடங்கள் மருத்துவக் கல்லூரிகளில் பறிக்கப்பட்டுள்ளது. இந்த இடங்கள் அனைத்தும் சி.பி.எஸ்.ஈ. பாடத்திட்டத்தில் படித்து தேர்வு எழுதிய 4,675 மாணவர்கள் மட்டுமே செல்லும் நிலை

ஏற்பட்டுள்ளது.

இது "தமிழகத்தில் சமூக நீதிக்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்து என்பதுடன் மாணவர்களிடையே பாகுபாட்டையும் ஏற்படுத்தியிருக்கிறது என்கிறார் மு.க. ஸ்டாலின். மத்திய, மாநில அரசுகளின் இந்தப் போக்கை கண்டித்து ஜூலை 27 அன்று மாவட்ட தலை நகரங்களில் மனித சங்கிலி போராட்டத்தை திமுக அறிவித்துள்ளது. நீட் தேர்வுக்காக தமிழக எதிர்க்கட்சிகள் இப்படி போராட்டம் நடத்துவது சரியான விசயம் என்றாலும் அவை வெறுமனே அடையாளப் போராட்டங்களாக நின்று விடுகின்றன.

இலட்சக்கணக்கான தொண்டர்களைக் கொண்டிருப்பதாக கூறும் இக்கட்சிகள் அரசாங்கத்தையே முடக்கிப் போடுமளவு போராட்டங்கள் நடத்துவதில்லை. சுயநிதிக் கல்லூரிகள் முதலாளிகளிடையே தி.மு.க, அ.தி.மு.க, காங்கிரசு, தே.மு.தி.க என்று எல்லாக் கட்சி முதலாளிகளும் உள்ளனர். கல்வியில் தனியார்மயம் என்பதை கொள்கை அளவில் ஏற்றுக் கொண்ட இக்கட்சிகள் நீட் தீர்வுக்காக இதற்கு மேல் பேசுவது சாத்தியமில்லை என்பதே நிலைமை.

இந்நிலையில், "கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்தின்" கீழ் உள்ள இளநிலை படிப்புகளுக்கு சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவ கல்லூரியில் ஜூலை 19ம் தேதி கலந்தாய்வு தொடங்கியது. அதில் இளநிலை கால்நடை மருத்துவ படிப்புகளில் மாற்றுத்திறனாளிகள், தொழில் பிரிவு மாணவர்களுக்கு கலந்தாய்வு நடந்தது. கால்நடை மருத்துவம் இளங்கலை படிப்பு, பொதுப்பிரிவினருக்கு 20ம் தேதி காலை கலந்தாய்வு தொடங்கியது. இந்த 233 இடங்களுக்கான கலந்தாய்வுக்கு 1,115 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

கலந்தாய்வு நிகழ்ச்சிக்கு கால்நடைத்துறை அமைச்சர் பாலகிருஷ்ணா ரெட்டி வந்திருந்தை அறிந்த மாணவர்கள், பெற்றோர்கள் அரங்கின் முன் அமர்ந்து "நீட் தேர்வுக்கு விலக்கு பெறாததை கண்டித்து" மத்திய அரசு, தமிழக அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர். மாணவர்கள், பெற்றோர்களின் இந்த முற்றுகையால் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அங்கிருந்து தப்பிச் சென்றார் அமைச்சர் கிருஷ்ணா ரெட்டி.

தற்பொழுது அதிமுக அடிமை கைப் பிள்ளைகளுடன் கம்பு சுழற்றிக் கொண்டிருக்கும் கமலோ, "உயர்நிலைப்பள்ளிக் கல்வியைக்கூட முடிக்காதவன் நான் என்பதால் எனக்கு நீட் பிரச்சனை புரியாது" என்று மிகவும் அடக்கமாக கூறியிருக்கிறார். கமலின் கூற்றை நாம் அப்படியே கடந்து சென்று விட முடியாது. நீட் தேர்வை பற்றி பேசுவதற்கு முனைவர் பட்டம் முடித்திருக்க வேண்டும் என நினைக்கிறாரோ???

தமிழகம் முழுவதும் மாணவர்கள் தங்கள் மருத்துவக் கனவு கலைந்து விட்டதை எண்ணி அனுதினமும் பேசுகிறார்கள். பெற்றோர்களுடன் இணைந்து இந்த அரசை எதிர்த்து முடிந்த அளவு போராடி வருகிறார்கள். தங்களது ரத்தத்தில் கடிதம் எழுதுகிறார்கள். இது எல்லாம் கமலுக்கு தெரியாததும் அல்ல. புரியாததும் அல்ல. இருந்தும் மத்திய அரசுக்கு எதிராக எதற்கு கம்பு சுற்ற வேண்டும் என்று சுழற்றிய கம்பை கொஞ்சம் கழற்றி வைத்து விட்டு தன் மகள் டெங்குவால் அனுபவித்த சோக கதையை அவிழ்த்து விட்டு, பிரச்னையை தீர்க்கா விட்டால் ஆட்சியிலிருந்து விலக வேண்டும் என்று கீச்சுகிறார்.

அடிமைகளுக்கு எதிராக கம்பு சுற்றும் கமலாக இருக்கட்டும், பா.ஜ.கவிடம் விலை போயிருக்கும் அதிமுக அடிமைகளாக இருக்கட்டும் யாரும் மோடி அரசை எதிர்க்கப் போவதுமில்லை. மாணவர்களின் "நீட்" பிரச்னையை தீர்க்கப் போவதுமில்லை. ஜல்லிக்கட்டில் நடத்திய மெரீனா எழுச்சியை போன்றதொரு மக்கள் எழுச்சிப் போராட்டம் தான் இந்த டெட்பாடி அரசையும், கார்ப்பரேட் மோடி அரசையும் பணிய வைக்க முடியும்.

ஆனால் மருத்துவ துறை சார்ந்த மாணவர்களோ இன்னமும் மெழுகுவர்த்தி வகைப் பட்ட எதிர்ப்புக்களையே தெரிவிக்கிறார்கள். நோயின் மூலத்தை புரிந்து கொள்வதும் அதற்கு என்ன மருந்து தேவை என்பதை பயன் படுத்துவதுமே நீட் நோயைப் போக்குவதற்கு பயன்படும்.

எது முதலில்?

# தர்பியா எனும் நன்னடத்தைப் பயிற்சி வழங்குவதற்கே முதலிடம்

சென்ற இதழ் தொடர்ச்சி......

இஸ்லாமியக் களத்தில் உழைத்துக் கொண்டிருக்கும் பலர் குறிப்பாக வீரதீரத்துடன் உழைக்கும் சிலர் “இஸ்லாமிய ஷரீஅத்தை நடைமுறைப்படுத்துவதற்கே முதலிடம் தர வேண்டும்” என்கின்றனர்.

அதாவது இஸ்லாமிய தண்டனைச் சட்டங்களை செயல்பாட்டில் கொண்டு வர வேண்டும் என்கின்றனர்.

இது இஸ்லாத்தின் ஒரு பகுதிதான். இதை புறக்கணிப்பதோ அக்கறையின்றி இருப்பதோ சரியல்ல என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

எனினும் சிக்கல் என்னவென்றால் இதை ஒரு லட்சியமாகவும் அதிமுக்கியப் பிரச்சனை யாகவும் முதல் குறிக்கோளாகவும் கொண்டு சென்றால் இஸ்லாமியப் பணிகள் மீதும்இஸ்லாமியச் சிந்தனைகள் மீதும் தவறான விளைவுகள் ஏற்படும்.

இஸ்லாத்தின் எதிரிகள் மக்களைக் குழப்ப வழி ஏற்பட்டுவிடும். இஸ்லாம், தஅவா, ஷரீஅத் ஆகியவற்றைப் பற்றிய விவாதங்களை நலிவுறச் செய்து விடும்.

மேலும் சட்டங்கள் மட்டுமே சமுதாயங்களை உருவாக்கு வதில்லை. கட்டமைத்து விடுவதுமில்லை. தர்பியா எனும் நன்னடத்தைப் பயிற்சியும் நல்ல பண்பாடுகளும் தான் சமுதாயங்களை உருவாக்குகின்றன.

பின்னர் சட்டங்கள் என்பவை அந்த சமுதாயங் களைக் காக்கும் அரணாக வும் வேலியாகவும்தான் வருகின்றன.

எனவே “நன்னடத்தை கீழ் சமுதாய உருவாக்கம்” என்ற லட்சியத்துக்காக நம் உழைப்பு சிந்தனை அனைத்தையும் வழங்க வேண்டும்.

காலத்துக்கு ஏற்ற முழுமையான இஸ்லாமிய தர்பியாவே லட்சியம், குறிக்கோள் அதற்கான



இமாம் யூசுப் அல்கர்லாவி

களங்களும் பணிகளும் நபர்களும் உருவாக்கப்பட வேண்டும்.

பால்ய பருவத்திலிருந்து தொடங்கி இடைவிடாமல் தொடர்ச்சியாக பல்கலைக் கழகம் வரை எல்லா நிலைகளிலும் எல்லோருக்கும் தர்பியா வழங்கப்பட வேண்டும்.

இஸ்லாம் ஒரு முழுமை யான மார்க்கம் அதன் சட்டங்கள் நீதியானவை. அதன் வேதம் அற்புத மானது. அதன் திருத்தூதர் மேன்மை மிக்கவர். அதன் நாகரிகம் நிகரற்றது.

முஸ்லிம் சமுதாயம் உலகம் உள்ளவரை இருக்க வேண்டிய சமுதாயம். இந்த சன்மார்க்கம் இன்றி உலக வாழ்க்கை சாத்தியமில்லை என்பதெல்லாம் எல்லா வழிகளிலும் போதிக்கப்பட வேண்டும்.

ஆடியோ, வீடியோ சாதனங்கள், மாணவர் களைக் கவரும் வழிகள், சலிப்பில்லாத போதனை முறை என எல்லா வழிகளும் பயன்படுத்தப்பட வேண்டும்.

மார்க்கப் பாடம் இஸ்லாமிக் ஸ்டடீஸ் என்ற அளவோடு இதை நிறுத்திவிடக் கூடாது பொது அறிவு, இலக்கியம், மொழிப்பாடம் அனைத்தின் வழியாகவும் தர்பியா நடக்க வேண்டும்.

கல்லூரிகளுக்கு அப்பால் பொது வெளிகளிலும் நடக்க வேண்டும். அப்போது தான் உன்னதமான ஒரு தலைமுறையை உருவாக்க முடியும்.

அதே நேரத்தில் இந்தத் தலைமுறை வாழ்க்கைக்கு உதவாத வெற்றுத் தத்துவங்கள் உலகாயதக் கோட்பாடுகள் ஆன்மிகத் தைதத் துறந்து மனம் போன போக்கில் வழர்தல் ஆகியவற்றுக்கு எதிரே உறுதியாக நின்று வாழும். அல்லாஹ்.. மனிதன், வாழ்க்கை, மார்க்கம், உலகம், பேரண்டம் குறித்தெல்லாம் இஸ்லாம் கொண்டிருக்கும் நிலைப்பாட்டுக்கு எதிரான கொள்கைகளையும் எதிர்த்து நின்று இஸ்லாமிய விழுமங்களின்படி வாழும்.

இப்படிப்பட்ட தரமான தலைமுறை உருவாக்கப்பட வேண்டும்.

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். தனி மனித வாழ்விலும் ஒரு சமுதாயத்திலும் தன் வாழ்வில் மிகப் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கலைகள் அது. அறிவை, அன்பை, நற்சுவையை ஏற்படுத்தக் கூடியது. எனவே அதற்கும் களங்கள் உருவாக்கப்பட வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் இது இஸ்லாத்தின் மீது நம்பிக்கையற்றவர்களின் கைகளுக்குப் போய் விடக்கூடாது.

அன்றாடப் பழக்க வழக்கங்கள், கோட்பாடு, நன்னடத்தை இவற்றிலெல்லாம் முஸ்லிம் சமுதாயமோ ஒரு முஸ்லிம் தனி மனிதனோ மற்ற வர்களிடம் பாடம் பயிலும் நிலை ஏற்படக் கூடாது.

கலைகள் என்பவை பொதுமக்களின் சிந்தனையிலும் உள்ளத் திலும் மாற்றங்களை ஏற்படுத்தவல்லவை.

எனவே இரண்டு வகையாக நாம் கலை களைப் பயன்படுத்த வேண்டும்.

**ஒன்று** : எல்லாத் துறைகளிலும் எல்லாத் தரங்களிலும் இஸ்லாமியக் கலைஞர்கள் உருவாக்கப்பட வேண்டும்.இவர்கள் முடிந்த அளவுக்கு தம் கலைகள் வழியாக இஸ்லாத்தையும் நிகழ்காலத்தையும் எடுத்துக் காட்டுவதில் வல்லவர்களாக இருக்க வேண்டும்.

பாடகர்கள், மேடை (தியேட்டர்)யில் தோன்றி மகிழ்விப்பவர்கள் கருத்தான காட்சிகளை வடிவமைப்பவர்கள் என அனைவரும் கலைஞர்கள் தான். எல்லா மட்டங்களிலும் முஸ்லிம் கலைஞர்கள் உருவாக்கப்பட வேண்டும்.

கதையாசிரியர்கள், அதைத்திரைக்கதையாக உருவாக்குபவர்கள், திரைப் படம் எடுப்பவர்கள், ஒளிப் பதிவாளர்கள் அதை வெளி யிடுபவர்கள் அனைவரும் கலைஞர்கள்தான். எல்லாத் துறைகளிலும் நமக்கு ஆள் தேவைப்படுகிறது.

இவை அவ்வளவு எளிதான வேலை இல்லை. இவற்றில் மார்க்கம் ஏற்பவையும் உண்டு, ஏற்காதவையும் உண்டு.

ஷரீஅத் எனும் மார்க்கத்தின் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நாம் செயல்பட வேண்டும். மார்க்கம் அனுமதிக்கும் எல்லை வரை



நாம் அக்கலைகளைப் பயன்படுத்த வேண்டும்.

முதலில் எந்த நோக்கத்துக்கு இதைப் பயன்படுத்தப் போகிறோம் என்று தெளிவாக வரையறுத்துக் கொள்ள வேண்டும். பிறகு எந்தக் கலைகளெல்லாம் அதற்குப் பயன்படும் என்று பார்க்க வேண்டும். பிறகு எவ்வளவு தூரம் அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்று திட்டமிட வேண்டும்.

**இரண்டாவது**

கலைத் துறையில் உள்ள கலைஞர்களிடம் செய்ய வேண்டிய சீர்த்திருத்தம். சினிமாத்துறையில் முஸ்லிம்களும் உள்ளனர். அவர்கள் தொழுகின்றனர், நோன்பு வைக்கின்றனர்.

தாம் செய்யும் தொழில் இஸ்லாத்துக்கு எதிரானது அல்ல என்றே அவர்கள் நினைக்கின்றனர். அவர்கள் பெற்றிருக்கும் போதனை களின்படி அப்படி நினைக்கின்றனர்.

இதனால் அல்லாஹ்வின் கோபத்துக்கு நாம் ஆளாக மாட்டோம் என்று நினைக்கின்றனர்.

அவர்களுள் சிலர் தாம் செய்வது தவறு என்று விளங்கிக் கொண்டாலும் வாழ்வும் வாழ்க்கையும் அதுவே என்றாகிவிட்ட சூழலில் அதிலேயே தம்மைத் தொலைத்து விடுகின்றனர்.

இவர்களுக்கு சன்மார்க்கத்தைப் பற்றி சரியான புரிதலை ஏற்படுத்த வேண்டும். சினிமாவில் அவர்கள் செய்துள்ள மார்க்கத்துக்கு முரணான பாவங்களுக்காக அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கேட்க செய்ய வேண்டும். இவர்கள் இஸ்லாத்தையும் அதன் மேன்மைகளையும் பிரச்சாரம் செய்பவர்களுடன் இணைந்திட வழி ஏற்படுத்த வேண்டும்.

நடிகர், நடிகையர் பலர் கடந்த பல ஆண்டுகளாக மனம் திருந்தி வருவதை நான் பார்க்கிறேன். ஆனால் அவர்கள் தனது கலையை யும் கலை சார்ந்தவர் களையும் விட்டு அறவே ஒதுங்கி விடுகின்றனர்.

இதைவிடச் சிறந்தது என்னவென்றால் அதிலேயே அவர்கள் நிலைத்திருந்து உமர் (ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு என்ன கூறினார்களோ அதுபோல கூற வேண்டும்.

உமர் (ரழி) கூறினார்கள்

“எந்த இடத்திலெல்லாம் நான் ஜாஹிலிய்யாவை முழங்கிக் கொண்டிருந் தேனோ அங்கெல்லாம் இஸ்லாத்தை முழங்காமல் விட மாட்டேன்”

தவறுகளிலிருந்து திருந்தும் ஒவ்வொரு கலைஞனும் இதுபோல் பிரகடனம் செய்திட வேண்டும்.

எனினும் அனனவரின் ஒத்துழைப்பில்லாமல் பெரும் பிரயத்தனமில்லாமல் இதைச் சாதிக்க முடியாது.....

# சர்வதேச யோகா தினத்தில் சாலையில் சாவாசனம் நடத்திய விவசாயிகள்



ஜூன் 21ம் தேதி3வது சர்வதேச யோகா தினம் கொண்டாடப் பட்டது. நரேந்திர மோடி உத்தரபிரதேச முதல் யோகிஆதித்யநாத்துடன் சேர்ந்து யோகா செய்து காட்டி மக்களை பரவசப் படுத்திக் கொண்டிருந்த வேளையில் நாட்டின் பலபகுதிகளிலும் விவசாயிகள் தாங்கள் செத்த பிணங்களாக வாழ்ந்து கொண்டிருப்பதை வெளிக்காட்டும் விதத்தில் தெருக்களில் சாவாசனம் செய்தனர். சாவாசனம் என்பது யோகாவில் எல்லா யோகாவையும் செய்து முடித்த பின்னர் கை கால்களை அசைக்காமல் செத்தபிணம் போல படுத்திருப்பது.

மத்திய பிரதேசம் போபா லில் இந்த போராட்டம் களை கட்டியது. மத்திய பிரதேசத்தில் ஆளும் பிஜேபி அரசு போராட்டம் நடத்திய விவசாயிகள் மீது துப்பாக்கி சூடு நடத்தி 5 விவசாயி களை கொலை செய்தது. அதன் கோபம் அங்கு நன்கு வெளிப்பட்டது.

உத்தர பிரதேசத்திலும் அரியானாவிலும் பாரதீய கிஷான் யூனியன் (பாரதீய விவசாயிகள் சங்கம்) இந்த போராட்டத்தை முன்னின்று நடத்தியது. விவசாயிகளுக்கு இதே நிலை நீடித்தால் ஹரியானா அரசுக்கு 2019ல் சிரசாசனம் தான் நடக்கும் என்று இந்த சங்கம் எச்சரித்தது. சிரசாசனம் என்பது தலை கீழாக தலையில் நிற்பது. அதாவது ஆட்சி தலை கீழாக கவிழ்ந்து போகும் என விவசாயிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இந்த போராட்டம் உலகத்தின் கவனத்தை இந்தியவிவசாயிகள் மீது ஈர்க்கநடத்தப்பட்டது என விவசாயிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

செய்திஆதாரம்: http://indiatoday.intoday.in/story/international-yoga-day-farmers-shavasana-in-protest/1/983709.html

# சமூக நலனில் பெண்கள்

## பாகம்-3



**மே மாதம் தொடர்ச்சி ........**

இறைவன் தன் திருமறையில் என்ன சொல்கிறான்? (62 : 4–வது வசனத்தில் ) என்று பார்த்தோமானால்...

இறைவனை விட அழகிய உதாரணம் கூற யாராலும் முடியாது.

ஆம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இறைவன் இந்த வேதத்தை நமக்கு வழங்கிய பின்னரும், இன்னும் நாம் நம் பொறுப்பை சரியாக உணராமல்தான் இருக்கிறோம். பெண்களில் அதிகம் பேர் முன்பெல்லாம் இந்த குர்ஆனை ஓர் அழகிய உரை விட்டு பத்திரமாக மூடி அப்படியே வைத்து விடுவார்கள். ரமளான் மாதம் வந்து விட்டால் மாத்திரம் அதை எடுத்து ஓதுவார்கள். எப்படி ஓதுவார்கள்? அது என்ன அதிலே என்ன இருக்கிறது? எதற்காக குர்ஆனை அல்லாஹ் நமக்கு இறக்கித் தந்தான் எதுவுமே தெரியாமல், தெரிய முயற்சிக்கவும் செய்யாமல், ரமளானில் குர்ஆன் ஓத வேண்டும் இது மட்டுமே ரமளான் முடிந்ததும், மீண்டும் குர்ஆன் உறைக்குள் சென்று விடும். அடுத்த ரமளானை எதிர்பார்த்துக் கொண்டு.

ஆண்களை எடுத்துக் கொண்டால் மிக அதிகம் பேருக்கு குர்ஆன் ஓதவே தெரிவதில்லை.

இன்னும் சிலர் எல்லாம் தெரிந்தும், அதை மற்றவருக்கு சொல்லி கொடுக்கவோ ஏன் தன் வாழ்க்கையிலே செயல்படுத்தவோ முன் வருவதில்லை. இப்படி நாம் வாழ்வதால் இது ஒரு பலனற்ற வாழ்க்கைதான்.

நபி (ஸல்) அவர்கள், “இந்த குர்ஆனைப் பற்றி பிடித்து (அதன் வழியில்) நடந்தால் நாம் வழி தவற மாட்டோம்” என்றார்கள்.

“இந்தக் குர்ஆன் முற்றிலும் நேரான நல் வழியைக் காட்டுகிறது” (17:9)

மேலும் “இந்தக் குர்ஆன் தீமையை விட்டு, நன்மையை பிரித்து அறிவித்து தெளிவுபடுத்தக் கூடியதாக இருக்கிறது. ( 2 : 185 )

ஆக ஒரு மனிதன் (ஆண், பெண்) இறைவன் கூறிய முறைப்படி தன்னை அழைத்துக் கொள்ள வேண்டும் என்றால் அது குடும்ப வாழ்விலும் சரி, சமூக வாழ்விலும் சரி குர்ஆன்னோடு தன்னை ஐக்கியமாக்கிக் கொள்ள வேண்டும்.

ஏனென்றால் இறைவன் கூறுகிறான்

“மனித குலத்திற்காக தோற்றுவிக்கப்பட்ட சமுதாயத்தில் சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள், நன்மையை ஏவுகிறீர்கள், தீமையை தடுக்கிறீர்கள், அல்லாஹ்வை நம்புகிறீர்கள் (3:10)

ஆக இந்த குர்ஆனை உணர்ந்ததின் காரணத்தால் நம்மிடம் பல நல்ல மாற்றங்கள் வருகிறது.

சமூக அக்கறையில் முதல் முக்கிய பணியே இந்த நன்மையை ஏவி தீமையை தடுப்பதாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

“பாதையில் நீங்கள் செல்லும்போது அங்கே மக்களுக்கு தீங்கு தரும், கல், முள் இவைகள் கிடந்தால் அதை அகற்றிவிட்டு செல்வதும் கூட தர்மமாகும்” என்று இந்த விஷயத்தில் நம்மில் அதிகம் பேர் அசட்டையாக இருக் கிறோம். முதலில் இந்த சின்ன விஷயத்தில் இருந்து நம் சமூக பணியை தொடங்க வேண்டும்.

இதனால் பல விபத்துகள் தடுக்கப்படலாம். எந்த அமலையும் நாம் அலட்சியமாக கருதக் கூடாது. அதுவே நமக்கு சொர்க்கத்தின் பாதையை இலேசாக்கலாம்.

இன்னும் பார்த்தோமேயானால் இன்று மது கடைகளை மூடக்கோரி நாடெங்கும் போராட் டங்கள் நடைபெறுகிறது. இதில் மிக முக்கிய பங்கு வகிப்பது பெண்களே, காரணம் என்ன வென்றால், வீட்டு ஆண்கள் குடித்துவிட்டு வருவதால் உடல் ரீதியாகவும், பொருள் ரீதியாகவும் மன ரீதியாகவும் பெரிதும் பாதிக் கப்படுவது பெண்களே. வேறு எந்த மத ரீதியான சித்தாந்தங்களிலும் மதுவை இவ்வளவு வன்மை யாக கண்டிக்கவில்லை இஸ்லாத்தைத் தவிர.

ஆனால் மனிதர்களைப் படைத்து காத்து வரும் இறைவன், அவன்படும் பாட்டையும் அறிந்தவண்ணமே இருக்கிறான்.. இதனாலே நன்மையை ஏவுங்கள் தீமையை தடுவுங்கள் என்று நபி (ஸல்) கூறினார்கள்...

“உங்கள் முன்னே ஒரு தீமை நடந்தால் முதலில் அதை கையால் தடுத்து நிறுத்துங்கள், முடியவில்லையா, வாயால் கூறி தடுங்கள், அதுவும் முடியவில்லையா மனதால் வெறுத்து ஒதுக்கி பேசாமல் இருந்து விடுங்கள் . இதுதான் ஈமானில் பலகீனமான நிலை என்றார்கள்”.

ஆனால் இன்று இஸ்லாமிய சட்டங்கள் நடைமுறையில் இல்லாமல் போனதால், மது அருந்துபவனும், மது கடை நடத்துபவர்களும் பத்திரமாக இருக்க அதற்கு எதிராக போராடு பவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள்

இதுவெல்லாம் அநியாயங்கள். இஸ்லாமிய சட்டங்கள் நம் வாழ்விலே நம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டது பின்பற்றபடுமேயானால், எந்தவித போராட்ட களம் இன்றி தானாகவே இவையெல்லாம் தடை செய்யப்படும்.

மதுவிற்காக மட்டும் போராடும் பெண்கள் சமுதாயத்தில் நடமாடும் எல்லா தவறுகளுக் காகவும் போராட வேண்டும்.

வட்டி, ஒழுக்கக் கேடு, பாலியல் வன்கொடுமைகள் சினிமாவினால் ஏற்படும் சீரழிவுகள் அனைத்திற்காகவும் களம் காண வேண்டும். இதற்கு, ஒரு பெண்மணியை உதாரணமாக பார்க்கலாம்.

மூஸா (அலை), நபியுடைய காலத்தில் வாழ்ந்த கொடுங்கோலன் “ஃபிர்அவ்ன்”. இவன், அவனது காலத்தில் வாழ்ந்த மக்களிடம் நீங்கள் என்னைத்தான் வணங்க வேண்டும். “நான் தான் உங்கள் இறைவன்” வேறு எந்த கடவுளையும் நீங்கள் வணங்கக் கூடாது என்று கூறி பல உயிர்களையும் கொன்று குவித்தான்.

சர்வாதிகார ஆட்சிப் புரிந்துக் கொடுமை களை கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருந்தான்.

அவனது வீட்டில் உள்ள கஜானாக்கள் நிரம்பி இருந்தது. வசதி வாய்ப்புகள் அளவில் சொல்ல முடியாததாக இருந்தது. அவனுக்கு ஒரு மனைவி இருந்தார். அவர்கள்தான் “ஆஸியா” (அம்மாள்) அவர்கள் இவ்வளவு வசதி வாய்ப்புகள் இருந்தும், இந்த பெண்மணிக்கு எது சத்தியம், எது அசத்தியம் என்பது தெரிய வந்ததும் அதன் பிறகு அவர்கள் கணவனை யோ இந்த இன்பங்களையோ விரும்பவில்லை. எல்லாவிதமான தவறுகளையுமே வெறுத் தார்கள். உலகத்தைவிட மறுமையே சிறந்தது என நினைத்தார்கள்.

அவர்கள் இறைவனிடத்தில் செய்த பிரார்த்தனை

“என் இறைவா! சொர்க்கத்தில் எனக் கொரு வீட்டை எழுப்புவாயாக! ஃபிர்அவ் னிடமிருந்தும், அவனது சித்ரவதைகளிலி ருந்தும் என்னைக் காப்பாயாக! அநீதி இழைத்த கூட்டத்திலிருந்தும் என்னைக் காப்பாயாக! என்று ஃபிர்அவ்னின் மனைவி கூறியதால் அவரை நம்பிக்கை கொண்டோருக்கு அல்லாஹ் முன்னுதாரணமாகக் கூறுகிறான்” *(66:11)*

இன்று மதுவிற்காக போராடும் நாம், நாம் பாதிக்கப்பட்டதால் நமக்கு தீங்கு, கஷ்டம் ஏற்பட்டதால் கணவனோடு அடி, உதை என்ற நிலை ஏற்ப்பட்டதால்தான் இன்று போராட

துணிகிறோம். இன்றைய பெண்கள், உங்கள் போராட்டங்கள் 2–வது இருக்கட்டும், முதலில் உங்கள் கஷ்டங்களை கண்ணீரோடு இறை வனிடம் முறையிட்டீர்களா? என்பதை முதலில் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

சில பெண்கள் என்ன செய்கிறார்கள் என்றால், வசதி வாய்ப்புகள் அதிகம் இருக்கும். ஆனால் கணவனிடம் குடி பழக்கமும் இருக்கும். அதை அவர்கள் பெரிதாக கண்டுக் கொள்வதில்லை. என்னவாவது செய்து கொண்டுப் போகட்டும், நமக்கு வசதியான வாழ்க்கை கிடைத்ததே அதுவே போதும் என்று இருக்கிறார்கள்.

நம் கணவர் நாளை இறைவனிடம் பதில் சொல்ல வேண்டுமே, இது கெட்டப் பழக்கம் அல்லவா? இறைவனிடம் தண்டனையை பெற்று தருமே, நமக்கு வசதி வாய்ப்பை தந்து நம்மைநன்றாகவாழவைத்துக்கொண்டிருக்கும் நம் கணவர் நாளை தண்டனை பெறாமல் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் சுயநலத்தோடு வாழ்ந்துக் கொண்டு இருக் கிறார்கள்.

இன்னும் சிலர் பல நாளாக சண்டை, கொடுமை, தாங்க முடியாமல் தீமை, தீமை என்று இஸ்லாம் கூறுகிறது என்று சொல்லும் போதெல்லாம் காது கொடுத்தே கேட்காமல், இன்று தனக்கு ஆபத்து என்றவுடன், வீதியில் இறங்கி போராடுகிறார்கள்.

ஆனால் இந்த ஃபிர்அவ்னின் மனைவி எவ்வளவு அழகிய பெண்மணி, மொத்தத்தில் இந்த உலகை விட, மறுமையே மேல் அங்கேயே எல்லாம் வேண்டும் என்று வேண்டிக் கொண் டார்கள். பெண்கள் அனைவரும் இவர்களை முன்மாதிரிகளாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதேபோல் சத்தியம் எது என்பதை தெரிந்த பிறகு சுமைய்யா (ரழி) அவர்கள் தன் உயிரையும் கூட துச்சமாக மதித்து சமூக அக்கறையுடன் ஒவ்வொரு விஷயத்திலும் செயல்பட்டார்கள். பெண்களும், ஆண்களுக்கு சளைத்தவர்களல்ல என்று தன் பொருளாலும், உடலாலும், உயிராலும் சத்தியத்திற்காக உழைத்தார்கள். இறுதியில் கொடுங்கோலர்கள் மிக கொடூரமான, மோசமான முறையில் இவர்களை அம்பு எய்தி கொன்றார்கள்.

அவர்கள் இங்கு சித்ரவதை, கஷ்டங்களை அனுபவித்து இருந்தாலும், மறுமையில் அல்லாஹ்வால் பொருந்திக் கொள்ளப்பட்டு அழகிய சொர்க்கத்தில் இருப்பார்கள்.

மது–வை குறித்து ஒரு சம்பவம் “முன்பு ஒரு காலத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம். ஒரு நல்ல மனிதர் ஒருவர் சில திருடர்களால் கடத்தப்பட்டு சிறை வைக்கப்படுகிறார். அப்போது ஒரு திருடன் சொல்கிறான் ‘கொஞ்சம் மது–வை குடி உன்னை விட்டு விடுகிறோம் என்ற சொல்ல ( அவரிடம் இருந் தவைகள் சூறையாடப்பட்டுவிட்டது முதலில்) அவர் மறுத்து விடுகிறார்.

2–வது திருடன் ஒரு குழந்தையைக் காட்டி இவனை கொலை செய் உன்னை விட்டு விடுவோம் என்று கூற, அதற்கும் அவர் மறுத்து விடுகிறார்.

3–வது திருடன் ஒரு பெண்ணைக் காட்டி இவளை நீ களங்கப்படுத்த வேண்டும், உன்னை விட்டு விடுவோம் என்று கூற அதற்கும் அவர் மறுத்து விடுகிறார்.

எதையாவது ஒன்றை செய்துவிட்டு இங்கிருந்து நீ போ என்ற நிர்பந்திக்க அவர் மது–வை குடித்துவிட்டு தப்பித்து விடுவோம் என்று முடிவு செய்து, மது–வை குடிக்கிறார். ஆனால் முடிவு என்ன ஆகிறது தெரியுமா?

மது செய்த போதை–யின் விளைவாக, அந்த பெண்ணை களங்கப்படுத்தி, அதை பார்த்த குழந்தையையும் கொலை செய்து, நரகத்தை தனக்காக்கிக் கொண்டார்.

ஆக இவ்வளவு பெரிய கொடூரங்களுக்கு மூல காரணமாக அமைந்த இந்த மதுவை ஒழிக்க சுயநலம் பாராமல் பொதுநலத்தோடு சமூக அக்கறையோடு ஒன்றிணைந்து செயல் படவேண்டும். இன்றைய காலத்திலும் பல சமூக அக்கறை உள்ள பெண்கள் வாழ்கிறார்கள்.

உதாரணமாக பார்த்தோமேயானால் பிரிட்டன் என்ற ஆங்கில நாட்டைச் சார்ந்த பெண் பத்திரிகையாளர் “யுவான்னி ரிட்லி” (ஆயிஷா ரிட்லி).

இவர் பத்திரிகை துறையில் மிக ஆர்வத் தோடும், துணிச்சலோடும் பல பட்டங்கள் பெற வேண்டும், மிக பிரபல்யமாக புகழ் பெற்றும் திகழ வேண்டும் என்று பணி ஆற்றியவர். எந்த பிரச்சனையாக இருந்தாலும் தன் கடுமையான முயற்சியால், எவ்வளவு சிக்கலான காரியமாக இருந்தாலும், எடுத்த காரியத்தை செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.

இவரும் இஸ்லாத்தையும், முஸ்லிம்களை யும் தவறாகவே புரிந்து கொண்டிருந்தார். அப்போது செப்டம்பர் 11ஆம் நாள் 2001–ஆம் ஆண்டு அமெரிக்காவின் இரட்டை கோபு ரங்கள் தகர்க்கப்பட்டது. எப்போதும் போல் பழி முஸ்லிம்கள் மீது போடப்பட்டது. இந்த சமயத்தில் இந்த விஷயத்தை அறிந்த 'யுவான்னி ரிட்லி' அவர்கள் அமெரிக்கா சென்று சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட விரும்புகிறாள். (கனத்த மனத்தோடும், நிறைய சந்தேகங்களோடும்) ஆனால் அவர் வேலை பார்க்கும் நிறுவனம், அவரை வேறு இடத்திற்கு உடனே செல்ல உத்தர விடுகிறது.

இவர் மனம் இல்லாமல் தன் உறவுகளையும் பிரிந்து அங்கே செல்ல ஆயத்தமாகிறார். இவருக்கு ஏற்கனவே ஒரு ஆசையும் உண்டு. அது என்னவென்றால் தாலிபான்களால் மறைத்து வைத்திருக்கப்பட்டிருப்பதாகக் கூறப் பட்ட பின்லேடன் அவர்களைச் சந்திக்க வேண்டும், அவரைப்பற்றி எழுத வேண்டும். அதன்மூலம் பத்திரிகை உலகில் இன்னொரு சாதனையை நிகழ்த்த வேண்டும் என்பதாகும்.

அப்போது கிடைத்த வாய்ப்பு பாகிஸ்தான் செல்வதாகும். இவர் பாகிஸ்தான் சென்று அங்கிருந்து, ஆப்கானிஸ்தானுக்கும் சென்றார். யுவான்னி ஒரு பத்திரிகையாளர் நம்மை உளவுபார்க்க வந்திருக்கிறார் என்ற தகவல் தாலிபான்களுக்கு கிடைக்கிறது.

யுவான்னி தாலிபான்களால் சிறைப்பிடிக் கப்படுகிறார். அவர் சிறை பிடிக்கப்பட்ட நாள் முதல் விடுவிக்கப்பட்ட நாள்வரை தாலி பான்களின் நடவடிக்கைகளை கவனிக்கிறார். அமெரிக்கர்கள் சிறைக் கைதிகளை எப்படி சித்ரவதை செய்வார்களோ, அதற்கு நேர் எதிராக, தாலிபான்கள் சிறைக் கைதிகளை (தன்னையும்) கண்ணியத்தோடும், கனிவோடும் இரக்கத்தோடும் நடத்துவதை கண்டு உள்ளம் நெகிழ்ந்து போகிறாள்.

உலக அளவில் இவர்கள் மீது சொல்லப் படுவதெல்லாம் வீண் பழிகளே என்பதை ஆணித்தரமாக உணர்கிறாள், யுவான்னி ரிட்லி.

இஸ்லாத்தை அறிய முற்படுகிறாள். விளைவு இறுதியில் தன்னை முஸ்லிமாகவே மாற்றியும் கொள்கிறாள். இவரை ஆப்கானில் வைத்து கொன்று விட்டு அந்த பழியையும் தாலி பான்கள் மீது போட்டுவிடலாம் என அமெரிக்க உளவுத்துறை அமைப்புகள் பல திட்டங்களை தீட்டுகிறார்கள். அதில் எல்லாம் இருந்து தன்னை தற்காத்துக் கொண்டும், சுதாரித்துக் கொண்டும், தாலிபான்களை பிரிந்த மன கஷ்டத்தோடு அமெரிக்க வருகிறார். பின்னர் இஸ்லாமிய சட்டங்களை ஆர்வமாக அறிந்து கொண்டு அதன்படி வாழ ஆரம்பித்து, பல நாடுகளில் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம்களுக்கு பல உதவிகளை செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவரைப் பார்த்தும் நாம் பாடங்கள் படிக்க வேண்டும். சமூக அக்கறையோடும், மார்க்க சிந்தனையோடும், அல்லாஹ்வும் அவன் தூதர் காட்டிய வழியிலும் நாம் நம் வாழ்க்கையினை அமைத்துக் கொள்ள வேண்டும்.

நன்மையான விஷயங்களில் ஆண்கள், பெண்கள் போட்டி போட வேண்டும். நம் முடைய பொறுப்புகளை நம்மை படைத்ததன் நோக்கத்தை உணர்ந்தும் நம் வாழ்க்கையை நாம் வாழ வேண்டும். இதன்மூலம் இறைவன் நம் அனைவருக்கும் இரு உலக வெற்றியையும் தருவானாக! ஆமீன்... ஆமீன்...

**குறிப்பு : இந்த யுவான்னி ரிட்லி (ஆயிஷா ரிட்லி) இஸ்லாம் தனக்கு மட்டும் உரிய மார்க்கம் அல்ல, ஒட்டுமொத்த உலகிற்கும் உரியது என்பதை தெளிவாக புரிந்துகொண்டதும், நன்மையை ஏவுவதும், தீமையை தடுப்பதும் தனக்கும் கடமைதான் என்பதையும் உணர்ந்து, அழைப்பு பணியை முழு மூச்சாக செய்கிறார்கள். பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு வருகிறார்கள். அல்ஹம்து லில்லாஹ். ●**

– நாதிரா அஸ்ரஃபியா




# மொழி பரிணாமத்தின் முட்டுக்கட்டான நிலை!

The Impasse of language Evolution

பரிணாமத்தின் அடிப்படையில் மனித இன வரலாற்று கதைகளை விளக்கிடும் போது சில முக்கிய பிரச்சனைகளை பரிணாம வியலாளர்கள் எதிர்நோக்குகிறார்கள். அவற்றில் ஒன்று எவ்வாறு மனித மனம் உருவாகியது. இரண்டு பேச்சின் தோற்றம் - மனிதனை மற்ற உயிருள்ள ஜீவராசிகளில் இருந்து வேறுபடுத்தும் ஒரு பண்பு.

நாம் பேசும் போது நம்முடைய எண்ணங்களை பிரதிபலிக்கிறோம். மேலும் மற்றவர் அதை புரிந்துகொள்ளும் அளவிற்கு வெளிப்படுத்துகிறோம். எனினும் இவ்வாறு பேசுவதற்கு கழுத்து மற்றும் நாக்கு போன்ற சில முக்கிய தசைநார்களின் தனித்தன்மையான அசைவுகள் தேவைப்படுகின்றது. இவற்றை நாம் உணர்வதில்லை.

100 வெவ்வேறான தசைகளின் ஒத்திசைந்த செறிவு மற்றும் அவற்றின் தளர்வுகளை கொண்டே ஒலிகள், உச்சரிப்புகள் மற்றும் வார்த்தைகள் உருவாகின்றன. மேலும் மற்றவருக்கு புரியும்படியான சொற்றொடர்கள் எழுவாய், செய்படுபொருள், சுட்டு பெயர்களின் தகுந்த வரிசையுடன் உருவாக்கப்படுகிறது.

உண்மை என்னவெனில் நாம் இந்த திறமைகளை பயன்படுத்துகிறோம் என்பதை தவிர அது எவ்வாறு செயல்படுகிறது என்பதை பற்றி ஆராய்வதில்லை. வெறுமனே இந்த ஆற்றலை, உயிரின அமைப்பில் இருந்து வெளிப்பட்ட திறன் என்று வரையறுத்திட முடியாது.

மனிதனின் பேசும் திறன் என்பது ஒரு சிக்கலான நிகழ்வு. இதனை பரிணாமவியலின் இயக்கு முறைகளை கொண்டு விளக்கிட முடியாது. மிக நீண்ட ஆராய்ச்சிக்கு பின்னரும், பரிணாமவியலாளர்களால் மனிதனின் பேசும் முறை என்பது விலங்கினத்தின் ஒலியில் இருந்தே பரிணாமம் அடைந்தது என்பதை நிரூபித்திட இயலவில்லை.

Pennsylvaniya பல்கலை கழகத்தை சார்ந்த டேவிட் பிரிமக் என்பவரும் இந்த தோல்வியை இவ்வாறு ஒப்புக் கொண்டுள்ளார்.

மனித மொழி பரிணாம தத்துவத்திற்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த குழப்பத்திற்கு என்ன காரணம் என்பதையும் பன்மொழிகளை கற்றறிந்தவரான Derek Bickerton இவ்வாறு கூறுகிறார்.

"மனித இனம் உருவாகுவதற்கு முன்பே இந்த பண்பு (மொழி) இருந்துள்ளதா? - இல்லை.

விலங்குகளின் மொழியை இது ஒத்திருக்கின்றதா? - இல்லை.

எந்தவித பயிற்சியும் இல்லாமல், எந்த மனித குரங்காவது வாக்கிய அமைப்பின் ஆரம்ப நிலையையாவது புரிந்து கொண்டுள்ளதா?

வார்த்தைகள் எவ்வாறு உருவானது? இலக்கண விதிகள் எவ்வாறு உருவானது? மொழி பரிணாமத்தை விளக்குவதில் இந்த பிரச்சனைகள் முக்கிய இடத்தை பிடிக்கின்றன.

உலகில் காணப்படும் மொழிகள் அனைத்தும் சிக்கலானவையே. பரிணாம வியலாளர்களால் இந்த சிக்கல் நிலை எப்படி படிப்படியாக உருவானது என்பதை கற்பனை செய்திட முடியவில்லை.

ரிச்சர்ட் டாவ்கின்ஸ் என்ற பரிணாமவியலாளரின் கருத்துப்படி அனைத்து மொழிகளும், பழங்குடிகளின் மொழிகள் உட்பட மிகவும் சிக்கலானவை.

மொழிகள் எப்போது உருவானது என்பதை எவரும் அறிந்ததில்லை. சொற்பொருளியலின் தோற்றம் குறித்தும் யாரும் அறிந்திடவில்லை. உலகில் காணப்படும் ஆயிரக்கணக்கான மொழிகளும் சிக்கல் நிறைந்தவை.

படிப்படியாகத்தான் இந்த சிக்கல் நிலை அடைந்திருக்கும் என்ற என்னுடைய எண்ணம் ஒரு தலைபட்சமானது தான். ஆனால் அப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்றில்லை. சிலர் இது திடீரென தோன்றியிருக்கும் என்றும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஏதோ ஒரு மேதாவியால் உருவாக்கப்பட்டிருக்கும் என்றும் கருதுகின்றனர்.

அரிசோனா பல்கலை கழகத்தின் பரிணாமவியலாளர்களான W.K. வில்லியம்ஸ் மற்றும் J. வேக் பில்ட் இதை பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

மொழி பரிணாமத்தின் இடைநிலைகள் குறித்து போதுமான ஆதாரங்கள் இல்லாத போதும் அதற்கு பகரமாக சொல்லப்படும் மற்ற விளக்கங்களும் ஏற்றுக்கொள்ளும் படியாக இல்லை. உயிரிகளின் சில குறிப்பிட்ட பண்புகள் படிப்படியாக பரிணாமம் அடையவில்லை என்றால் அதன் தோற்றம் இரண்டு வழிகளில் நடைபெற்றிருக்கலாம். அது இதுவரை கண்டுபிடிக்கப்படாத சக்திகள் அதன் தோற்றத்திற்கு காரணமாக இருந்திருக்கும், ஒருவேளை அது தெய்வீக சக்தியாகவும் இருக்கலாம்.

அல்லது உயிரிகளின் தோற்றத்தில் ஏற்பட்ட சில திடீர் மாற்றங்களின் விளைவாகவும் ஏற்பட்டிருக்கலாம், ஒருவேளை அந்த மாற்றம் சில தன்னிச்சையான நிகழ்வாகவோ, பரவலான மரபணு சடுதி (mutation) மாற்றமாகவோ இருக்கலாம். ஆனால் இவ்வாறான தற்செயல் நிகழ்வு மாற்றங்களின் (mutation) வழி ஏற்படும் எதிர்பாராத தன்மைகளின் அடிப்படையில் பார்த்தால் மேற்கண்ட விளக்கம் சந்தேகத்திற்கு இடமாகிறது. பின்கர் மற்றும் ப்லூம் (Pinker and Bloom, 1990) என்பவர்கள் குறிப்பிடுவது போல், எப்படி மொழி ஒரு சிக்கலான,

அதே வேளையில் அதன் பணியை நிறைவு செய்யக்கூடிய அளவில் கன கட்சித

மாக பொருந்தி நிறைவு பெற்றதோ அதே போன்ற நிலைமை எல்லா திடீர் மாற்றங்களிலும் (mutation) ஏற்படுவது மிக மிக கடினம்.

பேசும் திறனில் உள்ள சிக்கலான அமைப்பை மொழியியல் பேராசிரியர் நோம் சாம்ஸ்கி தன்னுடைய கருத்தை பின்வருமாறு பதிவு செய்கிறார்.

இதுவரையிலும் மொழியின் உருவாக்கம் சம்பந்தமாக நான் எதுவும் கூறவில்லை. ஏனெனில் என் விருப்பபடி கூறுவதற்கு இதில் ஒன்றுமில்லை. இதன் உருவாக்கம் ஒரு புதிராகவே இருக்கின்றது.

பரிணாம கருத்துகளின் வலையில் விழாதவர்களுக்கு பேச்சின் தோற்றம் குறித்த சரியான புரிதல் காணப்படுகின்றது. அது இறைவனால் மனிதனுக்கு அருளப்பட்டது. திருக்குர் ஆன் வசனமும் இவ்வாறு கூறுகின்றது.

அதற்கவர்கள், தங்கள் தோல்களை நோக்கி, “எங்களுக்கு விரோதமாக நீங்கள் ஏன் சாட்சியம் கூறினீர்கள்? என்று கேட்பார்கள். அதற்கு அவைகள் “எல்லா பொருள்களையும் பேசும்படி செய்கின்ற அல்லாஹ்வே எங்களையும் பேசும்படி செய்தான். அவன் தான் உங்களை முதல் முறையாகவும் படைத்தான். (இறந்த) பின்னரும் நீங்கள் அவனிடமே கொண்டு வரப்பட்டிருக்கின்றீர்கள்” என்று கூறும். திருக் குர்ஆன் *41:21*

பேச்சு திறன் உருவாக்கத்தின் சிக்கலை மட்டுமல்ல மனம் எவ்வாறு மொழியை புரிந்து கொள்கிறது என்பதையும் பரிணாம வியலாலர்களால் விளக்கிட இயலவில்லை. இவைகள் எதை உணர்த்துகிறது என்றால் இவை அனைத்தும் ஆற்றல் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட இறைவனால் அருளப்பட்டது என்பதே.

இன்ஷா அல்லாஹ் தொடரும்

**அபூ ஹாசின்**



# மோடி அரசால் முற்றுகையிடப்படுகின்றனவா ஊடகங்கள்?



ஒரு செய்தி ஊடகத்தில் ஆசிரியராக இருந்த ஒருவரை, நிர்வாகம் திடீரென வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டது. அதற்கும் சில மாதங்களுக்கு முன்னால் ஒரு ஊடக உரிமையாளருக்கும் அப்படி ஒரு நெருக்கடி வந்தது. இருவரும் கடந்த ஆண்டின் பிற்பகுதியில் தற்செயலாகச் சந்தித்துக் கொண்டனர்.

“யார் தொலைபேசியில் பேசியது?” என்று பின்னவர் கேட்டார். சில மத்திய அமைச்சர்களின் பெயர்களை முன்னவர் கூறினார். “பாஜகவில் இருக்கும் அந்த ஆர்.எஸ்.எஸ். காரரா?” என்று சற்றே கோபத்துடன் கேட்டார். அங்கே பேசப்பட்டது தவறான அனுமானத்தில் கூட இருக்கலாம்; பிரதான ஊடகங்கள் நெடிய மயக்கத்தில் ஆழ்த்தப்பட்டுள்ளன. மேலிட அழுத்தம் காரணமாக மூச்சுத் திணறுகின்றன.

நெருக்கடிநிலை என்ற இருண்ட காலத்தில் கூட இப்படி இருந்ததில்லை. அப்போது தணிக்கை அதிகாரிகள் பத்திரிகை அலுவலகத்திலேயே அமர்ந்து, ‘இந்திரா காந்தி விரும்ப மாட்டார்’ என்று தாங்கள் கருதிய செய்திகளையெல்லாம் நீக்கினார்கள். இப்போதோ செய்தித் தணிக்கைகளில் யாருடைய கை ரேகைகளையும் பார்க்க முடியாமல் உள்ளுக்குள் இருந்தே செயல்படுகின்றனர். செய்தித் தலைப்புகளைத் திருத்தியல்ல, நிர்வாகிகள் குழுவில் இடம்பெற்றே சாதிக்கின்றனர். இதனால் ஊடகம் மட்டுமல்ல, இந்தியா என்ற எண்ணமே முற்றுகைக்கு உள்ளாகியிருக்கிறது.

செல்வாக்குள்ள பத்திரிகை அதிபர்கள், விவாத நடுவர்கள், ஆசிரியர்கள் அனைவருமே காஷ்மீரில் ராணுவ ஜீப்பின் முன்பக்கத்தில் உட்கார வைக்கப்பட்ட காஷ்மீரியைப் போலத் தவிக்கின்றனர். எதிர்க் கருத்துகள் இருந்தால் அவற்றை நசுக்கவும், ஒப்புதலை உற்பத்திசெய்யவும் செயல்திட்டங்களை ஏற்படுத்தவும், ஆதரவைப் பெருக்கவும், அச்சத்தையும் நஞ்சையும் வெறுப்பையும் பிற மத வெறுப்பையும் பரப்பவும் அனுப்பப்பட்டவர்கள், சில வேளைகளில் மவுனமாக இருந்தும் செயல்பட வைக்கின்றனர்.

காற்றலைகளைக் காவிமயமாக்கியிருப்பது மலைப்பை ஏற்படுத்துகிறது. எனவே, என்.டி.டிவி. ஊக்குவிப்பாளர்களின் அலுவலகங்களில் திடீர் சோதனை நடத்திய நாளிலிருந்துதான் நெருக்கடி என்று தவறாகக் கருத வேண்டாம். என்.டி.டி.வி. ஆசிரியர் குழுவில் இணை உறுப்பினராகத் தங்களவரைச் சேர்க்க முயன்று, அதில் தோற்று, ஒத்துழைக்குமாறு கேட்டு, அதுவும் ஏற்கப்படாததால் கையை முறுக்கும் வகையில் அரசு அதிகாரிகளை விட்டு திடீர் சோதனைகளை நடத்தியுள்ளனர்.

என்.டி.டி.வி.க்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலான கண்டனப் பேரணியில் கலந்து கொண்ட பத்திரிகையாளர்களின் பட்டியலை அரசு வைத்திருப்பதென்பது மோடியின் 'புதிய இந்தியா'வில் ஆச்சரியப்படுவதற்கான விஷயம் இல்லை. அதில் நாங்கள் சேர வில்லை என்று வெளிநாட்டு நிருபர்கள் சங்கத்தினர் அறிவித்ததும் அப்படித்தான். தொலைக் காட்சித் துறையில் இனி அரசுக்கு எதிராக எழுந்து நிற்கவே பெரும்பாலானவர்கள் அச்சப்படுவார்கள் என்று ஒரு டி.வி. நிறுவனத்தின் தலைமை நிர்வாகி கூறியதும் அப்படித்தான்.

எல்லாத் தொலைக்காட்சி அலை வரிசைகளையும் 'பெரியண்ணன்' பார்த்துக் கொண்டேயிருக்கிறார், ஒவ்வொரு ட்வீட்டும் ஊன்றிப் படிக்கப்படுகிறது, ஒவ்வொரு வார்த்தையும் கவனிக்கப்படுகிறது. 'கூண்டில் அடைக்கப்பட்ட கிளி'(சிபிஐ) தன்னுடைய இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும்போது ஊடக அதிபர்கள் யார்தான் வம்பை விலைக்கு வாங்குவார்கள்?

*2014*-ல் நிதித் துறைக்கும், செய்தி - ஒலி பரப்புத் துறைக்கும் ஒருவரையே அமைச்சராக நியமித்தது மிகப் பெரிய சாணக்கியத் தனம். அரசாங்கம்தானே பெரிய விளம்பர தாரர்? "தேசத்தின் இருப்பே கேள்விக்குறியாகி விட்டிருக்கிறது. அச்சம், கோபம், பதற்றம், பீதி ஆகியவை அன்றாட அம்சங்களாகிவிட்டன. யாரும் யாரையும் நம்புவதில்லை. யாரும் பாதுகாப்பாக உணர்வதில்லை. பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட பலரும் அரசிடம் தங்கள் சகாக்களைப் பற்றியும் அண்டை அயலார் பற்றியும் கோள் சொல்லித் தங்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றனர்" என்று பிரபல துருக்கி நாவலாசிரியை எலிஃப் சபக் சொல்லியிருப்பது இந்தியாவுக்கும் பொருந்தும். இப்போது இங்கே நடப்பவையெல்லாம், சுதேச தேசியவாதிகளுக்குப் பித்துப் பிடித்துள்ள அமெரிக்கா, ஜப்பான், துருக்கி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் நடக்கின்றன. பத்திரிகையாளர்களைவசைபாடுவது, இணைய தளத்தில் பின்தொடர்வது, கைது செய்வது, கொல்வது, வீடுகளில் அதிகாரிகளைக் கொண்டு சோதனை போடுவது, வீட்டுக்குள் செல்ல அல்லது வீட்டிலிருந்து வெளியேற அனுமதி மறுப்பது என்று பல வழிகள் கையாளப்படுகின்றன. பத்திரிகைச் சுதந்திரத்தை அனுமதிப்பதில் இந்தியா *136*-வது இடத்தில் இருப்பதில் வியப்பு ஏதும் இல்லை.

ஊடகங்களின் இந்த நிலைமைக்கான பழி அனைத்தையும் அரசியல்வாதிகளின் தலையில் மட்டும் போடுவது புத்திசாலித் தனமில்லை. கொள்கையில் உறுதியாக இல்லாத முதலாளிகள், பணம் சம்பாதிப்பது மட்டுமே குறியாக உள்ள வர்த்தகச் செயல்பாடு, விளம்பர விற்பனை வரவுகளில் சரிவு, உருவாகும் புதிய தொழில்நுட்பங்கள் என்று பிற காரணங்களும் உண்டு. பத்திரிகைச் சுதந்திரம் என்ற கொள்கை கலங்கரை விளக்கத்தைப் போல ஜனநாயகத்துக்கு இன்றியமையாதது. அரசில் நேரடியாக இடம்பெறாத அமைப்புகள் இந்தியாவின் அடிப்படை நன்னெறிகளை பட்டப்பகலில் குலைத்துக் கொண்டிருக்கின்றன. ஊடகங்களில் பெரும்பான்மையானவை அரசை ஊக்குவிக்கும் கோமாளிகளாக ஆடிக்கொண்டிருக்கின்றன. எதிர்கால வரலாற்றாசிரியர்கள் இந்த நிலை குறித்து நிச்சயம் அதிசயிப்பார்கள்.

**லாரன்ஸ் லியாங், டெல்லி அம்பேத்கர் பல்கலைக்கழக சட்டக் கல்லூரிப் பேராசிரியர்**

என்.டி.டி.வி. நிறுவன அலுவலகங்கள் மீது சிபிஐ நடத்திய சோதனைகள் சில கேள்விகளை எழுப்புகின்றன. அந்த நிறுவனத்தின் நிதி நிர்வாகம் மற்றும் நிறுவனங்களுக்கு இடையிலான பரிமாற்றங்கள் காரணமாகத்தான் திடீர் சோதனை நடந்திருக்கிறது. இதில் பத்திரிகைச் சுதந்திரம் மீதான தாக்குதல் என்ற அம்சம் குறைவு, நிதி நிர்வாகரீதியாகப் பதில் அளிக்க வேண்டிய பொறுப்பு நிறுவனத்துக்கு இருக்கிறது.

இருந்தாலும், நிதி நிர்வாகத்துக்காக எல்லா ஊடக நிறுவனங்களும் சோதனைக்கு உள்ளாகாதபோது, ஒருசிலர் மட்டும் குறிவைத்து நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படும்



போது அரசின் நோக்கம், செயல்கள் குறித்துச் சுதந்திரச் சிந்தனையாளர்கள் கேள்வி எழுப்புவது நியாயமே. என்.டி. டி.வி. நிறுவனத்தின் மீது நடந்த சோதனைகளை வைத்து செய்தி ஊடகங்கள் அரசால் அச்சுறுத் தலுக்கு உள்ளாக்கப்படுவதாக உறுதியான முடிவுக்கு வந்துவிட முடியுமா?

ரோஹித் வெமுலா பற்றியும் காஷ்மீர் பற்றியும் எடுக்கப்பட்ட குறும்படங்கள் திரையிட அனுமதி மறுப்பு போன்ற அடக்குமுறை களுக்கு, என்.டி.டி.வி. மீது நடந்த சோதனைக் குக் கிடைத்த கவனிப்பு கிடைக்கவில்லை. என்.டி.டி.வி. மீதான சோதனைக்காகக் குரல் கொடுப்பது நியாயம்தான்; யார் குரல் கொடுக் கத் தகுதியான அப்பாவி, யார் பாதிக்கப் பட்டால் குரல் கொடுக்க அவசியமில்லை என்றெல்லாம் இந்த நேரத்தில் வாதாடக் கூடாது. என்.டி.டி.வி. வலிமைவாய்ந்த, செல் வாக்குமிக்க ஊடக அமைப்பாக இருப்பதால் சாமானியப் பத்திரிகையாளர், எழுத்தாளர், திரைப்படத் தயாரிப்பாளர், வலைதள எழுத்தாளர்கள் என்று எல்லோரும் அதற்காகக் கவலைப்படுவது இயல்பாக இருக்கிறது.

ஒரு கொலை வழக்கில், யூத வெறுப் பாளரும் மேட்டுக்குடியைச் சேர்ந்தவருமான வான் புலாவுக்கு ஆதரவாக மனித உரிமை களுக்காகக் குரல் கொடுக்கும் வழக்கறிஞர் ஆலன் டெர்சோவிட்ஸ் வாதிட முன்வந்தார். இவருக்காக ஏன் வாதாடுகிறீர்கள் என்று சகாக்கள் கேட்டார்கள். "இவர் பிரபலமான மேட்டுக்குடி என்பதால்தான் வாதாடுகிறேன், இவரையே அரசு அலைக்கழிக்க முடியும் என்றால், சாமானியர்களின் நிலை எப்படி யிருக்கும் என்று மற்றவர்கள் புரிந்து கொள்ளத் தான்" என்றார்.

ராணுவத்தில் புழங்கும் 'முற்றுகை' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில் பிரச்சினை இருக்கிறது. ஊடகத்தை மட்டுமே அரசு அச் சுறுத்துவதைப் போன்ற எண்ணமும் ஏற்படுத் தப்படுகிறது. பெரும்பாலான முற்றுகைகள் அரசுடன் ஊடகங்களும் கூட்டாளியாகச் சேர்ந்து செயல்படும்போதுதான் அரங்கேறு கின்றன. ஜீப்பின் முன்பகுதியில் ஒருவரை அமரவைத்து ஓட்டிச் சென்றதை நியாயப் படுத்தினார் தரைப்படைத் தலைமைத் தளபதி.

அதற்காக அவரை ஜாலியன் வாலாபாக் படுகொலையை நிகழ்த்திய ஜெனரல் டயருடன் ஒப்பிட்டார் கல்வியாளர் பார்த்த சாட்டர்ஜி. இதற்காக அவரைக் கடுமையாக வலைதளத்தில் விமர்சித்தனர்; 'தி வயர்' இணையதளத்துக்கு எதிராக 'டைம்ஸ் நவ்' இடைவிடாமல் கருத்து மோதல்களில் ஈடுபடு கிறது. ஊடகங்கள் நடுநிலையானவையா, கருத்துகள் எல்லாம் நியாயமானவையா என்று அரசு கேட்க அவசியமில்லாமல், தங்களுக் குள்ளே சண்டையிட்டுக்கொள்வதன் மூலம் அவையே வெளிப்படுத்திவிடுகின்றன.

செய்தி ஊடகங்கள் என்பவை உண்மை யில் என்ன நடக்கிறது என்பதைக் கண்காணித் துச் சொல்ல வேண்டியவை; அரசுக்கு லாலி பாடுவதற்காக ஏற்பட்டவை அல்ல. முற்றுகை என்பது உள்நாட்டுப் போரைப் போல ஊட கங்களுக்கு உள்ளேயே நடக்கும் போட்டி யையும் குறிக்கும். அதே வேளையில், ஊட கங்கள் அரசின் அச்சுறுத்தலுக்கும் ஆளாகு பவைதான்.

ஆரம்பமாகி ஒரு பத்து நிமிடங்களி லேயே பார்க்க சகிக்க முடிய வில்லை.! துப்புரவுத் தொழிலாளிகள் manual scavenging செய்கிறார்கள் என இதுவரை ஆங்கில மொழியில் சொன்ன போது, கேட்ட போது உணராத வலியை தன் கையால் "பீ" அள்ளும் மனிதர்களை பார்க்கும் போது தான் உணர முடிந்தது.

நீ பொதுவெளியில் மலம் கழித்தாலும், பொது கழிப்பறையில் மலம் கழித்தாலும், உன் வீட்டின் கழிவு தேக்க தொட்டியில் அடைப்பு ஏற்பட்டாலும் நிரம்பினாலும் உடனடியாக ஒரு மனிதன் வந்து உள்ளிறங்கி நாம் அசிங்கமாக, அருவறுப்பாக கருதும் நம் உடம்பிலிருந்து வெளியேறிய கழிவுகளுக்குள் கை போட்டு சுத்தம் செய்த பின் வாசலோடு வைத்து அனுப்பப்படும் தொழிலாளிகளுக்கு, மனிதனுக்கு என்ன பிரச்சனை இருந்தால் என்ன?..

# கக்கூஸ்

## ஆவணப்படம்

நாம் தான் நாகரிகமானவர்கள் ஆயிற்றே என நம்பும் கீழ்மட்ட சமூகத்தில் தான் இன்றும் பயணிக்கிறோம்...

பதினைந்து வயது சிறுவன் தொடங்கி 70 வயதான மூத்த கிழவி வரை கையால் மலம் அள்ளுவதை டிஜிட்டல் போன்களில் பார்க்கும் போதே நாற்றத்தில் ஒரு நிமிடம் ஒதுங்கி விட்டு தான் தொடர முடிகிறது.

இந்தியா சுதந்திரம் அடைந்து 48 ஆண்டு களுக்கு பிறகு தான் ஒரு மனிதன் கையால் மலம் அள்ளுவது தடுக்கப்பட வேண்டும் என சட்டமே இயற்றப்பட முடிந்தது. 2013ல் இதற்கான திருத்தச் சட்டம் வேறு. ஆனாலும் இந்த அவல நிலையை இன்று வரை யாராலும் மாற்ற முடியவில்லை என்பதே நிதர்சனம்.

பெரும்பாலான வீடுகளில் தாய் தந்தையர் களே 'டேய் சக்கிலிய பைய மாதிரி நடந்துக் காதடா' என வீட்டிலிருந்தே வெறுப்பை விதைத்து விடுவதால் சக்கிலியர், தாழ்த்தப் பட்ட சாதி குறிப்போடு வரும் மாணவர்களில் எத்தனை பேர் சமமாக படித்து முன்னேற முடியும்?..

துப்புரவுத் தொழில், Manual scavenging என்ற நவநாகரிக வார்த்தைகளை உபயோகப் படுத்திக் கொண்டு சக்கிலியப் பயலே உள்ள





இறங்கி 'பீ அள்ளுடா' என நிர்பந்திக்கும் சமூக கட்டமைப்பில் வாழும் நாமெல்லாம் நாகரிக சமூகம் என கூறிக்கொள்ள கூச்சப் படுவதே இல்லை.

தலித்கள், ஹரிஜன்கள் என பெயர் கொடுத்து விட்டு தாழ்த்தப்பட்ட சக்கிலிய, பறைய, பட்டியலின பயலே என தனி மனிதன் முதல் ஆளும் அரசாங்கம், கட்சிகள் வரை கூறியும் விட்டு ஏன் அவர்கள் முன்னேற வில்லை என கேள்வி கேட்கும் யோக்கியர் களை அவன் அள்ளும் அதே கழிவு கொண்டு அடித்தால் தான் என்ன?..

இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக பேசிக் கொண்டே வேறு வழியில்லாமல் மலம் அள்ளும் பெண், வேலை முடிச்சு எவ்ளோ சுத்தம் பண்ணிட்டு போனாலும் அம்மா நாறுதுமா என்ன தூக்காதனு என் மகள் சொல்றானு அழும் பெண், அய்யா ரெண்டு குவாட்டரும் 300 ரூபாயும் கொடுத்தா என்ன வேணும்னாலும் செய் வாய்ங்கனு நினைக்கிற ஆள் தானய்யா அவய்ங்க என ஒட்டுமொத்த இந்திய சமூகத்தை நோக்கி கேள்வி கேட்கும் ஆண், என அவர்களின் வலியின் ஒரு பகுதியையும், தாழ்ந்த சாதில பிறந்துட்டோம்ல அதான் இப்டி!, தலித் புள்ளைங்க கக்கூஸ் தான் கழுவனுமா!, டீக்கடைல டீ கூட தர மாட் டாய்ங்க, நாங்க பக்கத்துல வந்தா அவங் களுக்கு தீட்டு!, இன்னும் அவர்களிட மிருந்து வரும் இப்படியான ஆதங்கங்களை யும் அப்படியே எடுத்து காட்டியிருக்கிறது 'கக்கூஸ்' ஆவணப்படம்.

ஒரு சமூகத்தை, கர்ப்பபை இல்லாத பெண்களாக அவர்களை மாற்றியிருக் கிறோம், அவர்களை கல்வியறிவு பெற முடியாத அளவுக்கான சமூக கட்டமைப்பை உருவாக்கி வைத்திருக்கிறோம். விஷவாயு வால் துப்புரவு தொழிலாளிகள் பலி எனும் செய்திக்கு பின்னால் செப்டிங் டேங் இருக் கும் என தெரியாமல் செய்தித் தாள்களை திருப்பியிருக்கிறோம்.

எங்க காலத்திலேயே இவங்க பாவம் இப்படித்தான் என என் தாத்தா சொன்னார். என் காலத்திலும் இப்படித்தான் என அப்பா சொன்னார். இன்று எனது காலத்திலும் இப்படித்தான் என நான் சொல்கிறேன். அடுத்த தலைமுறைகளும் இப்படி சொல்வ தாக இருந்தால் நமக்கு ஒரு தலைமுறைகளே கூடாது என்றே இறைவனிடம் வேண்டு கிறேன்.

BigBoss என்ற ஒரு தனியார் நிகழ்ச்சி யில் பரணி எனும் மனிதன் தனிமைப்படுத்தப் பட்டதற்கு கதறி, தனிமைப்படுத்திய 14 பேரை திட்டி தீர்த்த நாம்! பல லட்சம் மனி தர்கள் கொண்ட சமூகத்தை எல்லாவற்றை யும் பிடுங்கி விட்டு தினம் தினம் இப்படி செயல் வன்முறைகளால் கொடுமைப்படுத்து கிறோமே நமக்கான தீர்ப்பு எவ்வளவு கொடுமையாக அமைய வேண்டும்!

'கக்கூஸ்' ஆவணப்படம் இதையெல்லாம் ஒரு மணி நேரம் படம் பிடித்ததற்காகவே பாராட்டும் மனங்கள் இங்கேயே புரண்டு வாழும் மனிதர்களை கவனிக்க மறக்கிறது.

குடும்பத்துடன் பார்க்கப்பட வேண்டிய யதார்த்தமான குடும்ப படம். ஒரு நிமிடம் கழிப்பறையில் நின்று மலம் கழித்து விட்டு ஒரு நிமிடம் அதை வேடிக்கை பார்த்து விட்டு நகர்வோம். அந்த அருவருப்பில் தான் ஒரு சமூகம் வாழ்கிறது என்ற கவலையும் கொள்வோம்.

**வாழ்த்துக்களும் அன்பும் 'கக்கூஸ்' ஆவணப்பட குழுவுக்கு. -அபூ சித்திக்.**




# கவிக்கோ நினைவுகள்

கவிக்கோவின் நினைவுகள் நாள் *24–7–2017* திங்கட்கிழமை சென்னை காமராஜர் அரங்கத்தில் மாலை *3* மணிக்கு கூட்டத்தை அதிகமாக எதிர்பார்க்க இயலுமா?

இயலும்! அது கவிக்கோ அப்துல் ரஹ் மானுக்காக இருந்தால் என்பதை அரங்கத்தில் கூடிய கூட்டம் அகிலத்திற்கு அறிவித்தது.

அதே நேரத்தில் இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் செயல் மழவர்கள் கொட்டிய உழைப்பையும் குறைத்து மதிப்பிட இயலாது. அத்துணை முயற்சிகள் திட்டங்கள்.

நானும் பார்த்திருக்கிறேன் கவிக்கோவை நினைவு கூரும் இடங்களில் கூட்டங்கள் நிரம்பி வழிந்தன. பல கூட்டங்கள் இதேபோல் சென்னையிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் நடந்தன. அனைத்திலும் அசாதாரணமாகக் மக்கள் குழுமம்.

ஜாதி, மதம், அரசியல் விறைப்புக்கள் இவற்றைக் கடந்து மக்கள் அதிகமாகக் கூடுவதைக் கண்டோம்..

எப்படி அப்துல் கலாம் அவர்கள் அனை வருக்கும் சொந்தமோ, அதேபோல் கவிக்கோ வும் அனைவருக்கும் சொந்தம் என்பதை கவிக்கோவை நினைவுகூரும் நிகழ்வுகளில் கூடிய மக்கள் நமக்குத் தெள்ளிதின் உணர்த் தினார்கள்.

இதனால் இஸ்லாமிய இலக்கியக் கழகம் நடத்திய திங்கட்கிழமை நிகழ்ச்சியிலும் மக்கள் அதிமாகக் கூடியதில் ஆச்சரியமில்லை.

அதில் நெகிழ்வுரை நிகழ்த்திய பலரும் கவிக்கோ அவர்களுடன் நீண்ட நெடுங்காலம் பழகியவர்கள் என்பதைப் பார்த்திட முடிந்தது. அவர்கள் ஆற்றிய உரைகளும் எம் மனக் கண்முன் கொண்டுவந்த காட்சிகளும் கண்களில் கண்ணீரை வர வைத்தன.

சன்தொலைக்காட்சிவீரபாண்டிஆறுமுகம், கண்களில் கண்ணீரை தேக்கிக்கொண்டே பேசினார்.

கவிக்கோவின் பிரிவைத் தாங்க மாட்டா மல், கலைஞர் மௌனமாகிப் போனார் என்ற போது துக்கத்தின் மௌவுனம் அனைவரையும்



கவ்விக்கொண்டது.

கவிக்கோ என்றால் அந்த மேடையில் தவறாமல், அன்புச் சகோதரர் சோலைநாதன் இருப்பார் என்ற அளவுக்கு எல்லா நிகழ்வு களிலும் கலந்துகொண்டு வருகின்றார்.

ஒவ்வொரு நிகழ்வுகளிலும் நெகிழ்வு தரும் செய்திகளைச் சொல்கின்றார். செவி மடுக்கும் மக்கள் தவறாமல் சிந்து கின்றார்கள் கண்ணீர்.

எல்லா வற்றிற்கும் மேலாக, அவர் கவிக்கோ மேல் கொண்ட அன்பை அவர் பேசும்போது சொல்லாமலே புரிந்துகொள்ள முடியும்.

*24–7–2017* நிகழ்ச்சியில் வழக்கம்போல் எல்லோரையும் "நெக்குருகச் செய்துவிட்டு, ஒரு செய்தியைப் பதிவு செய்தார். அது கவிக்கோ அவர்கள் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர் களின் வாழ்க்கை வரலாற்றைக் கவிதையாககத் தந்திட முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். பாலை நிலா என்ற பெயரில் கவிக்கோ அவர் களிடம் பாலைநிலா ஓட்டத்தை விரைந்து முடித்துவிடுங்கள். அதற்காக தனக்குச் சொந்த மான இடம் ஒன்றில் எல்லா வசதியையும் செய்து தருகின்றேன் எனக் கூறியிருக்கின்றார். அந்த இடம் ஒரு குன்றின் மீது இருக்கின்றது. ஒய்யாரமாகவும், இயற்கையின் வனப்பு மிக்கதாகவுமிருக்கும்.

அங்கேயே இருந்து எழுதுங்கள், எழுதிமுடித்த பின்பே கீழே வாருங்கள் என்றேன். ஆனால் நிலைமை வேறாகிவிட்டது. ஒழுக்கத்தில் கவிக்கோவைப் போன்றதொரு மனிதரைக் காண்பது அரிது. இப்படி கவிக்கோ, உடனான நட்பை நினைந்து நெகிழ்ந்தார். குழுமி இருந்தோரையும் நெகிழ வைத்தார்.

**நக்கீரன் கோபால்**

எங்கிருந்து கற்றார் இத்தனை யதார்த் தங்களை என எண்ணிடும் அளவிலேயே அவருடைய உரைகள் இருக்கும். கவிக்கோவை நினைவுக் கூரும்போதும் அப்படியே!

கவிக்கோ காட்டிய அதீதமான வீரத்தை அதிகமாக நினைவு கூர்ந்தார். "இனிய உதயம்" வழி கவிக்கோ எழுதிய கவிதைகளை உடனுக் குடன் வெளியிட்டதையும் குறிப்பிட்டார். கவிக்கோவின் நெருங்கிய நண்பர்களில் அவரும் ஒருவர்.

**கவிஞர் முத்துலிங்கம்**

"கவிக்கோ" பெயரால் வழங்கப்பட்ட விருதின் நாயகன். நன்றியோடு கவிக்கோவுடன் தான் இருந்த நாள்களை நினைவு கூர்ந்தார்.

**தேங்கையார்**

இந்தப்பெயரால்பரவலாகஅறியப்படுபவர் கவிஞர் தேங்கை ஷர்புதீன் – ஆலிம்கள் வட்டாரத்தில் கவிக்கோவுக்கு மிகவும் நெருக்க மானவர்கள். அதிகநேரம் வழங்கப்படாததால் படபடப்பாக பேசி முடித்தார்.

**வைகோ**

புயலாக வீசினார். அந்த நினைவு கூரும் மேடையில் அரங்கத்தை அதிர வைத்தவர். கவிக்கோவின்பழைய காலத்து கவிதைகளையும் உரை நடைகளையும் குறிப்பேதுமின்றி பேசியது, நேயர்களை மட்டுமல்ல மேடை யிலே அமர்ந்திருந்தவர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

எந்த அளவுக்கென்றால் பின்னர் பேசிய கவிஞர்வைரமுத்து, அவர்கள் "வைகோ" வாழும் காலமெல்லாம் நாம் எதை வேண்டுமென் றாலும் மறக்கலாம் என்றார்.

பேராசிரியர், முனைவர் கவிக்கோ அப்துல் ரஹ்மான் அவர்கள் 02.06.2017 அன்று மறைந்தார். அவரது அடக்கம் 03.06.2017 அன்று கொட்டிவாக்கம் மஸ்ஜித்தின் கபருஸ்தானில் நடந்தது.

வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் இல்யாஸ் ரியாஜி ஜனாஸா தொழுகை நடத்தி இரங்கல் கூட்டத்தையும் ஒருங்கிணைத்தார்.

நேர நெருக்கடி காரணமாக பிரமுகர்கள் அனைவரும் இரங்கல் உரை நிகழ்த்த முடியாமல் போயிற்று. அப்பொழுது இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் சார்பில் விரைவில் விரிவான பெரிய அளவிலான "நினைவேந்தல்" நிகழ்ச்சி சென்னையில் நடத்தப்படும் என்று இல்யாஸ் ரியாஜி அறிவித்தார்.

அரங்கத்தை அசத்திய வை.கோ. தனக்குப் பிடித்த கவிதைகளிலெல்லாம் கவிக்கோ, தோல்வியைப் பற்றி எழுதிய கவிதையே அதிகமாகப் பிடித்தது எனப் போற்றினார்.

**கவிஞர் வைரமுத்து**

திரைப்பட பாடலில் புகழ் மலையின் உச்சியிலே கொடியோற்றிவர் அவர். இயல்பாகவே கவிக்கோ திரைப் படத்திற்குப் பாடல் எழுதமாட்டேன் எனச் சொன்னதைத் தொட்டுப் பேசிட வேண்டியதாயிற்று.

திரைப் படங்களுக்கு பாடல் எழுத மறுத்த கவிக்கோ அதனை தனக்கே உரிய பாணியில் இப்படிக் குறிப்பிட்டார்.

"அம்மிக்கொத்த சிற்பி எதற்கு"

இந்த வரிகளை வைரமுத்துக் குறிப்பிட்டார்.

நான் திரைப்பட பாடலாசிரியன் என்ற அடிப்படையில் இதற்குப் பற்பல விளக்கங் களைச் சொல்லலாம். அவையெல்லாம் சாமார்த்தியமாக இருக்கலாம். சத்தியமாக இருக்காது என்றார். இதனை இரண்டு முறை குறிப்பிட்டார்.

அத்தோடு வைரமுத்துவின் உரையில் ஓர் கவலை, அது கவனிக்கத்தக்கது.

"கவிக்கோவின் பவள விழாவிற்கும் நான் வந்திருந்தேன். ஒரு எண்பது பேர்தான் வந்திருந் தார்கள். ஆனால் இந்த நினைகூரும் நிகழ்ச்சிக்கு ஒரு எட்டு நூறு பேர் வந்திருக்கின்றார்கள். அவர் இருக்கும் போது வராத கூட்டம் அவர் இல்லாதபோது இரங்கல் கூட்டத்திற்கு வந்திருக் கின்றது. அப்படியானால் எங்களுக்கெல்லாம் உயிரோடு இருக்கும் போதே இறங்கல் கூட்டங் களை நடத்திவிடுங்கள் எனச் சொல்லிடத் தோன்றுகிறது." ஆமாம் பவள விழாவில் வீஞ்சிக் கொண்ட பலம் வந்திருந்தார்கள்.

**இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன்**

"கவிக்கோ தன்னுடைய ஆய்வுகளின் வழி ஏவள் – ஹவ்வாள் இருவரும் ஒருவரே, ஆதிமுதல் ஆதம் நபி (அலை) அவர்கள் வந்தது தமிழகத்தில்தான் – திராவிடர் மத்தியில்தான். அது இன்றைய தமிழகமல்ல, மாறாக அது கடல் கேள்விகளுக்கு முன்னால் இருந்த தமிழகம். இதனை நாம் ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும் என்றார்கள்.

ஆழ்ந்து கவனிக்கத்தக்க வரிகள்
ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டியவை.

**கவிக்கோ இனியவர் வீரமானவர் இல்யாஸ் ரியாஜி நெகிழ்வுரை**

கவிக்கோ நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றிய இல்யாஸ் ரியாஜி பேசியது...

நம் நெஞ்சமெல்லாம் நிறைந்த கவிக்கோ ஓர் அற்புதமான மனிதர். தனக்கென சில நெறிகளை வகுத்து வாழ்ந்தவர்.

கவிக்கோ என்று தம்மைக் கூறிக்கொள் வதில்லை. சினிமாவுக்குப் பாடல் எழுது வதில்லை. அரசியலுக்கு வருவதில்லை. அரசுப் பதவிகளில் அமர்வதில்லை.

இவற்றில் அவர் இறுதிவரை உறுதியாக இருந்தார். முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் பலமுறை விரும்பி அழைத்தும் அரசியலின் பக்கம் கவிக்கோ செல்லவில்லை.

எங்களைப் போன்றோரின் வலியுறுத்தலை ஏற்று வக்ஃபு வாரியத் தலைவர் பதவியை

மட்டும் ஏற்றார்.

ஒருநாள் அவர் அலைபேசியில் அழைத்தார். "மௌலவிசாப்! எங்கு இருக்கிறீர்கள்?" என்றார். சொல்லுங்கண்ணே!" என்றேன் "உடனே புறப் பட்டு வக்ஃபு வாரிய அலுவலகத்துக்கு வர முடியுமா?" என்றார். சென்றேன்.

அங்கே ஒருவர் கையில் கோப்புகளுடன் நின்று கொண்டிருந்தார். கவிக்கோ சொன்னார் "இவரது ஊரின் பிரச்சனை ஒன்று தீர்க்கப் படாமல் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டே இருந்திருக்கிறது. இந்த ஊர் மக்களால் லஞ்சம் கொடுக்க முடியவில்லை. அதனால் முடிய வில்லை."

"இப்போது நான் கையெழுத்துப் போட்டு விட்டேன். ஆனால் சும்மா இல்லை, நானும் லஞ்சம் கேட்டிருக்கிறேன்" என்றார் குபீரென்று சிரித்தபடி.

"நான் கேட்ட லஞ்சம் என்னவென்று சொல்லுங்கள்" என்றார் அந்த நபரிடம், அவரும் சிரித்தார் சொல்லவில்லை.

பிறகு கவிக்கோ சொன்னார் : இவங்க ஊர்ல ரயில்வே ஸ்டேஷன் பக்கத்துல பருத்திப் பாயாசம் கிடைக்கும். ரொம்ப சுவையாக இருக்கும். அவங்க ஊருக்கு நான் வரும்போது ஒரு கிளாஸ் பருத்திப்பால் பாயாசம் வாங்கித் தரணும்னு கேட்டிருக்கேன்" என்றார்.

இப்படி ஒரு இனிமையானவர் கவிக்கோ.

தமிழக சட்ட மன்றத் தேர்தலில் தி.மு.க. தோற்று அ.தி.மு.க. வெற்றி பெற்ற நேரம். கவிக்கோவின் கவிதை ஒன்று முரசொலி இதழில் வந்திருந்தது.

"சூரியன் மறைந்து விட்டது
தமிழகம் இருண்டு விட்டது.
அதனால்தான்
நட்சத்திரம் ஆட்சிக்கு வந்து விட்டது"

இதுதான் அந்தக் கவிதை.

அவரைச் சந்தித்தபோது இந்தக் கவிதை யிலுள்ள சொல் நயத்தைப் பாராட்டினேன். மகிழ்ந்தார். பிறகு "இந்தக் கவிதைக்கு ஒரு பின்னணி இருக்கிறது தெரியுமா?" என்றார்.

"சொல்லுங்கண்ணே!" என்றேன். இந்தக் கவிதையை எழுதி கலைஞரிடம் நேரில் கொடுத்தேன். படிச்சுப் பார்த்துவிட்டு என்ன தைரியம்யா உமக்கு!" என்று வியந்த கலைஞர் அந்த அம்மையார் (ஜெயலலிதா) சினிமா நட்சத்திரம் என்று சுட்டும் வரிகளை கலைஞர் தமது பேனாவால் அழித்துவிட்டு மீதி வரிகளை முரசொலியில் போடச் சொன்னார்."

"நான் கலைஞரிடம் சண்டை போட்டு அந்த வரிகளை இடம் பெறச் செய்தேன்" என்றார் கவிக்கோ. அபபடி ஒரு தைரியசாலி. மனதில் பட்டதை பளிச்சென்று சொல்பவர்.

கவிக்கோ அவர்கள் உலகப் புகழ் பெற்ற தக்காரும் மிக்காருமில்லாத கவிஞர். அவரது கவிதைகளிலுள்ள முதல் வரியை இரண்டாம் வரியால் வெல்லும் வித்தை தெரிந்தவர்.

இது சிறகுகளின் நேரம் புத்தகத்தில் "மேய்ச்சல்" என்ற தலைப்பில் அவர் எழுதி யுள்ளவை இன்றைய அரசியல் சூழலுக்குப் பொருத்தமானவை. இவ்வாறு இல்யாஸ் ரியாஜி உரையாற்றினார்.

### கவிஞர் அறிவுமதி

கவிக்கோவின் நன்றியுள்ள சிஷ்யர். கவிதை உலகில் கவிக்கோவால் உருவாக்கப் பெற்றவர். இத்தனையையும் அவர் சொல்லிக்காட்டித் தெரிந்ததில்லை. அனைத்தும் அவர் பேச்சுக்கள் நமக்குச் சொல்லும் சேதி.

கவிக்கோவின் உடல் அடக்கம் செய்யப் பட்ட மஸ்ஜித் நடந்த கூட்டத்தில் அவர் கண்ணீர் சிந்தினார். அதுவே இஸ்லாமிய இலக்கியக் கழகம் நடத்திய நினைகூரும் நிகழ்விலும் நடந்தது.

இன்னும் பல அரசியல் தலைவர்கள் உரையாற்றினார்கள். நிகழ்வின் முதல் அமர்வை கவிஞர் காஜாகனி அவர்களும் இரண்டாம் அமர்வை கலைஞர் அளூர் ஷாநவாஸ் அவர்களும் தொகுத்து வழங்கினார்கள்.

இஸ்லாமிய தமிழ் கழகத்தின் பொதுச் செயலாளர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் இப்போதைய தவைலர் சேமு. முனைவர் சேமுமு நன்றி கூறினார்.

மாலேகான் 2008 குண்டு வெடிப்பு வழக்கில் அபிநவ்பாரத் அமைப்பு குற்றம் சாட்டப்பட்டது. இராணுவ அதிகாரி லெட்டினன்ட் கர்னல் பிரசாந்த் புரோஹித் இந்துத்துவ தீவிரவாதிகளுக்கு இராணுவத்தில் இருந்து ஆர்.டி.எக்ஸ் வெடி மருந்துகளை கடத்தி கொண்டு வந்து தந்ததுடன் அவர்களுக்கு அதனை எப்படி வெடிப்பது என்ற பயிற்சியையும் தந்தார்.

களில் தயானந்த பாண்டே என்ற சாமியாரின் மடிக்கணினிகளில் இருந்து பல்வேறு விஷயங்களை கண்டுபிடித்த கர்கரே அவர்கள் அதனை நீதி மன்றத்தில் ஒப்படைத்தார்.

அதில் தான் இந்த இந்துத்துவ தீவிரவாதிகள் இஸ்ரேலுடன் நடத்திய பேச்சு வார்த்தை உரையாடல்கள் வெளியாகின. இவை பின்னர் ஊடகங்களில் கசிந்து வெளியாகின. அதில் இவர்கள் இந்தியாவில்



இவை அனைத்தையும் மறைந்த தீவிர வாத எதிர்ப்புப் படை தலைவர் நேர்மையாளர் ஹேமந்த் கர்கரே அவர்கள் கண்டு பிடித்து இவர்களை கைது செய்து சிறைக்கு அனுப்பி னார்.

பின்னர் இவரை இவ்வழக்கின் தன்மை கண்டு அஞ்சிய இந்துத்துவா தீவிரவாதிகள் மும்பை தாக்குதலில் வைத்து தீர்த்து கட்டினர்.

இவர்களுடன் தயானந்த பாண்டே என்ற ஆண் சாமியாரும் பிரக்யா சிங் சாத்வி என்ற பெண் சாமியாரும் அடக்கம். இவர்

மஹாராஷ்டிராவை மையமாகக் கொண்டு இராணுவ ஆட்சியை நிறுவ முயன்றதும் அதற்கான ஆயுத உதவிகளை நேபாள மன்னரிடம் கோரியதும் அதனை செக் குடியரசிடம் இருந்து பெற்றுத்தரக் கோரியதும் வருடத்திற்கு 40 இந்துத்துவா இராணுவ அதிகாரிகள் மற்றும் 400 போர் வீரர்களை உருவாக்க பயிற்சி அளிக்க வேண்டியதும் அவ்வாறு இந்துத்துவ ஆட்சியை உருவாக்கிய பின்னர் ஐக்கிய நாடுகள் சபையில் அதற்கு அங்கீகாரம் கோரும் போது இஸ்ரேல் உதவ வேண்டும்

என்று கோரியதும் வெளிவந்தன.

மேலும் இந்துத்துவ வாதிகளுக்கு தடை யில்லா ஆயுத சப்ளை மற்றும் பயிற்சியினை கோரினர் இந்த தீவிரவாதிகள்.

காவி நிறக் கொடியுடன் இந்துத்துவ வாதிகள் அலுவலகம் திறக்க அனுமதி மற்றும் அரசியல் புகலிடம் கோரினர். இதற் கெல்லாம் இஸ்ரேல் ஒத்துக்கொண்டது. இவர்களுக்கான தனி தேசிய கொடியும் வடிவமைக்கப்பட்டுவிட்டது. ஆனால் இந்துத் துவாவாதிகள் இதற்கு தகுதியானவர்

# உண்மையைச் சொல்லாதே

## - நீதிமன்றம்..!

### மாலேகான் 2008 ஆவணங்களில் இரகசியம் காக்கப்பட வேண்டும்

கள் என்பதை நிருபிக்க வேண்டும் என்று இஸ்ரேல் கோரியது. அதற்காக முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் நிகழ்த்தப் பட்ட குண்டுவெடிப்புகளே இவை.

கர்கரே உயிருடன் இருந்தவரை இது சம்பந்தப்பட்ட செய்திகள் அடிக்கடி வெளியில் வந்து இந்துத்துவா வாதிகளுக்கு நெருக்கடி தந்து கொண்டிருந்தன. இதற்காக வேகர்கரே கொலை செய்யப்பட்டார். (படிக்க கர்கரேவை கொலை செய்தது யார்?) இவருடைய கொலைக்கு பின்னர் இது போன்ற செய்திகள் வெளிவரவில்லை. வெளி வராமல் பார்த்துக் கொள்ளப்பட்டது.

இதன் பின்னர் பிஜேபி அரசு ஆட்சிக்கு வந்தவுடன் தீவிரவாதி கர்னல் புரோஹிதை காப்பாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டன. அதில் ஒன்றாக புரோஹித் உளவுப் பணிகளுக்காகவே இவ்வாறு நடந்து கொண்டார், அதில் தவறில்லை அவர் அரசுப் பணியாகவே இதனை செய்தார் என்று பிராமாணப்பத்திரம் மத்திய அரசால் தாக்கல் செய்யப்பட்டது. (புரோஹிதுக்கு இன்று வரை அரசால் சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகிறது) எனினும் இந்த விஷயங் களை அவ்வளவு சுலபமாக அமுக்கி விட முடியாது. ஏனெனில் பல தகவல்களை ஏற்கனவே கர்கரே அவர்கள் ஆவணப்படுத்தி யிருந்தார்கள். அவை எப்படியும் உண்மையை உலகறிய செய்து விடும்.

எனவே தற்போது அவற்றை சத்தமில் லாமல் செய்யும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது. மாலேகான் வழக்கில் புரோகித் விசாரணை சம்பந்தப்பட்ட ஆவணங்களை அரசு தரப்பும் (தேசிய புலனாய்வு நிறுவனம்), குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பும் மட்டுமே பார்த்து கொள்ளலாமே தவிர பொது மக்க ளுக்கு இதனை பகிர்ந்து கொள்ளக்கூடாது என மாலேகான் 2008 வழக்கை விசாரித்து வரும் சிறப்புநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனவரிமாதம் பாதுகாப்பு துறை அமைச் சகம் நீதிமன்றத்தை அணுகி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் இரகசியம் பாதுகாக்க வேண்டும் ஏனெனில் அவை மிகவும் ஆபத்தானவை. தேச பாதுகாப்பு சம்பந்தப்பட்டவை. இவற்றை இவ்வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள மற்ற குற்றவாளிகளுடன் கூட பகிர்ந்து கொள்ளக் கூடாது என கோரியது.

பிணைக்காக கடந்தவருடம் நீதி மன்றத் தில் விவாதம் நடந்த போது முதன் முறையாக புரோஹித் இராணுவம் நடத்திய விசாரணை அறிக்கையை படிக்க அனுமதிக்கப்பட்டார். இதற்கிடையே பாதுகாப்புஅமைச்சகம் தணிக்கை செய்யப்பட்ட (தேசத்தின் பாது காப்பிற்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்பதால் சிலபகுதிகளை நீக்கம் செய்த) ஆவணங் களை நீதிமன்றத்திற்கு அளிக்க முன் வந்தது. புரோஹித் அந்த நேரத்தில் இந்த





ஆவணங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ள மாட்டேன் என்ற உறுதிமொழியை நீதிமன்றத்திற்கு அளித்தார். ஆனால் இவ் வழக்கில் இவருடன் குற்றம் சாட்டப்பட்ட ஓய்வு பெற்ற மேஜர் ரமேஷ் உபாத்யாய் என்பவரும் மற்ற குற்றவாளிகளும் நீதி மன் றத்தில் இதனை எதிர்த்தனர். தங்களுக்கும் இந்த ஆவணங்களை பார்க்கவும் படிக்கவும் அனுமதி வழங்க வேண்டும் என்று கோரி இருந்தனர்.

தற்போது நீதிமன்றம் இவர்களுக்கு அந்த அனுமதியை வழங்கியுள்ளது.

“The court has directed that while the prosecution and the accused can use the documents for the purpose of the current case, it cannot be shared with the public or the media,”

ஆனால் பொதுமக்களின் பார்வைக்கோ அல்லது ஊடகங்களின் பார்வைக்கோ இது பகிரப்படக்கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனை அரசு தரப்பு வழக்கறிஞர் அவினாஷ் ரசல் தெரிவித்தார். தேசிய புலனாய்வு நிறுவனம் என்.ஐ.ஏ.வும் இதில் தேசத்தின் பாதுகாப்பு கருதி இந்த ஆவணங் களில் இரகசியம் காக்கப்பட வேண்டும் என கோரி இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆக மொத்தத்தில் இந்த ஆவணங்கள் பொதுமக்களின் பார்வைக்கும் ஊடகங் களின் பார்வைக்கும் வந்து விடக்கூடாது என்பதில் அனைவரும் கவனமாக இருக்கின் றனர் என்பது தெளிவு. இந்த ஆவணங்கள் வெளிப்பட்டால் தான் இந்துத்துவா தீவிர வாதிகளின் உண்மை முகம் வெளிப்படும். ஆனால் தேசத்தின் பாதுகாப்பு என்ற போர்வையில் அவற்றை மூடி மறைக்கும் முயற்சி வெற்றி பெற்றதாகவே தெரிகிறது.

ஆதாரம் :http://indianexpress.com/article/india/malegaon-2008-secrecy-be-maintained-on-court-of-inquiry-papers-says-court-4704591

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

அன்பு கோல்டு

ANBU GOLD

SINCE : 1966

நகைகள் மீட்க / விற்க,
அதிக பணம் பெற!
உடன் பணம்

தொடர்புக்கு

9600848215
8667261343

# மறைமுகப் பேரடி (சுரண்டல்)

கடந்த சமீப காலமாக இந்தியா பரபரப்புக்கு பஞ்சமில்லாமல் பறந்து கொண்டிருக்கிறது. தற்பொழுது **GST** எனும் சரக்கு மற்றும் சேவை வரி எனும் சட்டம் பெரும் சத்தத்துடன் அமலுக்கும் வந்துள்ளது.

**GST** (சரக்கு மற்றும் சேவை வரி) என்பது நமது நாட்டின் ஒரு பகுதி யிலிருந்து இன்னொரு பகுதிக்கு எடுத் துச் செல்லும் சரக்கு மற்றும் சேவைகள் மீதான பன்முக வரிகளை ஒழுங்கு படுத்தி நாடு முழுவதும் ஒரே வரியை நடைமுறைப் படுத்துவதே **GST** ஆகும்.

இதில் தற்பொழுது என்ன பிரச்சனை என்றால் இந்தியா கூட்டாட்சி அமைப்பு டையதாகும். எனவே மத்திய, மாநில உற்பத்திக்கு ஏற்றவாறு வரிகள் இருக்கும். இந்த வரியை அனைத்தும் மத்திய அரசாங்கமே எடுத்துக் கொண்டால் மாநில அரசாங்கத்திற்கு வரிகள் மூலம் பெரும் வருவாய் தடுக்கப்படும். அனைத் திற்கும் மத்திய அரசாங்கத்தையே கை கட்டி ஏன் கையேந்தி அமைதியாக பிச்சையெடுத்து நிதி கேட்கும் நிலைமை வரும். ( பி.ஜே.பி. ஆட்சியில் சத்தமாக பிச்சை கேட்டால் கூட தேச விரோதிகள் என்று முத்திரை குத்திவிடுவார்கள்)

இதுமட்டுமில்லாமல் தற்பொழுது ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் பா.ஜ.க.வும் சரி, இதற்கு முன்னர் இருந்த காங்கிரசும் சரி தொழிற்முறை களையும், வளங்களையும் பன்னாட்டு மயமாக்குவதில் வரிந்து கட்டிக் கொண்டு நீயா, நானா என்றே மோதல் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

*1954* ஆம் ஆண்டு பிரான்சில்தான் GST எனும் வரியை அறிமுகப்படுத்தி னார்கள். தற்பொழுது 159 நாடுகள் பின் பற்றி வருகிறது. இவர்கள் பெரும்பாலா னோர்கள் இந்தியாவில் முதலீடு செய் கிறார்கள். செய்யவும் முனைப்பு காட்டு கிறார்கள். இவர்களுக்கு இங்குள்ள பன்முக வரி தலைவலியை ஏற்படுத்து கிறது. ஆதலால் தொடர்ந்து நெருக் கடியை ஏற்படுத்துகிறார்கள். ஆகையால் தான் *1986*-ல் பொது பட்ஜெட்டில்



மத்திய நிதியமைச்சர் விஸ்வநாத் பிரதாப் சிங் வரிகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று முன் மொழிந்தார். 2000 ஆம் ஆண்டு "வாஜ்பேய்" அறிக்கையில் "....???" எனும் வரி **GST** –க்கு முன்னோடியாக கொண்டுவரப்பட்டது.

பின்பு அதற்கடுத்த ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் பல முயற்சிகளைக் மேற்கொண்டு **GST**–யைக் கொண்டுவர பாடுபட்டது. ஆனால் அப்பொழுது **GST** –யை கொண்டு வரும்வரை பிரதானமாக எதிர்த்தது பா.ஜ.க. தான். அதிலும் குறிப்பாக தற்பொழுது இந்தியாவில் பிரதமராக நரபலி நரேந்திர மோடி அவர்கள் அப்பொழுது( 2013– ) குஜராத்தின் முதலமைச்சர் **GST** –யை கொண்டுவந்தால் குஜராத்திற்கு மட்டும் 14,000 கோடி இழப்பு ஏற்படும் என எதிர்மறையாக வாதிட்டு **GST** யைக் கொண்டுவருவதற்கு பெரும் தடையாக விளங்கினார். தடுத்தார் இப்பொழுது பா.ஜ.க. ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த பின்பு நடைமுறைப்படுத்தப்படுகிற சட்டங்களே வேறு!



## இந்து ராஷ்டிரம் அமைக்க முயற்சியா?

**GST** –யில் பன்னாட்டு நிறுவனங்களும், பெரும் பண முதலாளிகளும் தப்பிப்பார்களென்றும், ஏழை, குறு வியாபாரிகளும், சிறு முதலீட்டாளர்களும் பாதிப்படைவார்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை.

**GST**–5%,12%,18% மற்றும்28சதவீதமாக 4 முறைகளாக வரிகள் வசூலிக்கப்படுகிறது. பெரிய பெரிய முதலீட்டாளர்களுக்கு வசதியாக உள்ளது. ஆடிமபர போன்ற சொகுசு கார்களின் உற்பத்திக்கு மாநிலத்திற்கு வரி கட்ட தேவையில்லை.

■ தங்கத்திற்கு 2 லிருந்து 3% ஆக வரி ஏற்றப்பட்டுள்ளது. தங்கம் விலை ஏறும்.

■ கட்டுமானத்துறையில் 30–லிருந்து 28 ஆக குறைந்தாலும், அதற்கு பரவலாக பயன்படுத்தப்படும் அலுமினியத்திற்கு 28% வரி உயர்ந்துள்ளது.

■ ரப்பர்பொருட்களுக்கு18லிருந்து28% ஆக வரி உயர்ந்துள்ளது. இதனால் வாகனங்களின் உதிரிப் பொருட்களின் விலை கிடுகிடுவென உயரும்.

■ பா.ஜ.க.வின் முக்கிய செயல் திட்டமே ஒரே நாடு ஒரே அரசுதான். இதற்கு தடையாக உள்ளது.

■ இந்த கூட்டாட்சி மாநிலங்களின் ஆட்சிதான். அதனால்தான் பா.ஜ.க. வென்ற இடங்களில் முதலமைச்சர் உட்பட அந்த பகுதியில் பா.ஜ.க. இல்லாமல்எதுவும் (புரட்சி)பன்ன முடியாது. அமோகமாக நியமிக்கிறது.

■ அவர்களுக்கு எதிராக உள்ள மாநிலங்களின் உற்பத்தியை தடுக்கிறது. கோவையில் தயாரிக்கப்படும் கிரைண்டரின் உதிரிகள் தரமானதாக இருக்கிறதால்ஆகபிரபலம். ஆகவே 5% வரி மட்டுமே இருந்த இடத்தில் 28% உயர்ந்துள்ளது. பட்டாசுக்கு புகழ்போன சிவகாசி அங்கும் வரி 28% உயர்ந்துள்ளது. இதனால் தமிழ்நாட்டின் புகழ் உற்பத்திகள் அழியுமா? அழியாதா?

குறிப்பாக கேரளாவில் சிறு, குறு தொழில்கள் அதிகமாக உள்ளது. 5% மாக இருந்த வரி, 28% உயர்ந்துள்ளது. இதனால் கேரளாவில் இத்தொழில்கள் அழியுமா?

அழியாதா?

இதுமட்டுமல்ல வாசகர்களே சத்தமில்லாமல் இன்னொன்றும் இந்தியாவில் அரங்கேறி வருகிறது.

அதுதான் "இந்து ராஷ்டிரம்" 1925–ல்தான் **(RSS)** உருவானது. 2025–ல் நூறு வருடங்கள் முடியப்போகிறது. அதற்குள் ஒரே நாடு (இந்து ராஷ்ட்ரம்) ஒரே ஆட்சி **(RSS)** ஒரே சட்டம் (மனு தர்மம்) என்று ஓய்வுக்கு ஓய்வு கொடுத்து உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.




நாளை இந்துத்துவ தீவிரவாத இராணு வமும் **(RSS)** இந்திய இராணுவமும் இணைந்த இப்புரட்சியை .... ஆட்சியைப் பிடிப்பதற்கு ஒன்றுமில்லை. 2012–ல் காங்கிரஸ் ஆட்சி யிலே இந்திய இராணுவ தரைப்படையை டெல்லியை நோக்கி புரட்சி எற்படுத்த அனுப் பியது. **(RSS)** (ஆதாரம் : வைகறை வெளிச்சம் மாதஇதழ். மார்ச்–2012) (The TImes of India)

போன்சாலோ என்ற இந்து இராணுவப் பள்ளியிலிருந்து அதிக நபர்கள் இந்திய ராணுவத்தின் தலைமை இடத்திற்கு செல் கிறார்கள். இந்தியாவில் நடந்த பல குண்டு வெடிப்புகள் இவர்களால்தான் நடத்தப்பட் டது என்று ஆதாரத்துடன் தெரிந்தும், "போன்சாலோ" என்ற தீவிரவாத பள்ளியை இன்னும் தடை செய்யவில்லை இந்திய இராணுவ தலைமைக்கு தளபதியாக இருந்த "புரோகித்" என்பவனால்தான் இந்தியாவில் பல குண்டு வெடிப்புகள் நடந்தது.

இதன்மூலம் இந்து ராஷ்டிரம் அமைக்க இஸ்ரேல் உதவியுடன் செயல்பட்டு சதித் திட்டம் தீட்டி வீரமகன் "கர்கரே" எனும் நேர்மை மிகு அதிகாரியால் கண்டறியப்பட்டு இன்று சிறையில் உள்ள கம்பிகளை புரோகித் எண்ணிக் கொண்டிருப்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்.

கர்கரேவை விட்டு வைத்தால் இந்து ராஷ்டிரம் அமையாது என்று எண்ணி கர்கரேவை இந்தியன் உளவுத்துறையே சுட்டுக் கொன்றது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

**Source :** புரோகித் லேப்டாப்பில் இருந்தது என்ன? கர்கரேயை கொலை செய்தது யார்? வேர்கள் பதிப்பகம், மண்ணடி சென்னை.

1. ஆக புரட்சியை நாளைக்கு ஏற்படுத் தினால் மக்கள் கிளர்ச்சி செய்யக்கூடாதென்று "பணமதிப்புநீக்கம்"எனும்நடவடிக்கைகளால் மக்களை ஒண்ணுமில்லாத பிச்சைக்காரனைப் போல பொருளாதார நெருக்கடிக்கு தள்ளினார்கள்.

2. மாநிலங்கள் நாளை புரட்சி பண்ணும் போது தன்னை எதிர்க்க கூடாதென்று எநப எனும் வரி கொள்கை.. வரியை நம்பித்தான் மாநிலங்கள் செயல்படுகின்றன. இதன்மூலம் வருவாயை கருதுவதற்கேற்ப அரசு ஏற்படுத்து கிறது.

ஆக இவர்கள் (பா.ஜ.க.) நினைப்பது கருவூலம் இருந்தால்தானே தன்னை எதிர்ப் பார்கள். அதை இல்லாமலும், எதற்கும் தன்னிடமே மன்றாட வேண்டும் என்பதற் காகவே GST எனும் மறைமுகப் போரை தொடுத்துள்ளது பா.ஜ.க. **(RSS)**

ஆக இந்து ராஷ்டிராவின் புரட்சிக்கு மறை முகப்போர் இத்திட்டங்கள்தான்.

**– முல்லா உமர்**




# பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி

அதிகரித்து வரும் இந்துத்துவா அபாயத்தை எதிர் கொள்ள உள்ள வழிகளில் மிகச்சிறந்த வழி மாற்று மத சகோதரர்களுக்கு இஸ்லாத்தை எத்தி வைப்பது. கடைமடை மக்களுக்கு இஸ்லாம் சென்றடைவது.

அதனடிப்படையில் கடந்த **9.07.2017** அன்று பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி சென்னை, செரியன் நகரில் நடைபெற்றது. எல்லாப் புகழும் இறைவனுக்கே.

இந்நிகழ்ச்சியில் சிறப்புறையாக மௌலவி "இல்யாஸ் ரியாஜி" அவர்கள் "இஸ்லாத்தின் தன்மைகள்" குறித்தும் "இஸ்லாம் எப்படி மனிதனை பண்படுத்துகிறது" என்பது குறித்தும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதன் அவசியம் குறித்தும் பேசினார்கள்.

அடுத்ததாக தன்னுடைய வாழ்க்கையில் முன் பகுதியில் ஜாதிக் கொடுமைகளினால் வாடி வதங்கி பின்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட இஸ்லாமிய அழைப்புப் பணிக்காக இப்போது தன் வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்து பணியாற்றி வரும் அண்ணன் "ஜக்கரியா" பாய் அவர்கள் தன்னுடைய வாழ்வில் தான் சந்தித்த ஜாதி கொடுமைகளையும், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட நிகழ்வையும் பற்றி விரிவாக பேசினார்கள்.

இறுதியாக வைகறை வெளிச்த்தின் ஆசிரியரும், தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்டின் நிறுவனருமான "மு.குலாம் முஹம்மத்" அவர்கள் இஸ்லாத்திற்கு ஏன் வரவேண்டும் என்பதன் அவசியம் குறித்து விளக்கினார்கள்.

அம்பேத்கர் வாழ்க்கையில் இருந்து வெளி உலகிற்கு தெரியாத பல தகவல்களை எடுத்தியம்பினார்கள்.

"ஒரு முறை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஒரு நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்ட போது அவரிடம் என்ன பேச போகிறார்கள் என்ற தகவலை கேட்டார்கள் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள். தகவலை முழுமையாக எழுதி அனுப்பினார்கள் அண்ணல் அம்





பேத்கர் அவர்கள். நிகழ்ச்சி ஏற்பாட் டாளர்களுக்கு மிகப்பெரிய அவஸ்தை. ஏனெனில் அம்பேத்கர் அவர்கள் உரையில் இந்து மதத்தை கடுமையாக விமர்சித்து இருந் தார்கள்.

இந்த உரையில் ஏதாவது மாற்றம் செய்ய இயலுமா? என அம்பேத்கரிடம் நயமாக கேட்டனர் நய வஞ்சகர்கள். அம்பேத்கர் அவர்கள் உரையில் இருந்து ஓரெழுத்தையும் மாற்ற மாட்டேன் என மறுத்து விட்டார்கள். நிகழ்ச்சி ஏற் பாட்டாளர்கள் நிகழ்ச்சியையே நிறுத்தி விட்டார்கள். இது பின்னர் புத்தகமாக வெளிவந்தது.

இது போன்ற பல புத்தகங்களில் இருந்து பல்வேறு விஷயங்களை தெளிவாக எடுத்து கூறினார்கள் குலாம் முஹம்மது அவர்கள்.

பின்னர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களிடம் ஏதாவது கேள்வி கள் சந்தேகங்கள் உண்டா என கேட்ட போது எங்களுக்கு சந்தேகம் ஏதும் இல்லாதவண்ணம் நிகழ்ச்சியில் எடுத் துரைக்கப்பட்டது என கூறியது நிகழ்ச்சி யையும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் களையும் பேச்சாளர்களையும் உற்சாகப் படுத்தியது. அல்ஹம்துலில்லாஹ்.

பின்னர் மாற்றுமத சகோதரர்கள் தங்கள் கருத்துகளை எடுத்துரைத்தனர்.

இறுதியாக வருகைதந்த அனைவருக் கும் இஸ்லாம் கூறும் விருந்தோம்பலின் படி விருந்தளித்து நிகழ்ச்சி நிறைவுற்றது.







வந்திருந்த மாற்றுமத அன்பர்கள் அனைவருக் கும் ஹிதாயத் கிடைக்க வேண்டுமென துஆ செய்து கொள்வோம். இறைவன் ஏற்றுக் கொள்வானாக.



# முஸ்லிம் உலகில் நடந்து கொண்டிருப்பது என்ன?

முஸ்லிம்களே கலங்கி நிற்கின்றார்கள், இன்றைய முஸ்லிம் உலகில் நடப்பவற்றால் அதேபோல்தான் பொதுவாக உலக நிகழ்வுகளை கவனிக்கும் பொதுமக்களும்.

இன்றைய உலக நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால், அமெரிக்கா, அதாவது இன்றைய உலகின் ஒரே வல்லரசு, இந்த உலக நிகழ்வுகளை எப்படி வழி நடத்துகின்றது,

**அதன் லட்சியம் என்ன? திட்டங்கள் என்ன? என்பனவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்.**

இரண்டாவது உலகப்போருக்குப் பின் அமெரிக்கா உலக நாடுகளையும், அவற்றின் இயற்கைவளங்களையும்தன்கிடுக்கிப்பிடிக்குள் வைத்திட முயற்சி செய்து வருகின்றது. உலக நாடுகளின் ஆதிக்கம் ஆட்சி, தன் கைக்குள் இருந்திட வேண்டும் என்பது அதன் லட்சியம்.

1952 முதலே அமெரிக்கர்கள் "Red Threat" சிவப்பு அபாயம் என்றொரு பீதியை உருவாக்கினார்கள். ‘‘சிவப்பு அபாயம்’’ என்பது கம்யூனிசம் ஓர் அபாயம் என குறிப்பிடுவதாகும். இதைக்கொண்டு ‘‘கம்யூனிசம் உலகை தன் வசப்படுத்திட முயற்சி செய்கின்றது. அப்படி நடந்தால் மனிதர்கள் தங்கள் உரிமைகள் அனைத்தையும் இழந்துவிடுவார்கள்’’ என்று ஒரு பீதியை அமெரிக்கா பரப்பியது. 1979 முதல் 1988 வரை நடந்த ஆப்கானிஸ்தான் போரில் கம்யூனிசம் வீழ்ந்தது.

(அப்போது தினமணி மே–3, 1988, பக்கம் 4–இல் இப்படி எழுதியது ‘‘ஆப்கானிஸ்தானில் இராணுவ ரீதியாக மாத்திரமின்றி சித்தாந்த ரீதியாகவும், ரஷ்யாவுக்கு படுதோல்வி ஏற்பட்டிருக்கிறது’’ பி.எஸ் )

ஆப்கானிஸ்தானில் வாங்கிய அடிக்குப் பிறகு கம்யூனிச ரஷ்யாவும் எழவே இல்லை. அதன் பிறகு அமெரிக்கா உலகின் ஒரே வல்லரசு என்றானது.

இதனிடையே 1982 முதலே ‘‘இஸ்லாமிய அபாயம்’’ என்றொரு பீதியை அமெரிக்கர்கள் கிளப்பினார்கள். இந்த ஆண்டில்தான் ஜான் எக்ஸ்போசிட்டோ "John L. Exposito" என்பவர் "Voices of Resurgent Islam" ‘‘இஸ்லாமிய எழுச்சியின் குரல்கள்’’ என்றொரு ஆய்வறிக்கையை வெளியிட்டார்.

இதில் ‘‘இஸ்லாம் மீண்டும் தன் புகழையும் பெருமையையும் நிலை நாட்டிடும், எழுச்சி

நாள்களை நோக்கிப் பீடு நடைபோட வருகின்றது. அதைத் தடுத்தாக வேண்டும். இல்லையேல் அது உலகை ஆட்கொண்டுவிடும்'' என்றொரு பீதியை கிளப்பினார், பரப்பினார்.

*1987*–இல் அதே ஜான்எக்ஸ்போசிட்டோ இஸ்லாமிய அபாயம் உண்மையா? கற்பனையா? (Islamic Threat Myth or Reality 1991) என்ற இன்னொரு ஆய்வை நூலாக வெளியிட்டார். இந்த நூலில் இஸ்லாம் அமெரிக்காவின், கொள்கைகளுக்கும், அமெரிக்காவின் ஏகாதிபத்திய ஆசைகளுக்கும், ஒரு பெரும் சவாலாக இருக்கும் என்றார்.

தொடர்ந்து *1992*–இல் அமெரிக்காவின் வெளிவிவகாரத்துறை ஓர் ஆய்வுக் கட்டுரையை தன் அதிகாரப் பூர்வமான "Foreign Affairs" ''வெளிநாட்டு விவகாரம்'' என்ற பத்திரிகையில் வெளியிட்டது. உண்மையைச் சொன்னால் ஒரு போர் திட்டத்தை வெளியிட்டது. இந்தத் திட்டத்தை, சாமுவேல் பி. ஹண்டிங்டன் என்பவர்தான் வரைந்தெடுத்தார். அதற்கு The Clash of Civilizations and the remaking of world order எனப் பெயரிட்டார்.

அதாவது ''கலாச்சாரங்களின் மோதலும், புதிய உலகின் உருவாக்கமும்'' என்பதாகும். சாமுவேல்–பி–ஹண்டிங்டனின் திட்டப்படி, *2030* ஆம் ஆண்டில் அமெரிக்காவின் உலக ஆதிக்கம் நிலைபெற வேண்டும். அவரது கூற்றுப் படி Western Civilization is Civilization all other civilizations, are uncivilization and must be destroyed. அதாவது ''மேலைநாட்டு

மேற்கத்திய நாகரிகமே நாகரிகம் மற்றெல்லாம் அநாகரிகங்கள். ஆகவே அவற்றை அழித்தாக வேண்டும்''.

இதே ஆண்டில் "RAND Corporation" என்ற அமெரிக்கா ஆய்வு நிறுவனம் ஒரு ஆய்வறிக்கையை வெளியிட்டது. அது தனது ஆய்வறிக்கைக்கு Project for New American Century (PNAC) என பெயர் வைத்தது. இதன்பொருள் புதிய அமெரிக்கா நூற்றாண்டிற்கான திட்டம் என்பதாகும்.

*1997*–இல் சாமுவேல்–பி–ஹண்டிங்டன் தனது ஆய்வுகளை நூலாக வெளியிட்டார். ஆகவே இன்று உலக அரங்கில் நடந்து கொண்டிருப்பது Project for new American Century அமெரிக்க ஆதிக்கத்தின் பரவலுக்கான முயற்சிகள். ( போர்கள் ). அதற்கு மறு பெயர் The Clash of Civilizations and the remaking of the world order.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட மூன்றாம் நாள், அப்போதைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் Modern Crusade நவீன சிலுவை யுத்தம் என்றார்..

அதாவது *1095* ஆம் ஆண்டு முதல் *1147* வரை நடந்த சிலுவை யுத்தங்கள் வழியாகத் தான் அமெரிக்கர்கள் இன்னும் முஸ்லிம் உலகைப் பார்க்கின்றார்கள்.

அதேபோல் *2003* ஈராக்–ஐ ஆக்கிரமித்த போது ஈராக் இடம் அணு ஆயுதங்கள் இருக்கின்றன, சதாம் ஹூஸைன் எந்த நேரம் வேண்டுமானாலும் அமெரிக்காவை தாக்கிவிடுவார் என்றெல்லாம் பீதியை கிளப்பினார்கள்.

இப்படியெல்லாம் போர்ப் பிரகடனங்களைச் செய்துவிட்டு ஈராக் மீது குண்டுகளைப் பொழிந்தார். ஆண்டுகள் பல ஆகியும் ஈராக்கிலிருந்ததாகப் பீற்றப்பட்ட அணு ஆயுதங்களைக் கண்டுபிடிக்க இயலவில்லை. பின்னர் ஈராக்கில் அணு ஆயுதங்களே இல்லை என்ற உண்மைக் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது கேட்ட போது The Command is from Heven என்றார் அமெரிக்க அதிபர் புஷ். அதாவது ஈராக்–ஐ தாக்கிட வேண்டும் என்ற கட்டளை வானத்திலிருந்து வந்தது என்றார். அதாவது ஈராக்–ஐ தாக்கிட வேண்டும் என்பது ஆண்டவனின் கட்டளை என்றார் புஷ்.

*2004* ஆம் ஆண்டு ஜார்ஜ் புஷ் தான் ஆற்றிய அரசாங்க உரையில் This war will be fought for another 60 or 70 years என்றார். அதாவது முஸ்லிகளுக்கு எதிரான இந்த போர் இன்னும் 60 ஆண்டுகள் அல்லது 70 ஆண்டுகள் தொடரும் என்றார்.

இதை இப்போது ஜான் பெப்பர் John Feffer என்பவர் The Gusade 2.0 - சிலுவைப்போர். *2.0* என சொல்கின்றார். அதே நேரத்தில் இந்த சிலுவைப் போர் *2.0* –வில் அமெரிக்கா என்

னென்ன தகிடுத்தத்தங்களைச் செய்து கொண்டிருக்கின்றது என்பனவற்றையும் பட்டியல் போட்டுக் காட்டுகின்றார். (John Feffer : Crusade 2.0; The West's Resurgent war on Islam - 2012)

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் காலத்தில் அதற்குப் பெயர் GWOT : Global war on Terror. தீவிரவாத்திற்கு எதிரான போர் இங்கே Terror தீவிரவாதம் என்பதை இஸ்லாம் என எடுத்துக்கொள்ளவேண்டும். அதாவது நடந்து கொண்டிருப்பது war on Islam இஸ்லாத்திற்கு எதிரான போர்.

இஸ்லாத்தை தீவிரவாத மார்க்கமாக தொடர்ந்து காட்டுவதற்காக அமெரிக்கா 1995 முதலே உலகெங்கும் குண்டு வெடிப்புகளை நடத்தி வருகின்றது. பழியை முஸ்லிம்கள்மேல் போட்டு வருகின்றது. ஒக்கலஹாமா குண்டு வெடிப்பு – 1995 ஓர் எடுத்துக்காட்டு.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவும் அதற்கு பக்கத் துணையாக வந்த நேட்டோ நாடுகளும் தோல்வியடைந்தபோது பல அமெரிக்க வீரர்களை ஆப்கானிஸ்தான் போராளிகள் சிறை பிடித்தார்கள். அந்த அமெரிக்க வீரர்கள் அந்த போராளிகளிடம் we are sent not by the govern ment but by the churches எனக் கூறினார்கள்.

அதாவது "எங்களை அனுப்பியது அரசாங்கம் அல்ல, மாறாக எங்கள் தேவாலயங்கள்" என்றார்கள். ஆக நடந்துகொண்டிருப்பவை அமெரிக்காவின் ஆதிக்கத்தை நிலை நாட்டுகின்ற ஆக்கிரமிப்புப் போர்கள், இந்த சூழ்ச்சியில் தான் இன்றைய முஸ்லிம் உலகம் சிக்கி கொண்டிருக்கிறது. இந்த நாடுகளிளெல்லாம் அமெரிக்காவின் சதித் திட்டங்களை அதன் உளவுத்துறை CIA - யும் அதன் ராணுவமும் செயல்படுத்தி வருகின்றன.

இதில் கைகளாக சில பலவீனமான முஸ்லிம்களும். சில முஸ்லிம் நாடுகளும் செயல்படுகின்றன. இவை அமெரிக்காவின் வார்ப்பிலும் பாதுகாப்பிலும் இருக்கின்றன. Why We Lost. A General's Inide Account of The Iraq And Afganistan Wars. by Daniel P. Bolger இப்போதைய "கத்தர்" நாட்டு பிரச்சனை பல எடுத்துக்காட்டுகளில் ஒன்று.

ஆக இன்றைய இஸ்லாமிய உலகில் அமெரிக்கா நடத்திக் கொண்டிருப்பது ஒரு ஆதிக்க வெறியில் 1095 முதல் 1147 வரை நடந்த சிலுவைப்போர்களின் தொடர்ச்சி. இதில் வில்லன்களாக அன்று ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள், பின்னர் தாலிபான்கள், முல்லா உமர் தொடர்ந்து பின்லேடன், தொடர்ந்து சதாம் ஹுஸைன் இப்போது கிலாபத் ஆகியன காட்டப்படுகின்றன. அனைத்தையும், தொடங்குவதும் பின்னர் அவற்றைக் கொண்டே இஸ்லாமிய உலகை அல்லோலகல்லோலப்படுத்துவதும் அமெரிக்காவின் உலக ஆதிக்கம் என்ற இலக்கை நோக்கி நடக்கும் திட்டங்களின் பகுதிகள். இந்தக் கபளீகரங்கள் இன்னும் 50 அல்லது 60 ஆண்டுகளுக்குத் தொடரும் என்பது அவர்களின் போர்த் திட்ட அறிக்கை.

அமெரிக்காவின் இந்த திட்டங்கள், தாக்குதல்கள் இவற்றைப்பற்றிய செய்திகளை நமக்குத் தருபவர்கள் அமெரிக்கர்கள்தாம். நீங்கள் ஊடகங்களில் எதைப் பார்க்க வேண்டும், எதைப் படிக்க வேண்டும் என்பதை நிர்ணயிப்பவர்களும் அமெரிக்கர்கள்தான். ஆகவே அவர்கள் எதைப் பார்க்க வேண்டும் என விரும்புகிறார்களோ அதைத்தான் நீங்கள் பார்க்கின்றீர்கள். அவர்கள் எதைப் படிக்க வேண்டும் என நினைக்கின்றார்களோ அதைத் தான் நீங்கள் படிக்கின்றீர்கள். இதனை News Imperialism செய்தித்துறை ஏகாதிபத்தியம் என்கின்றார்கள்.

இப்பொழுது உலக நிகழ்வுகள் பற்றிய உண்மைகள் அவற்றின் பின்புலங்கள் இவை வாசகர்களாகிய நம்மை வந்து அடைந்திட காலதாமதம் ஆகலாம். ஆனால் நிச்சயம் வரும்.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை 152 வருடம் நீடித்த 9 சிலுவைப் போர்கள், மங்கோலியர்களின் தாக்குதல்கள், ரஷ்யாவின் தொடர் தாக்குதல்கள் நேட்டோ நாடுகள் உதவியுடன் அமெரிக்காவின் தாக்குதல்கள், இவற்றையெல்லாம் கடந்து, வளர்ந்து கொண்டிருக்கின்றது.

இனி வரும் நாட்களில் இஸ்லாம் இந்த சூழ்ச்சிகளைக் கடந்து வெற்றிகளைக் குவிக்கும், நிலைக்கும். இதையே வல்லோன் அல்லாஹ்வும் வாக்களித்துள்ளான். இன்ஷா அல்லாஹ்.



# மே 17 திருமுருகன் காந்தி குண்டர் சட்டத்தில் கைது!

மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப் பாளர் திருமுருகன் காந்தி அவர்கள் மெரினா கடற்கரையில் "மே 17" நினை வேந்தல் தினம் நிகழ்ச்சி நடத்தியதற்காக குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள் ளார். இலங்கையில் கொல்லப்பட்ட அப்பாவி தமிழர்களுக்கான நினைவேந்தல் கூட்டம் இது. அமைதியான முறையில் மெழுகுவர்த்திகளை கையில் ஏந்தி தங்க ளுடைய வேதனையை வெளிப்படுத்தியவர் களை தமிழக அரசு கைது செய்து குண்டர் சட்டத்தை ஏவி உள்ளது.

அவருடன் தமிழர் விடியல் கட்சியை சேர்ந்த டைசன், ஜெகன் என்கிற இளமாறன் மற்றும் அருண்குமார் அவர்களும் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**இவர்கள் மீது ஏன் கோபம் ?**

மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசிற்கு எதிராக பல்வேறு தளங்களில் தங்களுடைய கருத்துகளை ஆழமாக அழுத்தமாகபதிந்து வருபவர் திருமுருகன் காந்தி அவர்கள். ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் நச்சுகருத்துகளை லாவகமாக ஊடகங்களில் எதிர் கொண்டவர் காந்தி.

ஆர்.எஸ்.எஸ். அடிவருடிகள் பலர் இவரிடம் விவாத நிகழ்ச்சிகளில் தோற்று புறங்கண்டதை இவருடைய நிகழ்ச்சிகளை கண்டவர் அறிவர். பல்வேறு விவாத நிகழ்ச்சி களில் இவர் இந்துத்துவா பயங்கரவாதிகள் நடத்திய குண்டு வெடிப்புகளை குறித்தும் அவர்கள் ஈடுபட்ட தீவிரவாத செயல்கள் குறித்தும் "கர்கரேவை கொலை செய்தது யார்?" என்ற நூலில் இருந்து மேற்கோள் காட்டி பேசியுள்ளார். சென்னையில் நடந்த "26/11 விசாரணை நீதித்துறையும் மயங்கியது ஏன்?" என்ற நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துகளை பதிந்தவர் அவர்.

தமிழகத்திற்கு ஊறு விளைவிக்கும் பல்வேறு திட்டங்களை எதிர்த்து மத்திய அரசுக்கு எதிராக போராட்டங்களை நடத்தி யவர். மீத்தேன் வாயு திட்டம், ஜல்லிக்கட்டு தடை, காவிரி நீர் பிரச்சனை போன்றவை அதில் குறிப்பிட்டவை.

இதன் காரணமாக அவர் மீது இந்துத்துவாவாதிகள் கடுங்கோபத்தில்




இருந்தனர். மத்திய அரசு தமிழக அரசை இவருக்கு எதிராக ஏவியது.

**காவல்துறைக்கு எதிராக**

ஜல்லிக் கட்டு பிரச்சனை காரணமாக மத்திய அரசு இவர் மீது கடுங் கோபத்தில் இருந்தது. ஜல்லிக்கட்டு பிரச்சனையில் தமிழக மக்கள் மத்திய அரசின் துரோகத்தினை உணர்ந்து மத்திய அரசுக்கு எதிராகவும் பிரதமர் மோடிக்கு




எதிராகவும் கோஷங்கள் எழுப்பி போராடிய போது மத்தியஅரசின் ஏவலின் பேரில் தமிழக அரசு காவல்துறையை பொது மக்களுக்கு எதிராக ஏவியது. அமைதியாக போராடிய பொதுமக்களை காவல்துறை அடித்து துவம்சம் செய்தது. பொது சொத்துக்களை சூறையாடியது. போராட்டக்காரர்களுக்கு குடிக்க தண்ணீர் கொடுத்த மீனவ மக்களை வீடேறி சென்று அடித்து உதைத்தது.

அப்போது காயம்பட்ட மக்கள் மருத்துவம் செய்யவும் இயலாத நிலையில் இருந்தனர். ஏனெனில் காயம்பட்ட மக்களை சிகிச்சைக்கு வரும் போது கைது செய்தது காவல்துறை. எனவே சிகிச்சை எடுக்கவும் தயங்கினர் மீனவர்கள். அவர்களுக்கு மருத்துவ உதவிகள் செய்யப்படவேண்டும் என தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் நிர்வாகிகளிடம் திருமுருகன் காந்தி அவர்கள் கோரிக்கை வைத்த போது அவருடன் இணைந்து உடனடியாக மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதன் மூலம் நூற்றுக் கணக்கான மக்கள் பயன் பெற்றனர். (இம்முயற்சி பெரிதும் வரவேற்கப்பட்டது)

தாக்கப்பட்ட மக்களை நேர்காணல் காண வந்த ஊடகங்கள் இதனை செய்தியாக



வெளியிட்டன). மேலும் காவல்துறையால் தாக்கப்பட்ட மக்களை காவல்துறைக்கு எதிராக பிரமாணங்கள் தந்து வழக்கு தொடர காரணமானார் திருமுருகன் காந்தி. இவையெல்லாம் போதாதா? திருமுருகன் காந்தி மீது குண்டர் வழக்கு தொடர...

ஜனநாயக வழியில் அறப் போராட்டம் நடத்தியவர்களுக்கு ஜனநாயகம் துரோகம் இழைத்துள்ளது.

# நான் பட்கலை சேர்ந்த ஒரு மௌலவி இது போதும் கைது செய்ய..?

ஷபீர் கங்காவாலி என்பவர் பட்கலை சேர்ந்த ஒரு மௌலவி. இவர் ஏப்ரல் 2017ல் விடுதலை செய்யப்பட்ட போது அனைத்து ஊடகங்களும் கள்ள மௌனம் காத்தன. ஷபீருக்கு இப்போது 35 வயது.

மங்களூர் மஸ்ஜிதில் சிலகாலம் இமாமாக பணிபுரிந்துவிட்டு புனேவிற்கு இமாமாக வந்தார் ஷபீர். தன்னுடைய சகோதரி வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு மஸ்ஜிதில் உறங்கிவந்தார் ஷபீர். சகோதரியின் வீடு மஸ்ஜிதுக்கு அடுத்தவீடு. பணத்தை சேமித்து கர்நாடகா பட்கலில் உள்ள தன்னுடைய தாய்க்கு அனுப்பி வந்தார். 27 வயதில் அது தான் அவருடைய ஒரே நோக்கமாக இருந்தது.

நவம்பர் 26 2008ல் மும்பை தாக்குதல் நடந்தது. ஷபீரும் எல்லாரையும் போல் செய்திகளை பார்த்துகொண்டிருந்தார். நவம்பர் 30ம் தேதி 20க்கும் மேற்பட்ட காவலர்கள் அவரை கைது செய்ய வந்துள்ளதாக சிலர் கூறினர். அவர் பயந்து கதிகலங்கி போனார், வந்தவர்கள் யாரும் சீருடையில் இல்லை. பார்வையிலேயே அவர்கள் உள்ளூர் காவலர்கள் இல்லை என்பது தெள்ளத் தெளிவாக தெரிந்தது. அவர்களுடன் போவதைத் தவிர ஷபீருக்கு வேறு வழியில்லை.

அவர் பட்கலை சேர்ந்த மௌலவி. ஒரு மஸ்ஜிதின் இமாம். கைது செய்யப்பட்டுள்ளார் என்பதே அவர் மிகப்பெரிய தீவிரவாதி என செய்திகளில் வர போதுமானதாக இருந்தது. அடுத்தநாள் செய்தி நிறுவனங்கள் அவர் எவ்வளவு பெரிய தீவிரவாதி என போட்டி போட்டுக்கொண்டு செய்திகளை வெளியிட்டன.

தீவிரவாத தடுப்புப் படையினர் அவரை தினமும் சித்ரவதை செய்தனர். ஒருமாதம் அவரை சட்ட விரோதமாக காவலில் வைத்து சித்ரவதை செய்தனர். கடைசியாக அவரை அதிகாரபூர்வமாக கைது செய்ததாக அறிவித்தனர். குற்றப் பத்திரிகையில் அவரை தீவிரவாத செயல்களை நிறைவேற்றுவதற்காக கள்ளப்பணத்தை வைத்திருந்ததாக குறிப்பிட்டிருந்தனர்.

அவருடைய சகோதரிகளின் கணவர்களும் கைது செய்யப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டனர். பின்னர் விடுவிக்கப்பட்டனர். அத்தோடு அவர்கள் ஷபீரோடு உள்ள தொடர்பை துண்டித்துக் கொண்டனர். இதற்காக நான் அவர்களை கோபித்துக் கொள்ள முடியாது என கூறுகிறார் ஷபீர்.

இந்தியன் முஜாஹிதீன் இயக்கத்தை சேர்ந்த யாசீன் பட்கலுக்கும் ரியாஸ் பட்கலுக்கும் இவருக்கும் தொடர்பிருப்பதாக முடிச்சு போட்டு பெங்களூர் சின்னசாமி ஸ்டேடியத்திற்கு வெளியில் நடந்த குண்டு வெடிப்பில் இவரை சேர்த்து விட்டனர். ஆனால் சம்பவம் நடந்த போதோ இவர் சிறையில் இருந்தார். அதை கருத்தில் கொண்டு இவரை நீதிமன்றம் விடுதலை செய்து விட்டது.

ஜூன் 14 2010ல் இவர் ஜிஹாதி இலக்கியங்களை பரப்பி வருவதாக யு.ஏ.பி.ஏ சட்டத்தின் கீழ் மீண்டும் கைது செய்யப்பட்டார். 2016ல் இதே வழக்கில் கைது செய்யப்பட்ட 4 பேருக்கு பிணை வழங்கப்பட்டது. ஆனால் இவருக்கு பிணை மறுக்கப்பட்டது. இவர் உச்சநீதிமன்றத்தை நாடினார். உச்சநீதிமன்றம் இவருக்கு எதிராக

எந்த ஆதாரமும் இல்லை என்பதை அறிந்து ஒரு வருடத்திற்குள்ளாக தீர்ப்பு வழங்க வேண்டும் என்று மங்களூர் மாவட்ட நீதி மன்றத்திற்கு உத்தரவிட்டது. இறுதியாக இவர் நிரபராதி என ஏப்ரல் 2017ல் மங்களூர் மாவட்டநீதிமன்றம் விடுதலை வழங்கியுள்ளது.

அவரை நிரபராதி என்று நீதிமன்றம் கூறி விட்டபின்னரும் அவருடன் சகஜமாக பழக யாரும் விரும்பவில்லை. யாரும் அவருக்கு வேலை வழங்கவும் தயாராக இல்லை. அவர் இனி சோற்றுக்கு வழியில்லாமல் பிச்சை எடுப்பதை தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு அரசு தள்ளி விட்டது.

செய்திஆதாராம் : http://twocircles.net/2017jun19/411620.html

# கேரள பிஜேபி இளைஞர் அணி தலைவர் கள்ளப் பணத்தை புழக்கத்தில் விட்டதற்காக கைது



ராகேஷ் எழச்சேரி என்பவர் பாரதிய யுவ மோட்சா என்ற பிஜேபி இளைஞர் அணியின் தலைவர். இவர் கருப்பு பணத்திற்கு எதிராக போராடுவதாக தொடர்ந்து நாடகம் நடத்தி வந்தார். இந்நிலையில் இவரை கேரள மாநிலம் திருச்சூரில் ஒன்றரை லட்ச ரூபாய் கள்ளப் பணத்துடன் கேரள காவல் துறையினர் கைது செய்தனர்.

காவல் துறையினரின் அறிக்கையின்படி ராகேஷ் மற்றும் அவருடைய சகோதரரும் இந்த கள்ள நோட்டுகளை அச்சடித்து புழக்கத்தில் விட்டுள்ளனர். இதற்காக பயன்படுத்திய உபகரணங்களை அச்சடிக்க பயன்படுத்திய மை போன்றவற்றை காவல்துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் அவருடைய வீட்டில் இருந்து அச்சடித்த 2000 ரூபாய் நோட்டுகளும் கைப்பற்றப் பட்டன. இந்நோட்டுகளை அவர்கள் உள்ளூரில் கடைகளிலும் பெட்ரோல் பங்குகளிலும் கள்ள நோட்டுகளை மாற்றியுள்ளனர்.

கருப்பு பணத்திற்கு எதிராக போராடுகிறோம் என்று காட்டிக் கொள்ளும் தேசபக்தியாளர்களின் உண்மை முகம் வெளிப்பட்டுள்ளதாக முகநூலில் வைரலாக இச்செய்தி பரவிவருகிறது.

http://www.indiatimes.com/news/india/kerala-bjp-youth-leader-who-campaigned-against-black-money-busted-in-fake-currency-racket-324401.html

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor **M. GULAM MOHAMED,** Printed by M. Gulam Mohamed at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.